Free Circulation Germany-England மணி 70 - ஓசை 284 வைகாசி . May. 2020

# வெற்றிமணி

Vettimaniy
ESTD 1950
Successful Publishing 25 Years IN EUROPE
பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A








COVID-19

## வருமுன் காப்போம் !

Dr.IN

அனைவருக்கும்
எங்கள் மேதின
வாழ்த்துகள்

## புதுமைப் பெண்கள்





## முகக்கவசம் நாகரீகத்தின் அடையாளமாகிறதா?



மாதவி

# நான் வில்லனாக இருந்த சில கணங்கள்



மனவழுத்தத்தை குறைக்கவும், சூரியன் கதிர்கள் எமது உடலில் சற்று பட்டுத்தெறிக்கவும்,சுத்தமான காற்றை சுவாசிக்கவும் சிறந்த பல நாடுகளைத் தேர்ந்தெடுத்து விடுமுறைக்குச் செல்வோம்.

ஒரு வருடம் திட்டமிட்டு ஒருவாறு ஒரு நாட்டுக்கு விடுமுறைக்குப் போனால் முதல் நிம்தியைக் கெடுக்கவென்றே முன்வந்து வழி மறிப்பது வழிகாட்டிகள்தான். இந்த வழிகாட்டிகளின் தொல்லை மேற்கு நாடுகளைவிட இந்தியா இலங்கை பாங்கொக், கம்போடியா என இந்நாடுகளில் நம்மைத் தலைதெறிக்க ஓடவைக்கும். நாம் விரும்பி கேட்பது வேறு. அவர்களாக வந்து தம்மைத் திணிப்பது வேறு. ஒரு பனைமரத்திற்கே விளக்கம்சொல்லவும் அது உள்ள இடத்தைக் காட்டவும் கம்போடியாவில் பத்துபேர் முன்வந்து நிற்பார்கள்.

தாஜ்மகாலுக்குப் போனால் நாம் அரச வழிகாட்டி, உங்களது ரிக்கற்றுடன் உங்களுக்கு அரசாங்கத்தின் வழிகாட்டி இலவசமாக தரப்படுகிறது, என்று கூறி எமக்கு ரிக்கற்றையும் எடுத்துத் தந்து நம்முடன் வருவார்கள்;. வந்து இதனைக் கட்டியது சாஜஹான் என்பார். பின் கதையை மெல்ல வேறு பக்கம் திருப்புவார். எமக்கு தரும் ஊதியம் பற்றாது கொஞ்சம் எனக்கு தரவேண்டும் என்பார். பதில் ஏதும் நாம் சொல்லத்தேவை இல்லை. அவர் எம்மிடம் கறப்பது என்று முடிவெடுத்துவிடுவார். எவ்வளவு கறப்பது என்பதை எம்மிடம் இருந்து, நாம் கதைப்பதை வைத்தும், சில தூண்டில்களை எமக்குப்போட்டும் அறிந்து கொள்வார். இன்னும் கொஞ்சம் ஏமாந்து அவர் கையில் ஒரு படம் எடுத்துவிடுங்கள் என்று கைத்தொலைபேசியைக் கொடுத்தால் அதற்கும் ஒரு விலை போட்டு இறுதியில் காசைக் கறப்பார். வழிகாட்டி தனது வேலை முடிந்ததும் முன்பு எம்முடன் கதைக்கும்போது இருந்த பணிவு காணாமல் போய்விடும். இவ்வளவு தாருங்கள் என்று சொல்வார். நாம் விரும்பியோ விரும்பாமலோ கொடுத்துத் தொலைப்போம்.

பின்பு பிறதொரு இடத்தில் வேறு ஒரு வழிகாட்டி வருவார். அட இவர் நல்ல மனிதன் என்று எண்ணி நாமாக அவருக்கு ஏதும் கொடுக்கவேண்டும் என்று முடிவெடுத்தால், அவர் முன்னையவரை விட கெட்டவராக இருப்பார்.

இது வழிகாட்டிகள் வழியெங்கும் எமக்குத் தரும் அளெசகரியங்களைச் சொல்லவே குறிப்பிட்டேன்.

இப்படிப் பலரைக்கண்ட எனக்கு, எங்கு போனாலும் என்னை முதல் அணுகும் மனிதர்மீது கவனமாகவே இருப்பேன்.

இந்த விடுமுறை இலங்கை செல்வது என்று முடிவானது. யாழ்ப்பாணம் நாம் பிறந்த இடம். கொழும்பில் படிக்கும் காலம் படிக்கவே நேரம் சரி. அதற்குத்தான் காசும் சரி. பல நேரங்களில் பஸ்சிலும் ஏறுவதில்லை. நடராசாதான். 50 சதத்திற்கு கச்சான் கடலையை வாங்கிக்கொண்டு ஒவ்வொரு மின்விளக்கு கம்பத்துக்கு ஒரு கடலை வீதம் சாப்பிட்டுக் கொண்டு எங்கள் இருப்பிடம் செல்வோம். அதனால் கொழும்பைச் சுற்றிக்கூட அதிகம் பார்க்கவில்லை. எனவே இம்முறை கொழும்பில் இருந்து 70 மைல் தொலைவில் உள்ள பெந்தோட்டைக்குச் சென்றோம். நல்ல மணல் கற்கள் இல்லாத கடல் என்று அப்பொழுது எம்முடன் படித்த பெந்தோட்டையைச் சேர்ந்த சிங்கள மாணவிகள் சொல்வார்கள். நாம் எமக்குத் தெரிந்த கீரிமலை சுப்பர் என்று சொல்லிப்போட்டு கதையை முடித்துவிடுவோம்.

அழகான விடுதி. இரவு நன்கு தூங்கிவிட்டு காலை



எழுந்து கடற்கரையில் சற்று நடந்துவிட்டு வருவோம் எனப் புறப்பட்டால், எமது விடுதிக்கும் கடற்கரைக்கும் இடையே மருதானையில் இருந்து காலிக்கு செல்லும் புகையிரதப்பாதை உண்டு. அதனைக் கடக்கவேண்டும். நானும் மனைவியும் தண்டவாளத்தின் இருபுறமும் பார்த்துக் கடக்க முயல, நம் எதிரில் ஒருவர் சிரித்த முகத்துடன் நின்றார். சிரிப்பு மட்டுமல்ல அப்படியே பின் நகர்ந்து தண்டவாளத்தில் நின்று கொண்டு வாருங்கள் வாருங்கள் என்று சிங்களத்தில் சொன்னார். கடலைக் காட்டுகிறார்.

04 ஆம் பக்கம் பார்க்க...






வெற்றிமணி

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்

ஓசை : 284



ஆரம்பம்: 1950

ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
( முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன். பரமானந்தர்
வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
'ஓவிக்கலைவேள்'
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன் B.F.A
Chief Edito:
Dr.M.K.S.Sivakumaran B.F.A

Brinker Höhe 13
58507 Lüdenscheid
Germany
Tel: +49 01631992333

e-mail: vettimaniy@hotmail.com

"வெற்றிமணிமொழி'
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது

Vettimaniy Ltd
Company No: 8876276

# எதிர்க்கட்சிகள் இணைந்து காய் நகர்த்தல்; பாராளுமன்றம் மீண்டும் கூட்டப்படுமா?

**கொழும்பிலிருந்து**
**ஆர்.பாரதி**

கொரோனா தொற்றுக்கு மத்தியில் நிச்சயமற்ற ஒரு வாழ்க்கையை நடத்திவரும் இலங்கை மக்களை மற்றொரு அரசியல் பிரச்சினை மேலும் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது. பாராளுமன்றம் கலைக்கப்பட்டுள்ள நிலையில், பொதுத் தேர்தல் எப்போது நடைபெறும் என்பது கேள்விக்குறியாகியிருக்கும் நிலையில், எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து 'கலைக்கப்பட்ட பாராளுமன்றத்தை உடன் கூட்டுங்கள்' என்ற கோரிக்கையை முன்வைத்திருக்கின்றன. தனியெபருவராக 'தம்மிஷ்டப்படி' ஆட்சியைக் கொண்டு செல்லலாம் என பின் தலைவர் இரா.சம்பந்தன் ஆகியோர் ஞாயிறு காலை ஒப்பமிட்டனர். முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸா மற்றும் அவரது அணியில் உள்ள கட்சித் தலைவர்களான ரவூப் ஹக்கீம், மனோ கணேசன், ரிஷாத் பதியுதீன், திகாம்பரம், சம்பிக்க ரணவக்க ஆகியோர் ஞாயிறு மாலை அதில் கையயாப்பமிட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஜே.வி.பி. இக்கூட்டு அறிக்கையில் மற்றக் கட்சிகளுடன் சேர்ந்து ஒப்பமிடாவிட்டாலும் இதே போன்ற தனி அறிக்கையில் ஒப்பமிட்டு, அந்த முயற்சியில் தானும் இணைந்து கொள்கிறது.

முனைய மாட்டோம். அரசாங்கத்தின் எந்தச் சட்டபூர்வ செயற்பாட்டுக்கும் தடங்கல் விதிக்கமாட்டோம் என்று நாட்டு மக்களுக்கு உறுதி கூறுகின்றோம்' என்று எழுத்தில் எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் எல்லோரும் ஒப்பமிட்டுள்ள இந்தக் கூட்டறிக்கை உறுதி கூறுகின்றது. கலைக்கப்பட்ட பாராளுமன்றத்தை மீண்டும் கூட்ட வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தை இது ராஜபக்ஷக்களுக்கு அதிகப்படுத்தியிருக்







எதிர்பார்த்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிரணியின் இந்த ஒற்றுமை பலத்த அடியாக விழுந்திருக்கின்றது.

பாராளுமன்றத்தில் அரச தரப்புக்குப் பெரும்பான்மை இல்லாததுதான் அதனை மீளக்கூட்டுவதற்கு அரசாங்கம் தயங்கியமைக்குப் பிரதான காரணம். பாராளுமன்றத்தில் நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டிய நிலை இதனால் ஏற்படலாம் என அரசு அஞ்சியது. அரசாங்கத்தின் இந்த அச்சங்களுக்குப் பதிலளிப்பதாக, எதிர்க்கட்சிகள் அனைத்தும் இணைந்து கூட்டாக ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள அறிக்கை உள்ளது.

இது தொடர்பான கூட்டு அறிக்கையில் ஐ.தே.கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்

'நாட்டில் ஏற்பட்டுள்ள பேரிடரை அதனால் ஏற்பட்டுள்ள சவாலை முறியடிப்பதற்கு ஜனாதிபதிக்கு எமது பொறுப்புணர்வு கலந்த ஒத்துழைப்பை வழங்குவதற்கு நாம் கடமைப்பட்டிருக்கின்றோம். இந்தப் பேரிடர் மத்தியில் நாட்டினதும் மக்களினதும் நன்மை கருதி ஒரு குறுகிய கால அரசியல் நிகழ்ச்சி நிரலைத் தவிர்த்து விட்டுச் செயற்படுவது எமது பொறுப்பு. அதற்கு நாம் தயாராக இருக்கின்றோம்' என இந்த அறிக்கையில் எதிர்க்கட்சிகள் உறுதியளித்துள்ளன.

'நாட்டில் ஆட்சியானது முறையாகவும், சட்டபூர்வமாகவும் அரசமைப்புக்கு உட்பட்டதாகவும் அமைவதற்காக நாடாளுமன்றத்தில் அரசாங்கத்துக்கு ஆதரவு கொடுக்க நாம் தயார். அரசைக் கவிழ்க்க

கின்றது. ஒரு மாதகாலத்துக்கும் மேலாக வீடுகளுக்குள் முடங்கிப்போயுள்ள மக்கள் மத்தியில் இப்போது இரண்டு கேள்விகள்தான் பிரதானனமாக எழுகின்றன. முதலாவது கொரோனா எப்போது முடிவுக்கு வரும்? இரண்டாவது கலைக்கப்பட்ட பாராளுமன்றம் மீண்டும் கூட்டப்படுமா? என்பனதான் அந்தக் கேள்விகள். இரண்டாவது கேள்விக்குக் காரணம், பொதுத் தேர்தலை நடத்தக்கூடிய சூழ்நிலை இப்போது இல்லை என்பது.

பாராளுமன்றத் தேர்தலை எப்படியாவது மே மாத இறுதிக்குள் நடத்தி முடித்துவிட வேண்டும் என்பதற்காக ஏப்ரல் 20க்குள் கொரோனா முடிவுக்கு

28 ஆம் பக்கம் பார்க்க...



# நினைவுகள் துணையாக

## பொலிகையூர் ரேகாவின் கவிதை நூல் வெளியீடு...

சாந்தினி துரையரங்கன்

08.02.2020 அன்று வெற்றிமணி பத்திரிகை ஆசிரியரின் தாயார் அமரர் நவநிதியம் சுப்பிரமணியம் அவர்களின் 100 வது பிறந்த தினத்தினை முன்னிட்டு அன்னையின் அரங்கில் இடம்பெற்ற. புதுமைப் பெண்கள் 2020.

இவ்விழாவை திறம்பட நடாத்திக்கொண்டிருக்கும் வெற்றிமணியின் ஆசிரியர் மு.க.சு. சிவகுமாரன் அவர்களே, பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் சுபாகினி அவர்களே, அவையின் கண் வீற்றிருக்கும் சான்றோர் பெருமக்களே, பெரியோர்களே, சிறுவர் சிறுமிகளே அனைவருக்கும் எனது மாலை வணக்கம்.

பெண்கள் தினத்தை முன்னிட்டு பெண்கள் முன்னிலைப்படுத்தி கொண்டாடும் இவ் விழாவில் தன் வெற்றிமணியின் 25வது வெளியீடாக வெளிவந்த பொலிகையூர் ரேகா அவர்களின் நினைவுகள் துணையாக என்ற கவிதை நூலினை உங்கள் முன் அறிமுகப்படுத்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இந் நூலினை எழுதியவர் வடமராட்சி பகுதியில் பொலிகண்டி என்ற பிரதேசத்தை சேர்ந்தவர். அவர் தற்போது இந்தியாவில் வசித்து வருகின்றார். இவர் முதுகலை வணிகவியல், வணிக ஆய்வியல,; முதுகலை




வணிக நிர்வாகவியல், வணிக நிர்வாக ஆய்வியல் போன்ற பட்டங்களை தன்னகத்தே கொண்டவர். உதவிப் பேராசிரியராக வேலை செய்து வருகின்றார். குருதிக் காடும் குழலிசையும் என்ற கவிதை தொகுதி, மனிதர்கள் காத்திருக்கின்றார்கள் என்ற சிறுகதை தொகுதி, சங்க இலக்கியங்களில் காந்தள் என்ற ஆய்வு நூல் போன்றனவும் இவரின் படைப்பு இலக்கியங்களாகும்.

ஒரு ஆற்றின் நீரோட்டமானது அழகாவும், சலனமின்றியும் ஓடுவது போல இந் நூலிலுள்ள கவிதைகள் ஒரு பெண்ணின் உணர்வுகளை சத்தமின்றி அழகாக சொல்லி நிற்கின்றன.

இந்நூலின் அட்டைப்படமானது அதன் உள்ளடக்கத்தை உருவகப்படுத்தி நிற்கின்றது. பெண்மைக்குரிய குணங்களையும் கொண்ட ஒரு பெண்ணின் உணர்வுகள் மற்றும் அவளது குணவியல்புகளை பிரதி



பொலிகையூர் ரேகா

பலிக்கும் முகமாக பெண் என்ற வகையிலே இலகுவான புரிதலுடன் இதனைப் படைத்திருப்பது இந் நூலாசிரியரின் திறமையாகும்.

இக் கவிதைகளைப் படிக்கும் ஒவ்வொருவரும் அதனுடன் தம்மை இலகுவாக இணைத்துக் கொள்ள முடியும். காதலில் உள்ள ஒருவரின் நினைவுகளை மிக இலாவகமான சுருக்கமாக கூறுகின்ற மொழி நடை தனியழகு. ஆங்கில வார்த்தைகள் கலக்காமல் தான் நினைத்த எண்ணங்களை பதிவு செய்தமை இன்னொரு சிறப்பு. நான் இரசித்த ஒரு கவிதையில் 'நினைவுகள் எனத்தலைப்பிட்டு தூக்க மாத்திரையையும் கூட எனக்குள்ளே தூங்க வைத்துவிட்டுவிழித்துக் கிடக்கின்றன உன் நினைவுகள்!

ஏல்லோருக்கும் விளங்கக்கூடிவாறு மிக எளிமையாக புதுக்கவிதை படைத்திருக்கும் இச் சகோதரிக்கு எனது மனம் நிறைந்த வாழ்த்துகள். அழகு என்ற கவிதையில் காதலின் அழகினை வடித்துள்ளார் இதனை நீங்கள் படித்துபார்க்கும் போது அனுபவிப்பீர்கள். வெறுமையோடு, என் அதிசயம், உளப்பறவை, கழியும் பொழுதுகள்.. போன்ற கவிதைகளும் என்னை நன்றாக கவர்ந்த கவிதைகளாக அமைந்துள்ளன. 65 கவிதைகள் இன் நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதனை பெற்று நீங்கள் சுவைத்து மகிழ்ந்து எழுத்தாளரை உற்சாகப்படுத்த வேண்டும் என வேண்டிக் கொண்டு இச் சந்தர்ப்பத்தினை தந்த வெற்றிமணி ஆசிரியருக்கும், கௌசி சிவபாலன் அவர்களும் எனது நன்றிகளை கூறி விடைபெறுகின்றேன் நன்றி வணக்கம்.

---

02 ஆம் பக்கத் தொடர்ச்சி...

அங்கு படுத்திருந்து சண்பார்த் எடுக்க கட்டில்கள் போடப்பட்டுள்ளது அதனையும் காட்டுகிறார். பின் நம்மை வரும்படி முகத்தால் அழைப்பு விடுக்கிறார்.

கடல் காட்டவும் வழிகாட்டியா. நாம் எமக்கு அவரது வழிகாட்டல் தேவை இல்லை என்பதுபோல் அவரை பார்ப்பதை தவிர்த்துக் கொண்டு தண்டவாளத்தைக் கடந்து சென்றோம். அங்கு வெளிநாட்டவர்கள் பலர் முதல் முறையாக சூரியனைக்காண்பது போல் அண்ணாந்து படுத்திருந்தனர். நாம் ஒரு மணி நேரம் கடற்கரையில் நடந்துவிட்டு காலை உணவுக்காக அதே பாதையால் விடுதி திரும்பினோம். அதே தண்டவாளத்தில் மீண்டும் அவர், நின்று எம்மைப் பார்த்து சிரித்துக்கொண்டு வரவேற்றார். அட அவர் நம்மை விடுவதாக இல்லை என மனதுக்குள் எண்ணிக்கொண்டேன்.

தண்டவாளத்தைக் கடந்து ஒரு 5 நிமிடத்தில் புகையிரதம் வரும் சத்தம் கேட்க, எனக்கு அவரது உதவி தேவைப்பட்டது. அந்த அழகான புகையிரதக்காட்சியை ஒரு முறை எம்முடன் சேர்த்து படம் எடுத்துவிடும்படி கேட்டேன். அவர் உடன்



மறுத்துவிட்டார். எனக்கு புரிந்தது. அவர் தன்னை வழிகாட்டியாக ஏற்காத கோவத்தில்தான் இப்படி மறுக்கிறார் என்று. மறுகணம் அவர் சில்வா என்று அருகில் உள்ள ஒரு தொழிலாளியைக் கூப்பிட்டு இவர்களைப் படம் எடுத்து விடும்படி கூறினார். அவரும் எடுத்துவிட்டார்.

பின் நாம் உணவு உண்ண சென்றோம். அங்கு இருந்து பார்த்தால் கீழே தண்டவாளமும் பக்கத்தில் அவரும் நிற்பது நன்றாகத் தெரிந்தது. வெளிநாட்டு இளம் சோடிகள் இருவர் அங்கு செல்ல உடன் சிரித்தபடி அவர் மீண்டும் அவர்கள் அருகில் வருகிறார். சரி அவர்கள் இவரிடம் மாட்டிக்கொண்டனர் வழிகாட்டப்போகிறார் என்று எண்ணிக்கொண்டேன். அவர் சிரிப்பைக் குறைக்கவில்லை. அதே புன்னகையுடன் தண்டவாளத்தில் நின்று அவர்களை வரவேற்றார். அவர்களை அவர் பின்தொடரவில்லை. அருகில் இருந்த ஒரு கதிரையில் அமர்ந்தார். அதில் ஒரு கொப்பியும் இருந்ததது. அதில் ஏதோ எழுதினார். எனக்கு ஒன்றும் புரியவில்லை. காலை உணவு உண்டதும் உடன் இறங்கி அவரிடம் சென்று கேட்டேன். நீங்கள் வழிகாட்டியா? என்று. அவர் இல்லை நான் இங்கு சுற்றுலாவாசிகள் தாண்வாளத்தைக் கடப்பதற்கு அவதானிக்கும் வேலை செய்கின்றேன். ஒவ்வொருவரும் தண்டவாளத்தைக் கடக்கும் போது அவர்களது உயிர் என் கையில். அதனால்தான் நான் நீங்கள் படம் எடுக்கச் சொல்லும்போதும் வேறு ஒருவரிடம் கொடுத்தேன். விபத்துக்கள் ஒரு செக்கன்னில்தான் நிகழ்கின்றது. படம் எடுக்கும் அந்த விநாடியில் நான் எனது கவனத்தை இழந்துவிடுவேன் என்று தனது கடமை உணர்வை சொன்னபோது. என் முகத்தில் யாரோ ஓங்கி அறைவதுபோல் இருந்தது.

அது மட்டுமல்ல அவர் பேசிக்கொண்டே அருகில் இருந்த 3 சமாதிகளைக் காட்டினார். இந்த இடத்தில் புகையிரதம் மோதி இறந்தவர்களது சமாதி அது. நான் சம்பளத்திற்கு இங்கு வேலை செய்யவில்ல. நான் ஓய்வுபெற்ற தபால் ஊழியர். உணவு மட்டும் தருவார்கள். எனது ஆத்ம திருப்திக்கு வேலை செய்கின்றேன் என்றார். அவரது கையில் 200 ரூபாவை வைத்தேன். வெட்கப்பட்டுக்கொண்டார். மாத்தையா எப்பா என்றார். ஒரு கணம் நான் அவரை கெட்டவனாக எண்ணிய என் மனம் கூனிக் குறுகியது. எனக்கு சிங்களம் புரிந்தது. அதனைவிட அவரது உயர்ந்த மனம் நன்றாகவே தெரிந்தது. இப்போதும் அதே சிரிப்புடன் விடைகொடுக்கிறார். இப்போது இந்தச்சிரிப்பு எனக்கு ஒரு வழிகாட்டியாக அமைந்தது. இருந்தாலும் சூழல் என்னை மீண்டும் ஒரு இடத்தில் வில்லனாக மாற்றலாம்.

# முகக்கவசம் நாகரீகத்தின் அடையாளமாகிறதா?



## முகங்களின் முகவரி காணமால் போகுமா!

மீனாட்சி

உங்கள் உலக நாடுகளில் இன்று வல்லரசாக ஆட்சிபுரியும் கோரோணா வைரசை கட்டுப்படுத்த முகக்கவசம் அவசியம் என பலநாடுகள் சட்டமே போட்டாகிவிட்டது.

இந்த நிலையில் கொரோனோ வைரஸ் தொற்றின் முதல் படியாக வியாபாரத்திற்கு வந்த முதல் வருமானம் இந்த ;கவசம். அரம்பத்தில் மிகவும் எளிதான முறையில் அமைந்த இந்த முகக் கவசம், தற்போது அது நாகரீகமான கவசமாக உரு பெற்றுவருகிறது.

கொரோனோ வைரஸ் தொலைந்து போனாலும் இனி இந்த முகக்கவசம் குறைந்தது 2 வருடங்கள் பாவனையில் இருக்கும். அதனால் அதனை பெரு வியாபாரமாக்க அனைத்து உபாயமும் முடிக்கிவிடப் பட்டுவிட்டன.

இந்தோனேசியா மற்றும் பிலிப்பைன்; போன்ற சில நாடுகளில் பலருக்கு, கொரோனா வைரஸ் பரவுவதற்கு முன்பே முகமூடி அணிவது ஒரு கலாச்சார நெறியாக இருந்தது. அவை நாகரீகத்தின் அடையாளமாகக்கூட மாறிவிட்டன.

ஒரு கட்டத்தில் ஹலோ கிட்டி முகமூடிகள் ஹாங்காங்கின் தெரு சந்தைகளில் அதிகமாக இருந்தன. தென்கிழக்கு ஆசியாவில், குறிப்பாக அதிக மக்கள் தொகை கொண்ட நகரங்களில், பலர் மாசுபடுவதால் தெருக்களில் முகமூடிகளை அணிந்து



கொள்கிறார்கள்.

இனி கட்டாயம் முகக் கவசம் அணியவேண்டும் என்றால் சொல்லவா வேண்டும். இனி பல புதுவடிவங்கள் பிறக்கும்.

ஒரு முகமூடி நம்பகமான பாதுகாப்பாகக் கருதப்படவில்லை, தற்போதைய ஆராய்ச்சி வைரஸ் துளிகளால் பரவுவதையும், அசுத்தமான மேற்பரப்புகளுடன் தொடர்பு கொள்வதையும் காட்டுகிறது. எனவே இது உங்களைப் பாதுகாக்கும், ஆனால் சில சூழ்நிலைகளில் மட்டுமே அதாவது நீங்கள் மற்றவர்களுடன் நெருக்கமாக இருக்கும்போது, பாதிக்கப்பட்ட ஒருவர் தும்மலாம் அல்லது இருமல் உங்கள் முகத்திற்கு அருகில் இருக்கும போது. இதனால்தான் சோப்பு மற்றும் தண்ணீரில் அடிக்கடி கை கழுவுவது மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று நிபுணர்கள் கூறுகின்றனர். முகமூடியை அகற்றுவதற்கு கை மாசுபடுவதைத் தவிர்ப்பதற்கு சிறப்பு கவனம் தேவை, மேலும் இந்த முகக்கவசம் இது தவறான பாதுகாப்பு உணர்வையும் உங்களுக்குள் வளர்க்கக்கூடும். அதனால் நீங்கள் இடைவெளி மீது அதிக கவனம் செலுத்துவது குறையலாம். எனவே நீங்கள் கடைப்பிடிக்கும் இடைவெளிகள்தான் என்றும் சிறந்த கவசம் என்பதனை மந்துவிடாதீர்கள்.

உலகில் சரிபாதி மக்கள் விரும்பியோ விரும்பாமலோ முகக்கவசம் அணியத்தான் போகிறார்கள்.

ஆனால் இனி அது நாகரிகமாகமாறும் நேரம் வந்துவிட்டதைக்காணலாம்..

விளம்பரங்கள் அதன் மேல் பொறித்து இலவசமாக மக்களுக்கு வழங்கலாம். பெருநாள் பண்டிகைகளுக்கு வாழ்த்து அதில் போட்டு விற்காலாம் Kiss you,I Miss you, Love you மற்றும் பல வியாபரா Logo என்று பல வடிவங்களில் உலாவரும்.

செய்வோம் செய்வோம் என்று இருக்காதீர்கள் சுயமாகத் தயாரித்து சந்தைப்படுத்த முடிந்தவர்கள் உடன் ஆரம்பியுங்கள் உங்கள் கைத்திறனை!

எந்த கஷ்டத்திலும் ஒரு விடியல் இருக்கும். காலம் நேரம் எது தேவை எனக்கணித்து செயற்படுபவன் வெற்றியடைகிறான்.






அனைவருக்கும் எங்கள் மே தின வாழ்த்துகள்

# பெண் கொலை; ஆணாதிக்கத்தின் உச்சம்!

ஸ்ரீரஞ்சனி



பல்வேறு கனவுகளுடன் திருமணபந்தத்தில் இணைபவர்கள் தங்களின் கனவுகளுக்கேற்ற வாழ்க்கை ஒன்று அமையாதபோது அதைச் சகித்துவாழக் கற்றுக்கொள்கிறார்கள் அல்லது ஒருவரை ஒருவர் இம்சிக்காமல் பிரிந்துகொள்கிறார்கள். இதுதான் சகமனித நேசிப்பு இருப்பவர்களின் செயலாக இருக்கிறது. ஆனால், சுயநலமிக்கவர்களோ தாம் அழிந்தாலும் பரவாயில்லை, கூடவாழவந்தவர் அழியவேண்டுமென்ற தன்முனைப்புடன் செயற்படுகிறார்கள். உலகளவில், கொலைசெய்யப்பட்ட பெண்களில் சுமார் 40சதவீதமானோர் அவர்களது முன்னாள் அல்லது தற்போதைய துணை வரினாலேயே கொல்லப்படுகிறார்கள் என்கிறது ஆய்வு. இப்படி நிகழ்த்தப்படும் இந்தப் படுகொலைகளில் பெரும்பாலானவை அந்தப் பந்தத்தைப் பெண் உடைக்கும்போது அல்லது அவ்வாறு செய்வதற்கான தனது விருப்பத்தை அறிவிக்கும்போதே நிகழ்கின்றன,என்கிறார் பெண்களின் கொலைகளுக்கு பல்வேறு விளக்கங்கள் கொடுக்கப்பட்டாலும் அவை இரண்டு பொதுவான அனுமானங்களைப் பகிர்ந்து கொள்கின்றன:

(1) பெண் தன்னுடைய உடைமையென கருதும் ஆணின் மனப்பாங்கு. அதனால் பெண் மீது பாலியல்ரீதியான பொறாமையும் கோபமும் அந்த ஆணுக்கு உருவாகிறது.

(2) பெண்ணின் மீது ஏற்கனவே ஆண் நடாத்திய வன்முறைகளின் உச்சக்கட்டமாக கொலை நிகழ்கிறது மீண்டும் சேர்தலுக்கான வழி இல்லையென்று உணரும்போது அந்தப் பெண் மீதான ஆணின் கோபமும் பொறாமையும் மிகவும் தீவிரமடைகின்றன, கொலைசெய்யும் திட்டம் உருவாகிறது. தெளிவாகத் திட்டமிட்டே அந்த ஆண்கள் இந்தக் கொலைகளைச் செய்கின்றார்கள். இப்படியான கொலைகளுக்கு முன்பாக அத்தனை பெண்களும் அந்த ஆண்களால் பின் தொடரப்பட்டிருக்கிறார்கள், விரும்பத்தகாத செய்திகளை அவர்களிடமிருந்து பெற்றிருக்கிறார்கள், உடமைகளை இழந்திருக்கிறார்கள் என்கின்றனர் ஆய்வாளர்கள்.

இந்தக் கொலைகளை எதிர்பாராத செயல்கள் எனக் கூறமுடியாது. ஆண் கட்டுப்பாட்டை இழப்பதால் அல்லது ஆணின் மனநிலை பாதிக்கப்படுவ தால் தான் இவை நடக்கின்றன என்றும் கூறமுடியாது. இந்தக் கொலைகளில் பெரும்பாலானவை நன்கு திட்டமிடப்பட்டு, வேண்டுமென்றே செய்யப்படு கின்றன. தன்னை அழித்தாலும் பரவாயில்லை மற்றவரை அழிக்கவேண்டு மென்ற மனநிலையையின் உக்கிரமே இங்கு காணப்படுகிறது என்ற ஆய்வை நிரூபிக்கும்

ஒரு கொலையாளியின் வாக்குமூலத்தை நான் நேரடியாகவே கேட்டிருக்கிறேன். எனவே, இவ்வகையான கொலைகளுக்கான ஆபத்துக்களை அடையாளம் காணலும், அவற்றைத் தூண்டக்கூடிய தூண்டிகளை இனம்காணலும், அதிலிருந்து தப்பும் பாதுகாப்பு வழிகளை அறிதலும் மிகவும் அவசியமானது. பின்வரும் கேள்விகளை உங்களை நீங்களே கேட்டுப்பாருங்கள்.

**உங்களின் துணைவர் அல்லது முன்னைய துணைவர்:**

1. அவரது முஷ்டியால் அல்லது உங்களை காயப்படுத்தக்கூடிய எதாவது ஒரு பொருளால் உங்களைத் தாக்கினாரா?
2. உங்களைக் காயப்படுத்தக்கூடிய ஏதாவது பொருளை உங்கள் மீது எறிந்தாரா?
3.உங்களுக்கு வலிக்கச்செய்யும் வகையில் சுவருடன் மோதுமாறு உங்களைத் தள்ளினரா?
4.உங்களை அடித்தாரா°உதைத்தாரா?
5. உங்களின் கழுத்தை நெரித்தாரா?
6. துப்பாக்கியை அல்லது கத்தியைக் காட்டி உங்களை அச்சுறுத்தினாரா?
7. உங்களை மிரட்டுவதன் மூலமோ அல்லது உங்களைத் துன்புறுத்துவதன் மூலமோ பாலியல்ரீதியான செயல்பாடுகளைச் செய்யும்படி உங்களைக் கட்டாயப்படுத்துகிறாரா?

மேலுள்ள கேள்விகளுக்கு உங்கள் பதில் ஆம் என இருந்தால், இத்தகைய செயல்களை எவை தூண்டுகின்றன, எப்படி இவற்றிலிருந்து உங்களைப் பாதுகாப்பது என முன்கூட்டியே திட்டமிடுங்கள். உங்கள் துணைவர்தானே, உங்களைக் கொல்லமாட்டார் என ஒருபோதும் நம்பாதீர்கள்! முரண்பாடுகளின் போது வன்முறையைக் காட்டும் பதிலளிப்பு, பச்சாத்தாபம் மற்றும் இரக்கமற்ற தன்மை, இலகுவில் ஆத்திரப்படல், அதிகப்படியான கட்டுப்பாடுகள் போன்ற நடத்தைகளைக் காட்டும் துணைவர்களுடன் வாழும் பெண்களுக்குக் கொலைக்கு உட்படும் ஆபத்து இருக்கலாம். பிரிவினையை ஏற்காதபோது, வெறித்தனமான பொறாமையைக் காட்டும்போது, வன்முறையின் தீவிரம் அதிகரிக்கும்போது, வீட்டிலிருக்கும் செல்லப்பிராணிகளுக்கு எதிராக கொடுமை செய்யும்போது, பின்தொடரும் போது, ஆயுதங்களைக் காட்டி அச்சுறுத்தும்போது, முக்கியமாக நீதிமன்ற உத்தரவுகளைப் பின்பற்றாதபோது இந்த ஆபத்து மோசமடைகிறது என உணருங்கள்.


இப்படியான நிலைமைகள் இருந்தும் சமூக, பொருளாதாரக் காரணங்களினால் சேர்ந்துவாழ வேண்டிய பெண்களும் சரி, விட்டுவிலகும் பெண்களும் சரி கொலை செய்யப்படுவதை நாங்கள் பார்க்கிறோம். டிசம்பர் 2017இல், ஸ்காபோரோவில் ஒரு தமிழ்ப் பெண் வன்முறையின் பாதிப்புக்குள் வாழ்ந்து மடிந்தாள், செப்ரெம்பர் 2019இல்,இதே ஸ்காபோரோவில் ஒரு தமிழ் பெண் வன்முறையை விட்டு வெளியேறி மடிந்தாள்.திருமணம் என்பது ஒரு அந்தஸ்சு ஆகப் பார்க்கப்படும் நிலை, உடைவு ஏற்பட்டதும் குறித்த மனிதரைத் தோல்வி அடைந்த ஒரு மனிதராக உணரவைக்கிறது. மேலாக ஆண் என்ற ஆணவமும் அகம்பாவமும் மனைவி விட்டுவிட்டுப் போவதை ஏற்கவிடுவதில்லை. இது தமிழ் சமூகத்தில் மட்டுமன்றி எல்லாச் சமூகங்களுக்கும் பொதுவான பிரச்சினையாகவே உள்ளது. எனவே சமூக மாற்றம் தான் அவசியமானது.



BCN TRAVELS
Consulting Network.ug
துரிதகதியில் உங்கள் உறவினர்களுக்கு, நண்பர்களுக்கு பணம் அனுப்ப உடன் நாடுங்கள் (இலங்கை- இந்தியா)
Rheinische str-72 44137 Dortmund
bcntravels@hotmail.de
consultingnetwork@hotmail.de
Tel: 0231- 108 763 61, 0231 584 407 63 | Fax: 0231 108 763 62 | Mobile:0163- 871 43 69
RYANAIR · easyJet · KLM · Emirates · AIR CANADA · SINGAPORE AIRLINES · QANTAS · AIR FRANCE · Lufthansa · OMAN AIR · QATAR AIRWAYS · AIR INDIA · BRITISH AIRWAYS
NEC MONEY · ACE money transfer · small world · VALUTRANS MONEY TRANSFER · Ria Money Transfer
Money Transfer

அனைவருக்கும் எங்கள் மே தின வாழ்த்துகள்

ஆ.சி.கந்தராஜா
(அவுஸ்திரேலியா)



# தலைவராவது எப்படி?

‘இவங்கள் என்னை சும்மா இருக்க விடுகிறாங்களில்லை, இந்த முறையும் கொம்மிற்றியில் போட்டிருக்கிறாங்கள்’ என்ற வாசகத்தை அடிக்கடி நீங்கள் கேட்டிருப்பீர்கள். இப்படியான தமாஷா கதைகளை யாரும் கணக்கில் எடுப்பதில்லை. இருந்தாலும் பல அமைப்புக்களில் மாறிமாறி, ‘சங்கீத நாற்காலியில்’ இடம் பிடிப்பது போல, பதவிகளில் அமர பலர் அலைந்து திரிவது, அனைவரும் அறிந்த விஷயம்.

இந்தவகையில், புலம்யெர்ந்து வந்து இங்கு குடியேறியபின் வேலை, வீடு, கார், பிள்ளைகளின் படிப்பு பின்னர் கலியாணம் என்ற வரிசையில் ஏதாவது ஒரு அமைப்பின் நிர்வாக சபையில் அங்கத்தவராகி முடியுமானால் பின்னர் தலைவராகவும் வர வேண்டுமென்ற அவா, எம்மில் பலருக்கும் உண்டு.

தலைவர் என்பவர் ஒரு குறிப்பிட்ட முடிவை நோக்கி தொண்டர்களை வழி நடத்திச் செல்கின்றவர், என்ற உண்மை எங்களில் எத்தனைபேருக்குத் தெரியும்?

அடுத்தவருடைய பிரச்சினைக்கு வெறுமனே அனுதாபப் படாமல் அவர் களுடைய நிலையில் தன்னைப் பொருத்திப் பார்த்து பிரச்சினையை அணுகுவதும் தன்னுடைய ஈகோவை விட்டுக்கொடுப்பதும் அதிகாரத்தின் மூலம் பிறரைத் தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவராமல் அனைவருக்கும் ஒத்துழைப்பு நல்கி சிந்தித்து செயலாற்றுவதும் நல்ல தலைமைத்துவப் பண்பாகக் கருதப்படுகிறது.

ஆனால் நம்மவர்கள் மத்தியில் மேலே குறிப்பிட்ட தலைமைத்துவப் பண்பில் பல மாறுதல்கள் செய்யவேண்டியது அவசியம் என்பதை ஐயம்பிள்ளை வாத்தியாரிடமிருந்து நான் படிப்படியாகத் தெரிந்து கொண்டேன். கூட்டுறவு இயக்கம், ஆசிரியர் சங்கம் என்று ஊரில் அவருக்கு எலெக்ஷன் தண்ணீர்பட்டபாடு. இங்கும் பல அமைப்புக்களின் ‘கிங் மேக்கர்’ இவர்தான். வாத்தியார் எப்பொழுதும் பிரபல்யமான ஒருவரைத் தூண்டிவிடுவார். அந்த ஆள் வெற்றி பெற்றதும் தன் பிரயாசைகளுக்காக ஒரு சிறிய பதவியை ‘தட்டிப்’ பறித்துக் கொள்வார். திரை மறைவு அதிகாரங்கள் அவருக்குப் போதும். ‘சுழியன்’ என்றாலும் ஐயம்பிள்ளை வாத்தியார் விபரம் அறிந்தவர்!

சமீபத்தில் மெல்பனில் நடந்த நன்பன் ஒருவனின் ஐம்பதாவது பிறந்த நாள் விழாவின் போது வாத்தியாரை மீண்டும் சந்தித்தேன். இத்தகைய விழாக்களின்போது அவர் சொல்லும் ‘பொழிப்பான’ ஊர்ப் புதினம் கேட்க அவரைச்சுற்றி ஒரு கூட்டம் இருக்கும். அன்றும் அப்படித்தான். சமீபத்தில் நடந்த தமிழர் அமைப்பொன்றின் நிர்வாக சபைத் தேர்தல் பற்றி அங்கு அச்சுவேறு ஆணிவேறாக பிரிச்சுமேயப்பட்டது. விஷயம் தெரிந்த யாரோ கதை கேட்கும் சுதியில் சற்று அதிகமாவே அவருக்கு ஊற்றிக் குடுத்துவிட்டார்கள். அந்தக் கணகணப்பில் வாத்தியார் மிதந்தபோது தலைவராவது எப்படி? என்ற பேச்சை ஆரம்பித்தான் பற்பன். அடுத்த எலெக்ஷனிலாவது அவன் ஏதோ ஒரு அமைப்பின் தலைவராகவேண்டும். அந்த அளவுக்கு வீட்டில் அவனுக்கு நிர்ப்பந்தம். அதுவும் மனைவியிடமிருந்து. கந்தோரில் அவளுடன் வேலை செய்யும் பூங்கொடியின் புருஷன்தான் பிரபல அமைப்பொன்றின் நடப்பாண்டுத் தலைவர். இந்த சந்தர்ப்பத்தில்தான் பற்பன் தலைவராவதற்கான கம்பசூத்திரத்தையும் நெளிவு சுழிவுகளையும் ஐயம்பிள்ளை வாத்தியார் அவிட்டுவிடார்.

அங்கிருந்த மற்றவர்கள் சும்மா இருப்பார்களா? அவர்களும் தமக்குத் தெரிந்தவற்றைச் சொல்லி பற்பனை கோதாவில் இறக்கிவிட்டார்கள்.

எதிர்காலத்தில் எம்மில் பலருக்கும் இவை பிரயோசனப்படலாம் என்ற நல்லெண்ணத்தில் வாத்தியாரும் மற்றவர்களும் அங்கு சொன்ன ஆலோசனைகளை சுருக்கமாக இங்கு புள்ளி வடிவில் தருகிறேன்.

தலைமைப் பதவிக்கு வர பேச்சின் மூலம் அனைவரையும் கவரவேண்டும் என்று எம்மில் பலர் எண்ணுகிறார்கள். அது தவறு. எல்லோரிடமும் கலகலப்பாகப் பேசி, சிறந்த பேச்சாற்றலோடு இருப்பவர்களெல்லாம் அறிவாளிகள் அல்ல. தலைவர்களின் உண்மையான பலம் பேசுவதில் அல்ல, கேட்பதில் இருக்கிறது. அப்போதுதான் அவர்களால் மற்றவர்களுடைய எண்ணங்களை நன்றாகப் புரிந்து கொள்ள முடியும்.

நமது ஆட்களைக் கவர சுலபமான வழி கூட்டத்தில் குறைவாகப் பேசுவதுதான். எவ்வளவு அவசியமோ அவ்வளவு, அல்லது அதற்கும் குறைவாகப் பேசவேண்டும். உங்கள் பேச்சு புதிர் மாதிரி அரைகுறையாக அபத்தமாக இருந்தால் மிகவும் நல்லது. அப்போதுதான் மற்றவர்கள் குழம்பி தங்களுக்குள் அதுபற்றி வியாக்கியானங்கள் செய்யத் துவங்குவார்கள்.



இடையிடையே அமெரிக்க, ஆங்கிலேய, ரஷ்ய எழுத்தாளர்களின் பெயரைச் சொல்லி அவர்கள் சொன்னதாக மேற்கோள்காட்டி சில நியாயங்களை எடுத்துவிடுங்கள். நீங்கள் இவர்களின் எழுத்துக்களை வாசித்திருக்கத் தேவையில்லை. இவர்களை மேற்கோள்காட்டி நீங்கள் சொன்னது உண்மையாக இருக்கவும் தேவையில்லை. நிச்சயம் யாரும் இதை சரிபார்க்கப் போவதில்லை. பிறமொழி எழுத்தாளர்களின் பெயரை மட்டும் தெரிந்திருந்தால் போதுமானது. கூட்டங்களுக்கு புகழ்பெற்ற ஆங்கில எழுத்தாளரின் புத்தகம் ஒன்றை எடுத்துச் செல்லுங்கள். வசதியானபோது புத்தகத்தைவிரித்து வாசிப்பது போல பாவனை செய்யுங்கள். இது உங்கள் செல்வாக்கையும் மதிப்பையும் அதிகப்படுத்தும்.

தலைவராக வர விரும்பினால் முக்கியமாக பிறரை நையாண்டி செய்வதை நிறுத்தவேண்டும். நையாண்டி செய்யும்போது ‘எவ்வளவு கிண்டலாகப் பேசுகிறோம்’ என நீங்கள் சந்தோஷப்படக்கூடும். ஆனால் பின்னர் அதற்கு பெரும் விலை கொடுக்கவேண்டிவரும்.

நண்பர்களிடம் எச்சரிக்கையாக இருக்கவேண்டியது மிக மிக அவசியம். நண்பர்களுக்குத்தான் உங்களிடம் பொறாமை கொள்ள அதிகம் வாய்ப்புண்டு. எப்போது உங்களைக் கவிழ்க்கலாம் என்று தருணம் பார்த்துக் கொண்டிருப்பார்கள். ஜாக்கிரதை!

பதவியைப் பிடிக்கவிரும்பினால் உங்கள் நாணயத்தை அவசியம் மூட்டைகட்டி வைக்கவேண்டும். உங்கள் நோக்கம் என்ன விருப்பம் என்ன என்பதை மற்றவர்களுக்குத் தெரியப்படுத்தாது மற்றவர்களுக்கு எது பிடிக்கிறதோ அதையே உங்கள் கருத்தாகச் சொல்லுங்கள். முக்கிய பதவியில் அமர்ந்திருக்கும் பலர் செய்வதும் இதைத்தான்.

இதுதான் விஷயம்! மேலே சொன்ன தகவல்களுடன் உங்கள் புத்தியையும் பாவித்து அடுத்தமுறை ஏதாவது ஒரு பதவிக்கு வரமுடிகிறதா பாருங்கள்.



# முடிந்தவரை வருமுன் காப்போம்

இன்று உலகெங்கும் இந்த கொரோனா வைரஸ் உயிர்களை பறித்து வரும் நேரம், குழந்தைகள் பெரியவர்கள்,என யாவரும் வீட்டுக்குள் முடங்கி இருக்கும் வேளை இது.

வேலைகள் தற்காலிகமாக பலருக்கு இல்லை. அதுவே நிரதந்தரமாகுமா என்ற ஏக்கம் ஒருபுறம். அன்னை தந்தை, பிள்ளைகள், சகோதரங்கள், நண்பர்கள், என உறவுகள் துண்டிக்கப்பட்டு பெற்றவர்க்;கும் பிள்ளைகளுக்கும்கூட இடையே 2 மீ. இடைவெளியில் வாழும் சூழல் இன்று. [ பிள்ளைகள் வேலைக்கோ அல்லது பல்கலைக்கழகத்திற்கோ சென்று திரும்பினால் அவர்களுக்கு தொற்று ஏற்படாவிட்டாலும் அவர்கள் காவியாக இருக்கலாம் என்ற நோக்கில் இது அவசியமாகிறது ].

கடைக்குபோவதும், பொருட்களை உடன் எடுப்பதும், ஓட்டமும் நடையுமாக இருக்கும் நெருக்கடி நேரத்தில் வெற்றிமணி ஒரு மாத இடைவெளி விட்டு மீண்டும் ஒலிக்கிறது.

ஒன்று என்வாழ்நாளில் பெரும்பகுதி உங்களுடனேதான் இருந்தது. எனவே என் இருப்பையும் உங்கள் இருப்பையும் உறுதிப்படுத்தி, மனதை பதட்டநிலையில் வைத்துக்கொள்ளாமல் ஒருவித அமைதிநிலையைப் பேணவேண்டிய மிக அவசியம்.

கொரோனா வைரஸ் ஒருவரது மனவுறுதியை தொடாமலே தொற்றிச் சிதைத்துவிடுகிறது. உளநிலை பாதிப்பு அடையும் போது எமது உடலில் உள்ள எதிராக்கிகள் தன் வல்லமையை அதிகம் இழந்துவிடுகிறது.

எனவே உடலை எப்படி பாதுகாப்போமோ அதற்கு மேலாக நாம் எமது உள்ளத்தையும் காக்கவேண்டும். தினமும் மணிக்கு ஒருதடவை செய்தி பார்ப்பதை நிறுத்தவேண்டும். அப்படிப்பார்ப்பதால் மட்டும் கொரோனோ வைரசின் வீரியம் உலகில் குறைந்துவிடுமா என்ன?



வெற்றிமணிக்கும் வாசகர்களுக்கும் என்றும் இல்லை இடைவெளி.

எனவே எமக்கு கிடைத்த நேரத்தை உணர்ந்து, அதனைப் பொன்னான நேரமாக்குவோம். மொத்தத்தில் வீட்டைக் கோவிலாக்குவோம். நமது வாழ்வில் எமக்காக கரம்கொடுத்தவர்களுடன் சில நிமிடங்களேனும் நன்றியுடன் உரையாடுவோம். நம்மை நாமே சுயபரிசோதனைக்கு உட்படுத்தி, நாம் எம்மை உணர்வதற்கான நல்லதருணம் இது, என ஏற்று நடப்போம். இன்று ஒன்றே அது நிச்சயம். அதனை மகிழ்வுடன் ஏற்போம். நாளை எது செய்யவேண்டுமோ அதற்கானதை முடிந்தவரை செய்வோம். நம்பிக்கைதான் வாழ்க்கை.

அன்று முதல் இன்று வரை வெற்றிமணி பத்திரிகையின் வரவிற்கு கரம்கொடுத்த வாசகர்கள், படைப்பாளிகள் வர்த்தகஸ்தாபன உரிமையாளர்கள், இவர்களை மறந்துவிட முடியாது. அவர்களுக்கு எனது இதயம்கனிந்த நன்றிகள் என்றும் உண்டு. உங்கள் ஆதரவு மீண்டும் வெற்றிமணிக்கு வலுசேர்க்கும் என்ற நம்பிக்கையுடன் மீண்டும் எழுவோம்!

உலகெங்கும் கொரோனோ வைரஸ் தாக்கத்தினால் உயிர் இழந்த மக்கள் அனைவருக்கும் எமது அஞ்சலியை செலுத்துகின்றோம். கொடிய தொற்றுநோயில் இருந்து விடுபட இரவு பகலாக உதவிடும் மருத்துவர்கள், தாதிமார்கள் மற்றும் அத்தியாவசிய சேவையில் தம்;மை இணைத்துக் கொண்டு, பணியாற்றும் அனைவருக்கும் வெற்றிமணி நன்றி செலுத்துகிறது.

ஒவ்வொரு நாட்டிலும் இன்று உள்ள சூழநிலையில் நீங்கள் தான் உங்களை காக்கவேண்டும். அதற்கு மூட நம்பிக்கைகள், வதந்திகள் இவற்றை இனங்கண்டு உங்களைக் காத்துக்கொள்ளுங்கள்.இருவருக்கிடையிலான இடைவெளியை பேணுங்கள்.. முடிந்தவரை வருமுன் காப்போம்.



வெற்றிமணிக்கும் வாசகர்களுக்கும் என்றும் இல்லை **இடைவெளி.**

**என்ற மகிழ்வுடன்**
**மு.க.சு.சிவகுமாரன்.**





Dr.IN

# ஏப்பமும் வயிற்று பொருமலும்

சேலை அவிண்டு விழ அம்மணமாக நிற்பது போன்ற அவமானம் அந்தப் பெண் முகத்தில் முகத்தில் தெறித்தது.

ஏவ்! ஏவ் என்ற பெரிய ஏப்பச் சத்தம் வைத்தியசாலை முழுவதும் எதிரொலிக்குமாற் போல ஓங்காரமாக ஒலிக்க அவளைப் பின் தொடர்ந்து வந்தார் நோயாளி. உடல் கனத்த பெரியவர் உற்சாகமற்ற முகத்துடன், மிகுந்த சோர்வுடன் உள்ளே நுழைந்தார்.

'மாடு மாதிரி எந்த நேரமும் ஏப்பம் விடுகிறார். பெரிய சத்தம்.சகிக்க முடியாது. நாங்கள் இருக்கிறது பிளட்ஸ் வீட்டிலை, அக்கம் பக்கமெல்லாம் சிரிப்பாய் சிரிக்குது. மானம் பறக்குது' என்றாள்.

## ஏப்பம் இயல்பானது

உண்மையில் வாய்வு, ஏப்பம் போன்றவையெல்லாம் இயற்கையான நிகழ்வுகள்தான். இதில் வெட்கப்படவோ அவமானப்படவோ எதுவுமில்லை. ஆயினும் நாலு பேர் மத்தியில் வெளியேறும் போது சற்று அநாகரீகமான, மரியாதைக் கேடான செயலாகத்தான் சமூகத்தில் கணிக்கப்படுகிறது.

இந்திய மற்றும் சீன கலாசாரங்களில் ஏப்பம் வெளியேறுவது இயல்பாகவே கருதப்பட்டது. திருப்பதியாக உண்டதின் அறிகுறியாக இது ஏற்றுக் கொள்ளப் பட்டது. ஆனால் மற்றவர்கள் மத்தியில் ஏப்பம் விடுவதை மேலை தேச மற்றும் ஜப்பானிய கலசாரங்களில் மரியாதைக் குறைவான செயலாக வெறுக்கப்படுகிறது.

குழந்தைகளிலும் வாய்வு வெளியேறுகிறது. ஒரு பக்க மார்பில் பால் ஊட்டிய பின்னர் குழந்தையை அணைத்து நிமித்தி தோளில் போட்டு முதுகில் தட்டி ஏப்பம் விடுவிக்க வேண்டும் என பாலூட்டும் தாய்மாருக்கு அறிவுறுத்தப்படுவது இதனால்தானே.

ஆடு, மாடு, செம்மறி, நாய் போன்ற பல மிருகங்களும் ஏப்பம் விடுவதை நீங்கள் அவதானித்திருக்கலாம். உண்மையில் மாடுகள் தினமும் 500 முதல் 600 லீட்டர் வரையான காற்றை ஏப்பமாக வெளியேற்றுகின்றன.

ஆனால் அவை வெளியேற்றுவது மீதேன் என்ற வாய்வை ஆகும். வர்த்தக ரீதியான மாடுகளைப் பண்ணைகளாக வளர்க்கும் போது இவை வெளியேற்றும் வாய்வு ஆனாது சூழலை மாசுபடுத்தி பச்சை வீட்டு விளைவை (புசநநண டழரளந நககநஉவ) ஏற்படுத்துகிறது அஞ்சப்படுகிறது.

## வாய்வு எவ்வாறு ஏற்படுகிறது?

நாம் உண்ணும் உணவுகள் ஜீரணமடையும் போது வாய்வுகள் இயற்கையாக உணவுக் கால்வாயில் உற்பத்தியாகின்றன.

அத்துடன் உணவு உண்ணும் போதும், நீராகாரம் அருந்தும் போதும் அவற்றோடு சேர்ந்து உட்செல்லுகின்ற காற்றும் சேர்ந்து விடுகிறது. அவசர அவசரமாக உண்ணும்போது கூடிய அளவு காற்றையும் எம்மையறியாது விழுங்கிவிவடுகிறோம். இவை ஏப்பமாக மட்டுமின்றி விக்கலாகவும் வெளியேறுவது உண்டு.

மென்பானங்களில் நிறைய வாய்வு உண்டு. அவற்றில் உள்ளது கார்பன்டை ஒட்சைட் வாய்வு ஆகும்.

மலச்சிக்கல் இருந்தால் வயிறு பொருமலாக இருக்கலாம். தேங்கி நிற்கும் மலத்தில் கிருமித் தொற்றுகள் ஏற்படுவதால் நாற்றமாக வாய்வு வெளியேறவும் கூடும்.

இந்த வாய்வுக்கள் இரைப்பையில் இருந்தால் அவை ஏப்பமாக வெளியேறுகின்றன. இரைப்பையைத் தாண்டி குடலை அடைந்துவிட்டால் வயிறு பொருமலாக, முட்டாக இருக்கும். அவ் வாய்வுகள் மலவாயில் ஊடாக வெளியேறும்.



ஏப்பம் என்பது ஒருவருக்கு தன்னிச்சையாக வாய்வு வெளியேறுவதாக அமையலாம். அல்லது அவர் தானாக விரும்பி வெளியேற்றுவதாகவும் நடைபெறலாம். அதாவது வயிறு உப்பலாக அல்லது வயிற்று முட்டாக இருந்தால் ஒருவர் தானகவே காற்றை ஏப்பமாக வெளியேற்றிச் சுகம் காண முயலலாம்.

ஏப்பமானது எப்பொழுதும் பெரிய சத்தமாகத்தான் வெளியேறும் என்றில்லை. சத்தமின்றி அல்லது மிகவும் தணிந்த சத்தத்துடன் வெளியேறும் ஏப்ப வாய்வு எமது கவனத்தை ஈர்ப்பதில்லை என்பதே உண்மையாகும். உணவின் பின் மூன்று நான்கு தடவைகள் ஏப்பம் விடுவது எவருக்குமே சாதாரண நிகழ்வுதான் என்கிறார்கள்.

## மல வாசலால் பறபற வாய்வு

வாயினால் வெளியேறாத வாய்வுகளும், உணவுக் கால்வாயில் உணவு சமிபாடடையும்போது உற்பத்தியாகும் வாய்வுகளும் மலவாயில் ஊடாக வெளியேறும்.

ஒவ்வொருவருக்கும் தினமும் ஆறு முதல் இருபது தடவைகள் வரை வாய்வானது மலவாயில் ஊடாக வெளியேறலாம் என்கிறார்கள். பெரும்பாலும் மலம் கழிக்கும் போது வெளியேறுவதால் எவரும் கவனிப்பதில்லை.

ஆனால் ஒட்டைக் கார் புறப்படுவது போன்ற பெரிய சத்தத்துடன் வெயியேறும்போது சங்கடமாகவே இருக்கும். ஆசூசையான மணத்துடன் குசுவாக வெளியேறுவது குடலில் கிருமித் தொற்று ஏற்பட்டதால் இருக்கலாம்.

டாக்டர் எம்.கே.முருகானந்தன்
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
குடும்பவைத்தியர்

15 ஆம் பக்கம் பார்க்க...




அனைவருக்கும் எங்கள் மே தின வாழ்த்துகள்



# நம்பிக்கை, சவால்களை சிதறடிக்கும் கவசம்!

முயற்சி,முன்னேற்றம், வளர்ச்சி, திறமை போன்றவைக்குத் தடையாக இருப்பவை அச்சம், பயம், நோய், நோயால் ஏற்படும் வலி போன்றனவாகும். அதனாலே உடல் வளர்த்தேன் உயிர் வளர்த்தேன் என ஒரு சித்தர் பாடுகின்றார். சுவர் இருந்தாலேயே சித்திரம் வரைய முடியும் என்று பழமொழி சுட்டிக்காட்டுகின்றது. நம்பிக்கை, தைரியம் போன்றவற்றால் சில நோய்களை நாம் விரட்டியடிக்க முடியும். நோயிலும் இரண்டு வகையுண்டு. ஒருவகை நோய் எம்மைக் கட்டுப்படுத்தி வைக்கும். அடுத்தவகை நோயை நாம் கட்டுப்படுத்தி வைப்போம். நாம் எப்படி நோயைக் கட்டுப்படுத்தி வைக்க முடியும் என்பதற்கும், எமக்கு இருக்கும் நம்பிக்கையின் மூலம் அச்சத்தை



நீக்கி சவால்களை எப்படி எதிர்கொள்கின்றோம் என்பதையும் பற்றிச் சிந்திப்போம்.

உள்ளுணர்வுகளைப் பலப்படுத்தும் போது எமது எண்ணங்களால், மூளைக்கு நாம் கட்டளையிடுகின்றோம். நாம் இடும் கட்டளையை ஏற்று மூளை கட்டளைக்கு அடிபணிகின்றது. தன்னுடைய கட்டளையை நிறைவேற்றும் பொருட்டு அதில் தன்னுடைய சிந்தனையைச் செலுத்துகின்றது. வலியையும் வேதனையையும் மறந்து விடுகின்றது. அந்தச் செய்தியை எம்முடைய உணர் உறுப்புக்களுக்கு அனுப்பும் தொழிலை விடுத்து, நாம் ஊக்கத்துடன் செலுத்துகின்ற கட்டளைக்கு ஏவலாளியாகின்றது. அதனால், நோயினால் ஏற்படுகின்ற வலியை நாம் மறக்கின்றோம். மகாத்மா காந்திக்கு வயிற்றில் ஒரு தடவை சத்திரசிகிச்சை அளிக்கப்பட இருந்தது. மயக்க மருந்து செலுத்துவதற்கு வைத்தியர்கள் கேட்டார்கள். மயக்க மருந்து தேவையில்லை. நான் பகவத்கீதையை வாசிக்க ஆரம்பித்து 5 நிமிடங்களின் பின் சத்திரசிகிச்சையை ஆரம்பியுங்கள் என்றாராம்.



அதன்படி மயக்கமருந்து அற்ற சத்திரசிகிச்சை முடிவடைந்தபின் முடிந்துவிட்டது என்று வைத்தியர் கூற, அப்படியா! முடிந்துவிட்டதா! என்று சாதாரணமாகக் கேட்டாராம். இவ்வாறு புலன்களை ஒருநிலைப்படுத்தும்போது வலி எமக்கு அடிமையாகின்றது.

நம்பிக்கையின் மூலம் சவால்களை எவ்வாறு வெல்லுகின்றோம் என்பதற்கு மலையேறுபவர்களும், எரிமலையின் அருகே நின்று ஆராய்ச்சி செய்பவர்களும் எமக்கு சாட்சிகளாக அமைகின்றார்கள். இலக்கியங்கள் பல சம்பவங்களை அடையாளப்படுத்துகின்றது. அபிராமிபட்டர் ஒரு அமாவாசை தினத்திலே தன்னை மறந்து அம்மனைத் துதித்துக் கொண்டிருந்த வேளை சரபோஜி மன்னன் அங்கு வந்தான். இவர் யாரென அபிராமிப்பட்டரைப் பார்த்து மன்னன் கேட்டபோது இவன் ஒரு பித்தன் என்று பிறர் கூறினர். இதன் உண்மையை அறிய விரும்பிய மன்னன். பட்டரிடம் இன்று என்ன திதி என்று கேட்க அவரும் அம்மன் பிரகாசத்தில் மூழ்கியிருந்த காரணத்தினால், பௌர்ணமி என்று கூறிவிட்டார். ஆனால், அமாவாசை தினத்தில் பௌர்ணமி என்று கூறிவிட்டேனே என்று மனம் வருந்திய அபிராமி பட்டர் தன்னுடைய நம்பிக்கையின் பிரகாரம் அரிகண்டம் பாடி அம்மன் அருளால் பௌர்ணமி தோற்றத்தைக் காட்டித் வெற்றி கண்டார். இதில் நம்பிக்கை எங்கே புலப்படுகின்றது என்றால், அரிகண்டம் பாடுவதிலேயே ஆகும். ஒரு ஆழமான குழியை வெட்டி விறகை அடுக்கித் தீ மூட்ட வேண்டும். அதன் மேல் ஒரு விட்டமும் 100 கயிறுகளிலான உறியையும் கட்ட வேண்டும். அதற்கு மேல் அமர்ந்து கொண்டு பாடல் பாட வேண்டும். தமது நோக்கம் முடியும் வரை ஒவ்வொரு பாடல் முடிய ஒவ்வொரு கயிறாக வெட்ட வேண்டும். நினைத்த காரியம் முடியவில்லை என்றால், தீக்குள் விழுந்து சாம்பராகிவிடுவார்கள். ஆபத்து இருக்கின்றது என்று தெரிந்தும் துணிந்து செயல்படுவது நம்பிக்கை என்ற வலுவான ஆயுதத்தை தாங்குவதனாலே ஆகும்.

இதேபோல் நந்திவர்மன் என்னும் பல்லவ மன்னன் தன்னுடைய தந்தை இறந்தபின் மன்னனுடைய இரண்டாவது மனைவியின் பிள்ளைகளான 4 தம்பிமாரைத் துரத்திவிட்டு ஆட்சி செய்கின்றான். அதில் ஒருவர் தமிழில் திறமை மிக்கவர். இவர்; துறவு மேற்கொண்டிருந்த சமயத்தில் பாடல் பாடி பிச்சை எடுத்து உணவு உண்பது வழக்கம். ஒரு கணிகை வீட்டின் முன் இவர்

வானுறு மதியை அடைந்ததுஉன் வதனம்
மறிகடல் புகந்ததுஉன் கீர்த்தி
கான்உறு புலியை அடைந்ததுஉன் வீரம்
கற்பகம் அடைந்ததுஉன் கரங்கள்
தேன்உறு மலராள் அரிஇடம் புகந்தாள்
செந்தழல் அடைந்ததுஉன் தேகம்
நானும்என் கலியும் எவ்விடம் புகுவேம்
நந்தியே நம்தயா பரனே

என்னும் பாடலைப் பாடிய போது அப்பாடலை எழுதி வைத்துக் கொண்ட கணிகை அப்பாடலைத் தன்னுடைய மாடத்தில் நின்று பாடினாள். நந்தி என்னும் மன்னன் பெயரைக் கேட்ட காவலர்கள் மன்னனிடம் இதுபற்றிக் கூற, தமிழ்மேல் பற்றுக் கொண்ட மன்னனும் அவளை அழைத்து அப்பாடல் பற்றி வினவுகின்றார். யாரால் பாடப்பட்ட பாடல் என அறிந்த மன்னன் அப்புலவரை அழைத்து வரும்படிக் கூற புலவரும் மன்னனிடம் வந்தார். அப்போது மன்னன் புலவனிடம் கலம்பகம் பாடும்படிப் பணித்தான். புலவரும் பச்சை ஓலையால் நூறு பந்தல் போடவேண்டும். ஒவ்வொரு பாடல் பாடும் போதும் மன்னன் பந்தலில் அமர்ந்திருந்து கேட்க வேண்டும். பாடல் முடிந்தபின் அப்பந்தல் எரிக்கப்படும். நூறாவது பந்தலின் மேல் விறகு அடுக்கப்படும் அதன்மேல் அமர்ந்திருந்து பாடல் கேட்க வேண்டும். பாடல் முடிந்ததும் விறகு தீப்பற்றி எரிய நீயும் எரிந்து இறக்க வேண்டும் என்று கேட்பதற்குப் பணிந்த மன்னன், நந்திக்கலம்பகம் முழுவதும் கேட்டு உயிர் துறந்தான் என்னும் வரலாறு இலக்கிய உலகம் ஏற்றுக் கொண்டது. பாடல் கேட்டால் என் உயிர் இழப்பேன் என்னும் நம்பிக்கை கொண்ட மன்னன் தமிழ் மேல் கொண்ட காதலால் உயிர் துறந்தான். நந்திக்கலம்பகத்தால் மாண்ட கதை நாடறியும் இவ்வாறு கொண்ட கொள்கையில் பிடிவாதமும் துணிவும் கொண்டவர்கள் உயிரைத் துச்சமாக மதித்து தம் முயற்சியில் தம்முடைய முன்னேற்றங்களையும், ஆசையையும் நிறைவேற்றத் துணிந்து நிற்பார்கள்.

எனவே மனமே முருகனின் மயில்வாகனம் என்ற குறியீடு இதிலிருந்து எமக்குப் புலப்படுகின்றது. வானத்தில் மயில் பறக்காது என்றாலும், முருகன் உலகத்தைச் சுற்றிவந்தார். எம்மால் முடியாது என்றால், மனம் முடியச்செய்துவிடும் என்பதே இயற்கை









அனைவருக்கும் எங்கள் மே தின வாழ்த்துகள்

# இரண்டு மீட்டர் இடைவெளியும் கணவன் மனைவி- காதலர் நெருக்கமும்!

## Dating and casual sex



டேட்டிங் மற்றும் உறவுக்கு டென்மார்க், சுவீடனில் பச்சைக்கொடி!



சமூக தொலை தூர விதிகளை மீறிடவும் சில விதி விலக்குகள்!



● மு.க.சு.சிவகுமாரன்

**கொ**ரோனா வைரஸ் சிறிது கட்டுக்குள் வந்தபோது டென்மார்க்கின் சுகாதாரத் தலைவர் (20.04.2020) டேட்டிங் மற்றும் சாதாரண உடலுறவுக்கு பச்சை கொடி காட்டியபின், (The Local digital news) நிருபர் அதன் வழிகாட்டுதல்களை ஸ்வீடனின் பொது சுகாதார நிறுவனத்திடம் கேட்டார்.

தொற்றுநோய் இல்லாமல்,வராமல் சில நேரங்களில் ஸ்வீடனில் டேட்டிங் செய்வது கடினமாக இருக்கும், எனவே உத்தியோக பூர்வ பரிந்துரைகள் மற்றவர்களிடமிருந்து இரண்டு மீட்டர் தூரத்தை வைத்திருக்கும் படி கேட்கும்போது நீங்கள் என்ன செய்ய வேண்டும், சமூக ஊடக விளம்பரம் மற்றும் சுவீடன் முழுவதும் விளம்பர பலகைகளில் காணப்படும் செய்தி அந்த இரண்டு மீட்டர் இடைவெளியே!

'இது ஒரு கடினமான கேள்வி. (தொற்றுநோயைப் பரப்புவதைக் குறைப்பதில்) இந்த இரண்டு மீட்டர் ஒரு காரணியாகும். நெருக்கமான உறவுகளுக்குள் பாத்தால் வேறுபட்ட ஒரு விஷயம்' என்று ஸ்வீடிஷ் பொது சுகாதார அமைப்பின் துணை மாநில தொற்றுநோயியல் நிபுணர் ஆண்டர்ஸ் வாலென்ஸ்டன் கூறினார்.

ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக நாங்கள் மக்கள் கூடும் இடம், மற்றும் பயணங்களின் பெரிய கூட்டங்களைத் தவிர்த்து வருகிறோம், அவை எல்லாவற்றிற்கும் அந்த இரண்டு மீட்டர் இடைவெளி பொருந்தும் ஒரு வழிகாட்டுதல்லாக உள்ளது.'

கொரோனா வைரஸ் கட்டுப்பாடுகள் ஒப்பீட்டளவில் பெரிய அளவில் தன்னார்வ நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்ட சுவீடன், பிற நாடுகளை விட தாமதமாகவே ஏப்ரல் 1 ஆம் தேதி சமூக தொலைதூர வழிகாட்டுதல்களை அறிமுகப் படுத்தியது, கடந்த 21.04.2020 செவ்வாய் பொது சுகாதார அமைப்பின் பத்திரிகையாளர் சந்திப்பில் கேட்ட கேள்விக்கு, இது போன்ற வழிகாட்டுதல்கள் இதற்கு முன்னர் ஏன் அவசியமாகக் கருதப்படவில்லை, இப்போது அவை அவசியமாக மாற்றப்பட்டிருப்பது ஏன் என்று வாலென்ஸ்டன் கூறினார்:

'எங்கள் மூலோபாயம் எப்போதுமே தேவையான நேரத்தில் நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துவதாகும், அவை தேவைப்படுவதை நாங்கள் கவனித்தபோது – தொற்று பரவும் போது – மற்ற நாடுகளை விட சற்று தாமதமாக இருக்கலாம் – ஆனால் அது எங்கள் நோக்கமாக இருந்தது.

இதே நேரத்தில்; டென்மார்க்கின் சுகாதாரத் தலைவர் திங்களன்று (20.04.2020) தெளிவுபடுத்தினார், சமூக தொலைதூரத்திற்கான தனது நாட்டின் கடுமையான அணுகுமுறை பாலியல் அல்லது சாதாரண நிலையான உறவில் (இரண்டு மீட்டர் இடைவெளி) இல்லவே இல்லை என அவர் செய்தியாளர்களிடம் கூறினார்:

'செக்ஸ் நல்லது, செக்ஸ் ஆரோக்கியமானது, நாங்கள் பாலியல் மனிதர்கள், நிச்சயமாக நீங்கள் இந்த சூழ்நிலையில் உடலுறவு கொள்ளலாம். மற்ற மனித தொடர்புகளைப் போலவே, தொற்றுநோய்க்கான அபாயமும் உள்ளது. ஆனால் நிச்சயமாக உடலுறவு கொள்ள ஒருவர் இருக்க வேண்டும் அல்லவா.'

கொரோனா வைரஸ் நீர்த்துளிகள் உள்ளிழுப்பதன் மூலம் சுவாசக் குழாயில் நுழைகிறது என்பதையும், விந்து அல்லது யோனி திரவம் வழியாகப் பரவுவதில்லை என்பதையும் நாம் குறிப்பிட்டாக வேண்டும், ஆனால் உடலுறவில் ஈடுபடும் உடல் நெருக்கம் அதிகமாக இருந்தால் வைரஸை சுவாசக் குழாயில் உள்ளிழுக்கும் அபாயத்தைக் கொண்டு வருகிறது. கூட்டாளர்களில் தொற்று தொற்றுவதற்கு வாய்ப்புள்ளது. அதாவது ஒரே வீட்டில் வாழும் கணவன் மனைவிக்கு புதிதாக ஒரு பாதிப்பை உடல் உறவுமூலம்தான் கொண்டுவரவேண்டும் என்ற நியதியில்லை அல்லவா! ஆகவே நிரந்தர கூட்டாளருடன் தாராளமாக உறவில் இருக்கலாம். இந்த குறிப்பிட்ட கோணத்தில் விவாதிப்பது ஒரு விசித்திரமான கேள்வி போல் தோன்றினாலும், ஒரு மித்த பாலியல் மற்றும் நெருக்கம் பொது சுகாதாரத்திற்கு முக்கியமானதாகக் கருதப் படுகிறது, மேலும் அவை பெரும்பாலும் ஸ்வீடனில் மட்டுமல்ல உலகில் தீவிர விவாதத்தின் தலைப்பாக மாறி இருக்கின்றன.

நாட்டில் பாலியல் மற்றும் இனப்பெருக்க ஆரோக்கியம் மற்றும் உரிமைகளை நன்கு புரிந்துகொள்வதற்காக, 2019 ஆம் ஆண்டில் பொது சுகாதார நிறுவனம் ஸ்வீடன்களின் பாலியல் வாழ்க்கை குறித்த ஒரு பெரிய கணக்கெடுப்பை வெளியிட்டது.

50,000 பேரை வினா எழுப்பிய இந்த ஆய்வில், சுவீடன் நாட்டுமக்கள்; பழகுவதை விட குறைவான உடலுறவு கொண்டுள்ளனர் என்ற கவலைகள் எழுந்தது. இது ஒரு பொது சுகாதார அக்கறையாகக் கருதப்பட்டது, ஏனெனில் இது மன அழுத்தம், மனநலம் அல்லது அவர்களின் உடல்களைப் பற்றிய மக்களின் பாதுகாப்பின்மை போன்ற பிற உடல்நலப் பிரச்சினைகளுடன் இணைக்கப்படலாம்.

இருப்பினும், பொதுவாக, சுவீடன்மக்கள் ஆரோக்கியமான மற்றும் திருப்திகரமான பாலியல் வாழ்க்கையை கொண்டிருப்பதாக ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

இது சம்மந்தமாக டென்மார்க் நிலைப் பாட்டைப் பார்ப்போம்.

இன்று பல நகரங்கள் (Lockdownn) பூட்டுதல் வேளயிலும் டென்மார்க்; சுகாதாரத் தலைவர் காதலுக்கு பச்சைக்; கொடி காட்டுகிறார். 'செக்ஸ் நல்லது. செக்ஸ் ஆரோக்கியமானது' சமூக தொலை தூரத்திற்கான டென்மார்க்கின் கடுமையான அணுகுமுறை பாலியல் அல்லது சாதாரண அல்லது நிலையான உறவில் இல்லை என்பதை டென்மார்க்கின் சுகாதாரத் தலைவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

திங்களன்று ஒரு செய்தியாளர் கூட்டத்தில், டேனிஷ் சுகாதார ஆணையத்தின் இயக்குநர் ஜெனரல் சோரன் ப்ரோஸ்ட்ரோம், ஒப்பீட்டளவில் அதிக எண்ணிக்கையிலான வெவ்வேறு பாலியல் பங்காளிகள்; (different sexual partners) கொண்ட ஒருவர் கூட சமூக தொலைதூர நடவடிக்கைகளால் தடுக்கப்படுவதை உணரக்கூடாது என்று கூறினார்.

அதே நேரம் டென்மார்க்கின் எஸ்.எஸ்.ஐ தொற்று நோய்கள் நிறுவனத்தின் தொழில்முறை இயக்குனர் கோரே மல்பாக், டென்மார்க்கில் உள்ள சமூக தொலைதூர வழிகாட்டுதல்கள் டேட்டிங் அல்லது முழுக்க முழுக்க பாலியல் சந்திப்புகளை ஊக்கப்படுத்தக்கூடாது என்று எச்சரித்தும்; உள்ளார்.

மொத்தத்தில் ஒருவனுக்கு ஒருத்தி.ஒருத்திக்கு ஒருவன் இது சிறப்பான கவசம் அல்லவா! ■



# பரபரப்பு வேண்டாமே, தெளிவு பிறக்க அமைதியடைக!

கரிணி




நில், கவனி, முன்னேறு என இலக்கை நோக்கி பயணிக்கும் ஒரு வெற்றியாளருக்கு பழக்கப்படுத்த ஆலோசனை வழங்கப்படுகிறது. சாதாரண பிராணிகளில் இருந்து காட்டின் விலங்கு சிங்கம் வரை எடுத்த எடுப்பில் தன் உணவை வேட்டையாடுவதில்லை. பறவைகள், விலங்குகள் கூட தமது அறிவுக்கு ஏற்ப தம் பாதுகாப்பை உறுதிப்படுத்திய பின்னரே ஒரு விடயத்தில் இறங்கும். சிறிது அமைதி அதற்கான தெளிவை வழங்கிவிடும். வீட்டில் வளர்க்கும் பூனையில் இதனை கவனித்திருப்போம்.

பரபரப்பான மனநிலையில் ஒரு தையல் ஊசியை எடுத்து அதில் நூலினை கோர்த்து பாருங்கள். அமைதியடைந்தால் மட்டுமே அதனை செய்ய முடியும். வாழ்வில் எத்தனையோ விடயங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு விடயங்களும் பதில் தாக்கங்களை ஏற்படுத்தக்கூடியன. அவ்வளவு முக்கிய விடயங்கள் இலகுவானதாக இருப்பினும் இந்த ஊசியில் நூல் கோர்ப்பதை போன்ற தெளிவு மனநிலையில் செய்யும் போதே விளைவு பிடித்த மாதிரி அமைய அதிக வாய்ப்புள்ளது.

வீட்டில் தந்தை கோபமாக இருக்கும்போது தாய் இரகசியமாக பிள்ளைகளோடு உரையாடுவார் அல்லது கைப்பாவனை மூலம் பேசுவார். இதன் பொருள் பேசுவதற்கு இது நேரமல்ல என்பதே. கோபம், ஆழ்ந்த கவலை, வெறுப்பு, பாசம், ஆர்வக்கோளாறு, பகை, சித்தமயக்கம், ஆசை, காமம் போன்ற உணர்ச்சிப்பெருக்கால் ஆட்கொள்ளப்பட்டிருக்கும் போது அவற்றிலிருந்து தெளிவு பெற அமைதி இன்றியமையாதது. இந்த அமைதியான நிலை பெறுவதற்கு இவ்வாறான நேரங்களில் அமர்ந்திருந்து சிறிதளவு நீர் அருந்துவது கூட மிகுந்த பலனைத் தரும்.

புத்தியும் மனமும் நேராக இருந்தால் எண்ணங்களும், சிந்தனைகளும் தெளிவாகும். செய்யும் காரியங்களின் அசைவுகள் கூட புலனாகும். அப்போது சிந்தனைகள் வலுவடையும். மனம் அமைதியடையும். கலங்கி விட்ட நீர்நிலையில் தெளிந்த நீர் பெற வேண்டும் எனில் அது தெளியும்வரை அமைதியாக காத்திருத்தல் வேண்டும். குழம்பிவிட்ட மனநிலையிலிருந்து தெளிவு பெற வேண்டும் எனில் அமைதியாக சுவாசம் நடைபெற காத்திருக்க வேண்டும்.

இன்றைய வாழ்க்கை முறையில் உள்முக வாழ்வின் அமைதியின்மையே பெரும்பாலான நோய்க்கு காரணமாக இருக்கின்றன. தனிமையில் கூட எண்ணங்கள் தொடர்ச்சியாக செயல் புரிந்தவண்ணம் இதயம் கடின வேலை செய்பவர்களுக்கு எப்படி தொழிற்பட வேண்டுமோ அவ்வாறு மேலதிகமாக தொழிற்பட்டுக்கொண்டே இருக்கிறது. பிறப்பின் முன்பு துடிக்கத் தொடங்கிய இந்த இதயம் தனது சேவையை இரவு பகலாக செய்துகொண்டிருக்கிறது. பயங்கர கனவில் அதி வேகமாக நாம் தப்பி ஓடுவதாக இருக்கும் நிலையில் தூக்கம் கலையும் போது இதயம் அதீத வேகத்துடன் துடிப்பதை உணர்கிறோம். அது போன்றே எண்ணங்களில் தீவிரமாகவும், குழப்பமாகவும் இருக்கும் போது வீணாக சக்தி விரயம் ஏற்படுகிறது. சிறிதளவு அமைதிக்குப் பின் அதிகமாக உணர்ச்சிவசப்பட்ட விடயங்கள் சாதாரணமாகவும் தாங்குசக்தியை தருவதாகவும் இருக்கும்.



உயர் இரத்த அழுத்தம், சர்க்கரை, மன அழுத்தம், நரம்புத்தளர்ச்சி, மனச்சிதைவு, மனச்சோர்வு, பசியின்மை, விரக்தி போன்ற ஆயிரக்கணக்கான நோய்கள் மற்றும் தற்கொலைகளுக்கு அமைதியற்ற மனம் முக்கிய காரணமாக இருக்கிறது. தெளிந்த மனநிலையில்த்தான் உணவு உண்ணுதல் கூட இடம்பெற வேண்டும். இல்லாவிட்டால் உடலின் உட்செயற்பாட்டில் சிக்கல்கள் தான் விளையும். இலகுவான நடைப்பயிற்சி, வண்ண மீன்கள் தொட்டிகளில் வளர்த்து அதனை இரசித்தல், மூச்சுப்பயிற்சி, தியானம், வழிபாடு என்பன மன அமைதியைப் பேணவே பரிந்துரைக்கப்படுகின்றன.

ஆமை மிகவும் வேகம் குறைந்தது இருப்பினும் இருந்த இடத்தில் நிதானமாக எப்போதும் செயல் புரிந்தவண்ணமே இருக்கும். ஓட்டமும், பரபரப்பும் இல்லாத நிதானமே அதனுடைய ஆயுள் நீடிப்பிற்கான காரணமாக இருக்க முடியும். பரபரப்பில் சுவாசம் சீரில்லாமலும், நிதானத்தில் சீராகவும் இயங்குகிறது.

சம்மந்தப்பட்ட இருதரப்பும் அமைதி காத்தால் ஒருபோதும் போர் மூளாது. இது இரு நாடுகளுக்குள் நடக்கும் போர் என்றாலும், கணவன் மனைவிக்குள் ஏற்பட இருக்கும் விவாகரத்து என்றாலும் இது பொருந்தும். பரபரப்பான மனநிலைக்கு இடமளிக்காது அமைதியின் பின்னரான தெளிவு என்றும் எவர்க்கும் சுபமே.




அனைவருக்கும் எங்கள் மே தின வாழ்த்துகள்




# அந்த ஒருவனாய் இன்றே நாம் மாறினால்

கலாசூரி
திவ்யா சுஜேன்

மாயத்திரை அகற்றி ஞானத் தேனைப் பருகுவதே ஆன்மீகத் தின் அடிப்படை இலக்கணம் என்று செ ால்லப்படுவது நாம் அறிந்ததே. இதனை ஒற்றி ஞான பாடல்களில் முதலாவது பாடலான மாயையை பழித்தல் என்னும் பாடலை வரைகிறார், மெய் போலத் தோன்றும் பொய்யினை கண்டு எள்ளி நகையாட வல்ல எம் சித்தன் பாரதி.

*உண்மை அறிந்தவர் உன்னைக்*
*கணிப்பாரோ*
*மாயையே - மனத் திண்மை*
*உள்ளாரை நீ செய்வதும்*
*ஒன்றுண்டோ - மாயையே.*
*எத்தனை கோடி படை*
*கொண்டு வந்தாலும்*
*மாயையே - நீ*
*சித்தத் தெளிவென்னும் தீயின் முன்*
*நிற்பாயோ மாயையே*

கானல் நீரில் தாகம் தீர்க்க எண்ணுவது போலானது மாயை. தனைத் தான் ஆளும் தன்மை, தெளிவு என்பன பற்றி பல பாடல்களில் குறிப்பிட்ட பாரதி இங்கும் நன்மையை சுடர் விட வல்லதும், தீமையை சுட்டெரிக்க வல்லதுமான தீ போல சித்த தெளிவை கூறுகிறார்.

*என்னைக் கெடுப்பதற்கு*
*எண்ணமுற்றாய் கெட்ட*
*மாயையே - நான்*
*உன்னைக் கெடுப்பது உறுதி*
*என்றே உணர் மாயையே.*

விழித்துக் கொண்டால் கனவு பொய். அஞ்ஞான உறக்கத்தில் இருக்கும் வரை மாயை மெய் போலத் தான் தோன்றும். விழித்துக் கொண்டால் தான் வாழ்க்கை விளங்கும். ஞானிகளின் இயல்பான ஏளன சிரிப்பின் மொழியாக , என்னை கெடுக்க வந்திருக்கிறாயா மாயையே ?நான் உன்னை கெடுத்திடுவேன் என்று உறுதி கொள்கிறார்.

*சாகத் துணியில் சமுத்திரம்*
*எம்மட்டு மாயையே - இந்தத்*
*தேகம் பொய் என்றுணர் தீரரை*
*என் செய்வாய் - மாயையே*

அழிந்து போகும் ஆக்கைக்கு அத் தனை வர்ணம் பூசி அழகு பார்த்தால், அழியா ஞானம் இருளாய் தான் இருக்கும். உள்நிற்கும் ஆத்மாவுடன் , அந்த இறைமையுடன் நிரந்தர தொடர்பில் இருந்தால் தான் வாழ்வின் வர்ணங்களை வியந்து வியந்து பார்க்க வாய்ப்புண்டு.

*இருமை அழிந்த பின்*
*எங்கிருப்பாய் அற்ப*
*மாயையே - தெளிந்து*
*ஒருமை கண்டார் முன்னம் ஓடாது*
*நிற்பையோ - மாயையே*
*நீ தரும் இன்பத்தை நேரென்று*
*கொள்வேனோ*
*மாயையே - சிங்கம்*
*நாய்தரக் கொள்ளுமோ நல்லர*
*சாட்சியை - மாயையே*

நிலையில்லாத பொருளினால் ஏற்படும் இன்பம் யாவும் துன்பமே. ஏனெனில் நிலையில்லாதது என்றால் இன்று எம்மோடு இருப்பது நாளை எம்மை விட்டு நீங்கி விடுகிறது. எனவே அந்த இன்பமும் நிரந்தரமில்லை. இதுவே மாயா இன்பம். அப்பேற்பட்ட அற்ப இன்பம் வேண்டாம் என்று மாயையை நிந்திக்கிறார். நாய் தருகின்ற அரசாட்சி யை சிங்கம் ஏற்று கொள்ளாது . அது போல மாயை நீ தரும் இன்பத்தை நான் ஏற்க தயார் இல்லை என்று உறுதியாக கூறுகிறார் நிரந்தர மெய்ப்பொருள் இன்பத்தில் நின்று திளைக்கும் பாரதி.

*என்னிச்சை கொண்டுன்னை*
*எற்றி விடவல்லேன்*
*மாயையே - இனி*
*உன்னிச்சை கொண்டு*
*எனக் கொன்றும்*
*வராதுகாண் மாயையே.*

மாயையே !உன்னை தூர வீசவல்ல தன்னை தான் அறிந்த விழிப்புணர்வை பெற்றுவிட்டேன். ஆதாலால் நீ ஆசை படும் படி என்னைத் தாக்கினாலும் ஒன்றும் எனக்கு நிகழாது என்று பழிக்கிறார். ஒன்றும் என்ற சொற் பிரயோகத்தில் இருந்து இன்பம் துன்பம் இரண்டையும் கடந்த நிலையை குறிப்பதாக உணரலாம்.

*யார்க்கும் குடியல்லேன் யான்*
*என்பது ஓர்ந்தனன்*
*மாயையே- உன்றன்*
*போர்க்கு அஞ்சுவேனோ ?*
*பொடியாக்குவேன்*
*உன்னை மாயையே.*

றப்பர் பாம்பினைக் கண்டதும் சில கணம் நிஜமென்று நினைத்து பயந்து விடுவோம். அது விளையாட்டுப் பொருள் என்று தெரியும் போது பயம் போய்விடுகிறது. அது போல மாயை பொய் என்று அறியும் போது பயம் போய் விடுகிறது. மாயை என்னும் பெரும் ச க்தியை எதிர்க்கும் வல்லமை ஏற்படுகிறது.

1.முதல் பாடலில் யாரெல்லாம் மாயையை எதிர்க்க வல்லவர் என்று கூறப்படுகிறது. அவர்கள் உண்மை அறிந்தவர், மன வலிமை உடையவர்.

2.இவ்விரண்டு விடயங்களையும் அடைய வேண்டும் எனில் சித்தத் தெளிவு வேண்டும். ஆகவே இரண்டாவது பாடலில் சித்தத் தெளிவின் முன் மாயைக்கு இடமில்லை என்று கூறப்படுகிறது.

3. சித்தம் தெளிந்தால் துணிவு வரும். எனவே மூன்றாவது பாடலில் மாயையை எதிர்க்கத் துணிவு ஏற்படுகிறது.

4.இதனால் சாகத் துணிந்த அதாவது தேகம் பொய் என்று உணர்வதை நான்காம் பாடல் கூறுகிறது.

5.இந்த உணர்வு இருமையை இல்லாது அகற்றி ஒருமை (அத்வைதம் ) ஏற்படுத்துகிறது .அதனை ஐந்தாம் பாடல் குறிப்பிடுகிறது. இந்த ஒருமை ஞானிகளின் நிலையைக் குறிப்பதாகக் கருதலாம். ஞானிகள் மாயையை வென்றவராய் இருப்பர் என திருமந்திரம் சான்று பகர்கிறது.

6.இந்நிலையில் போலிச் சுகங்கள் வரும் போது இன்பம் அடைவதும், ஏதேனும் இடையூறுவரின் துன்பம் கொள்வதும் இன்றி சமநிலையில் இருப்பர். பாடலில் மாயை தரும் சுகங்களை மதியாதிருப்பதாய் ஆறாம் பாடல் கூறுகிறது.

7.மாயையின் இச்சையால் பாதிக்கப்படாது , இச்சைகளில் இருந்து விடுபட்டு இருக்கும் பிரம்ம ஞான உணர்வினை ஏழாம் பாடல் கூறுகிறது.

8. அதனால் ஏற்படும் பயமற்ற சுதந்திர வெளியினை எட்டாம் பாடல் குறிப்பிடுகிறது . இவ்வாறு அஷ்ட யோகா போல எட்டு படிகளாக நான்கு அடிகொண்ட எட்டு இப்பாடலையும் வளர்த்துச் செல்கிறார் நம் யோக சித்தன் பாரதி. ஆத்ம சித்தி தேடலில் எண் எட்டுக்குப் பல தொடர்புண்டு. அதனை மனதிருத்தி தான் எட்டுப் பாடல்களை வைத்து கவியுறு தந்தாரோ என்று எண்ணத் தோன்றுகிறது.

ஞான சித்தன் பாரதி, நாமெல்லாம் அஞ்ஞான மக்களாய் மாளாது மாயையை புரிந்தோராய் மாற வேண்டும் என்று விரும்பியவர். அவரது பல கவிகளில் இப்பொருள் காணலாம். நம் யாவர்க்கும் தெரிந்த " நிற்பதுவே நடப்பதுவே" பாடலில் கூட சொற்பனம் தானோ ? தோற்ற மயக்கங்களோ?, அற்ப மாயைகளோ ?"" என்று குறிப்பிட்டிருப்பார். மாயை என்பதனை மிக எளிதாக சொல்ல வேண்டும் என்றால் , இல்லாததை இருப்பது போல எண்ணுதல். இந்த பிரம்மை இருக்கும் வரை வாழ்வின் முழுமை எமக்கு புரியாது. நம்மை நாமே ஏமாற்றும் நரகம்.

''அகம் மாடை மடந்தையர் என்று யாரும் சக மாயையில் நின்று தயங்குவதே'' என கந்தர் அனுபூதி சொல்கிறது. ஆதிசங்கரர் முதல் அத்வைத சித்தாந்தம் அறிந்த ஞானியர் யாவரும் மாயையில் இருந்து விடுபட வேண்டும் என்று பற்பல விதத்தில் சொல்லி செ ால்லி சென்றாலும், இன்னமும் அதனை பழித்தாவது தெரிந்து தெளிய வேண்டும் என்ற ஆர்வம் கூட வாராது இருப்பதில் இருந்து புரிகிறது மாயையின் சக்தி.

பல லட்சங்களில் ஒருத்தன் தான் தன்னை தேட ஆரம்பிப்பான்,அதிலும் ஒருத்தனுக்கு தான் அது சித்திக்கும் என்று கீதையில் சொல்ல பட்டிருக்கும். அந்த ஒருவனாய் இன்றே நாம் மாறினால் ??

மாயையே ! உன்னை ஒரு பொருட்டாக கணிப்பேனோ ? உன்னால் என்ன தான் என்னை செய்து விட முடியும் ? உன்னை நான் அழித்து விடுவேன். என் முன் ஓடாது நிற்பாயோ? உன்னை பொடியாகிவிடுவேன் என்று மாயையை எதிர் நோக்கி பழித்து விரட்டும் வித்தையை இத்தனை இலகுவான மொழி நடையில் எம்மிடம் சேர்ப்பித்த தமிழ் கவி தந்த தெய்வத்திடம் மீண்டும் சரணடைகிறேன்.



# யேர்மனியில் சாதனை படைத்த புதுமைப் பெண்கள்!

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு புதுமைப்பெண்கள் 2020 என்னும் நிகழ்ச்சியினை வெற்றிமணி சிறப்புற யேர்மனியல் நடத்தியது. இளம் புதுமைப் பெண்களாக சாதனை படைத்த நால்வரை வெற்றிமணி மகளிர்தினத்தில் (08.03.2020) கௌரவித்தது.

அவர்களது விபரம். இவர்கள் கல்வி கலை என்பது மட்டுமன்றி தமிழில் சரளமாக பேசவும் தெரிந்தவர்கள் என்பது சிறப்பம்சமாகும். படைத்த திருமதி. ஜொஸ்லினி செல்வரெட்ணம், திருமதி.நிலக்ஷி அகல்யா.தயாநிதி, செல்வி.அபீரா வசந்தராஜா, செல்வி.கார்த்தனா தனபாலசிங்கம் ஆகியோரை வெற்றிமணி கௌரவித்தது.



## திருமதி. ஜொஸ்லின் செல்வரெட்ணம் போல்ட்ர்

இவர் தனது 16 வயதில் ஜேர்மனி அரசாங்க Scolorship இல் ஒரு வருடம் அமெரிக்கா சென்று வந்த பெருமைக்குரியவர். Bonn நகரில் சட்டப்படிப்பினைக் கற்க ஆரம்பித்தார். பின்பு Lüthich Belgien இல் அதனைத் தொடர்ந்தார். 4 மாதங்கள் Germen Consulate of LosAngels இல் வேலை செய்தார். 2009 இல் இருந்து சட்டத்தரணியாக டியூஸ்பேர்க் நகரில் பணியாற்றுகின்றார். இதனைவிட சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பண உதவிகள் செய்து வருகின்றார். Erkelenz für Srilanka என்ற அமைப்பின் மூலம் பலவிதமான உதவிகளைச் செய்து வருகின்றார். ZDF ல் நடத்தப்பட்ட கோடீஸ்வரர் நிகழ்ச்சியில் பங்கேற்று அவருடைய அறிவுக்குப் பரிசாக பெரிய ஒரு பணத்தொகையைப் பெற்றுக் கொண்டார். இத்தொகையின் பெரும்பங்கினை இந்த Erkelenz für Srilanka அமைப்பின் மூலம் எமது தாயகத்திற்கு உதவிக்கரம் நீட்டினார்.



## திருமதி. நிலக்ஷி அகல்யா தயாநிதி

Lüdenscheid நகரைச் சேர்ந்த இவர் தொழில் கற்பதில் கொண்ட சந்தோசத்தினை விட பல நாடுகள் சென்று அந்த மொழி கலாசாரங்களைத் தெரிந்து கொள்வதில் ஈடுபாடு கொண்டவர். இவர் Spain, Irland, China, India, Brazil போன்ற நாடுகள் சென்று அந்நாட்டுக் கலாசாரங்களைத் தெரிந்து கொண்டது மட்டுமன்றி தமிழ், German, French, English, Spain, Japan மற்றும் ரஷ்யன் மொழிகளையும் நன்றாக சலனமின்றி பேசக்கூடியவர். இவர் Business Administration படிப்பினை ஐரோப்பாவிலும் Spain இலும் முன்னணியில் இருக்கும் 1E Business School இல் கற்று MBA பட்டம் பெற்று Kostal நிறுவனத்தில் Produkt Entwicklung தலைமை அதிகாரிக்கு அடுத்தபடியாக இருக்கிறார்.



## செல்வி. அபீரா வசந்தராசன்

இவர் வரிச்சட்டப் படிப்பினை Münster இல் கற்றுக் கொண்டு நிதி பொருளாதார நிபுணராக Wuppertal இல் உள்ள வரி அலுவலகத்தில் (Finanzamt) இல் 3 வருடங்கள் பணி புரிந்தார். இப்போது வரி ஆய்வாளராக köln வரி அலுவலகத்தில் வேலை செய்கிறார். இவர் ஒருவரே முதலாவதாக சேறு மாநிலத்தில் அரசாங்க வரி ஆய்வாளராக பணியாற்றும் தமிழ்பெண் என்ற பெருமைக்குரியவர். இதனை 2013 இல் WDR தொலைக்காட்சி பேட்டி வடிவில் ஒளிபரப்பு செய்தது. இவர் பற்றிய NSW என்ற சஞ்சிகையில் ஒரு கட்டுரையும் இடம் பெற்றது. மேலும் Finance ministry ல் இவர் வரிச்சட்டம் சம்பந்தமான பட்டறைகளையும் நடத்தி வருகிறார். வரி ஆலோசகருக்கான பரீட்சை வினாத்தாள்களை திருத்தும் பணியையும் செய்து வருகின்றார். அது மட்டுமல்லாது நிதி ஆலோசனை உதவியாளராகவும் செயற்படுகிறார். பள்ளிக்காலங்களில் சுனாமித் திட்டம் ஒன்று திறக்கப்பட்டது. இவர் மாணவர் பிரதிநிதியாகச் சர்வதேச ஐக்கிய நாடுகள் நெதர்லாந்து மற்றும் ருநெளஉழ வின் மாநாட்டில் கலந்து கொண்டு பாராட்டுக்களைப் பெற்றவர். அபீரா Weduki Project அதாவது எல்லா நாடுகளிலும் இருந்து இடம்பெயர்ந்து மொழி தெரியாத குழந்தைகளும் மொழி கற்பதற்கான வசதிகளைச் செய்து வருகிறார். தமிழ் பாடசாலையில் 12 ஆம் வகுப்பினைப் பூர்த்தி செய்து அங்கேயே ஒரு சில காலம் ஆசிரியராகப் பணிசெய்தார். பரத நாட்டியத்தினைக் கற்று கலாஜோதிப் பட்டத்தினையும் பெற்றுக் கொண்டார்.



## செல்வி. கார்த்தனா தனபாலசிங்கம்

இவர் தனது 5 வயதில் ஒரு மிருதங்கக் கச்சேரிக்குச் சென்றிருந்த போது ஏற்பட்ட கவர்ச்சியினால் அந்த தோல் வாத்தியத்தினை முறைப்படி பிரபல மிருதங்கச் சக்கரவர்த்தி திரு.பிரணவநாதன் அவர்களைக் குருவாகக் கொண்டு கற்கத் தொடங்கினார். மி;ருதங்கக் கலாஜோதி என்ற பட்டத்தையும் பெற்றுக் கொண்டார். மிருதங்க அரங்கேற்றத்தையும் செய்து கொண்ட பெண்மணி இவர். அத்துடன் வாய்ப்பாட்டு, வயலின், வீணை ஆகியவற்றையும் முறைப்படி பயின்று Oriental Fine Arts Acadamy London மூலம் நடத்திய பரீட்சைகளில் சித்தி பெற்று சங்கீதக் கலாஜோதி, விரலிசை வர்த்தினி, என்ற பட்டங்களையும் பெற்றுக் கொண்டார். தமிழ்க்கல்வியைப் பெற்று 12 ஆம் வகுப்பினை பூர்த்தி செய்துவிட்டு இப்போது பல மாணவிகளுக்கு இசைக்கருவிகளைக் கற்பித்துக் கொடுத்து வருகிறார். மேலும் ஹம் பல்கலைக்கழகத்தில் உயிர் மருத்துவப் பொறியியலாளராகப் படித்துக் கொண்டிருக்கிறார்.

# கூண்டுப் பறவைகள் !



தனசேகர் பிரபாகரன்

இதோ பனிக்காலம் மெல்ல முடிவடைந்து வசந்தம் ஆரம்பித்துவிட்டது, ஒல்லாந்தில் டியூலிப்களின் காலம், மரங்கள் துளிக்கின்றன, மொட்டுகள் விரிகின்றன, பறவைகளின் குரல் சற்று அதிகமாகவே கேட்கத் தொடங்கிவிட்டன. ஆனால் இன்று சுற்றும் உலகம் சற்றே ஸ்தம்பித்து போயிருக்கிறது. கொரானா தீநுண்மி தொற்று அசுர வேகத்தில் பரவிக்கொண்டிருக்க மக்கள் நாம் பெரும்பாலும் வீட்டிற்குள் அடங்கிவிட்டோம்.

சிலவாரங்கட்கு முன் இப்படி ஒன்று நிகழப் போகிறது என்று நாம் நினைத்துக்கூட பார்த்திருக்க மாட்டோம். சரி வீட்டிற்க்குள் அடைந்து கிடக்கும் வாழ்க்கை எப்படிப்பட்டது? வீட்டிலிருந்தே வேலை செய்யவேண்டும், அன்றாடம் உணவுக்கும் ஏற்பாடு செய்யவேண்டும். நோயிலிருந்தும் காத்துக் கொள்ள வேண்டும். இப்படி பல விடயங்கள் !

எங்கள் வீட்டில் சிலநாட்களுக்கு முன்னர் வாங்கிய பறவைக்கூடு உண்டு, சிலப்பறவைகளும் உண்டு. அதற்கு தண்ணீரும் உணவும் குடும்பத்தில் உள்ளவர் வைப்பர், சிலநேரம் அதனருகே வந்து பார்த்து ரசிப்பர். அழகான விடயம் தானே என்று நினைப்பதுண்டு.

இந்த குவாரன்டைன் நாட்களில் சிலநாட்கள் பழைய புத்தங்கங்களை தூசித் தட்டி எடுத்துப் படிக்க ஆரம்பித்திருக்கிறேன். கூட்டினருகே உட்கார்ந்து படிக்க ஆரம்பித்தது நீதி நூலான 'நாலடியார்'

ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் ரெண்டும் செல்லுக்குறுதி என்பது பழஞ்சொல், இங்கே நாலு என்பது நாலடியாரையும் ரெண்டு என்பது திருக்குறளையும் குறிக்கும். குறள் ஈரடியில் அமைந்து உலகப் பிரசித்தி பெற்ற நீதிநூல். அதுபோலவே நாலடியில் அமைந்தது நாலடியார்.

நீதிகளைக் கூறுவதில் திருக்குறளும் நாலடியாரும் ஏறக்குறைய ஒரே முறையைப் பின்பற்றுகின்றன. திருக்குறளைப் போன்றே நாலடியாரும், அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் எனும் முப்பிரிவுகளை உடையதாக விளங்குகிறது. திருக்குறள் இரண்டு அடிகளில் சொல்ல, நாலடியார் நான்கு அடிகளில் சொல்கிறது.

> அதில் ஒரு பாடல்
> கவனத்தை ஈர்த்தது,
> "இரும்பார்க்குங் காலராய்
> ஏதிலார்க் காளாய்க்
> கரும்பார் கழனியுட்
> சேர்வர் – சுரும்பார்க்கும்
> காட்டுளாய் வாழுஞ்
> சிவலும் குறும்பூழும்
> கூட்டுளாய்க்
> கொண்டுவைப் பார்... "

வண்டுகள் ஆரவாரிக்கும் இனிய காட்டில் இருந்து உயிர் வாழும் கவுதாரியையும் காடையையும் கூட்டில் இருந்து வருந்தும்படி பிடித்துக்கொண்டு வந்து சிறை வைப்பவர் (கூட்டில் அடைத்து வைப்பவர்). இரும்பு விலங்குகளாற் பூட்டப்பட்ட கால்களுடன் அடுத்தவர்க்கு விளைநிலத்தில் அடிமை வேலை செய்யும் நிலைமையை அடைவர்.

தீவினையச்சம் எனும் பகுதியில் வருகிறது இப்பாடல். உயிர்களிடத்தே அன்பு செய்யவேணும் அவைகளை துன்புறுத்தி கூட்டில் அடைக்க கூடாது என்பது உட்கருத்து. இப்போது நாமும் கிட்டத்தட்ட அந்த கூட்டில் அடைக்கப்பட்ட நிலைமையில் தான் இருக்கிறோம். வாசித்து முடிக்கையில் மேலே கீச்சுக்குரல். கூட்டைத் திறந்துவிட்டேன் அவை சுதந்திரப் பறவைகளாய் பறக்க நாம் இன்னும் கூண்டுப் பறவைகளாய் நாட்களை நகர்த்திக் கொண்டிருக்கிறோம்.

இறுகிய நாட்களுக்குப் பின் கண்டிப்பாக வசந்தம் உண்டு குழப்பங்கள் தவிர்த்து நம்பிக்கையோடு காத்திருப்போம். நம்பிக்கை வேரோடி கொடிபடர்ந்து பூக்கும் நாள் வெகுதூரத்தில் இல்லை.

---

09 ஆம் பக்கத் தொடர்ச்சி...

### வயிறுப் பொருமல்

வயிற்றுப் பொருமல் என்பது மேல் வயிற்றுப் பகுதியில் ஏற்படுவதாகும். 'வயிறு ஊதிக் கிடக்கு', 'செமிக்கயில்லை', 'வயிறு உப்பசமாகக் கிடக்கு' எனப் பல மாதழச் சொல்வார்கள். இதுவும் பெரும்பாலும் உணவுடன் அல்லது பானங்களுடன் உட்சென்ற வாய்வாகவே பெரும்பாலும் இருக்கும்.

ஆயினும் குடற் புண்கள், களத்திற்கு இரைப்பையிற்கும் இடையில் உள்ள வால்வ் செயற்பாடு தளர்தல் போன்றவற்றால் ஏற்படுது சகசம்.

ஆடு மாட்டின் பால் ஜீரமடைவதில் சிக்கல் இருக்கும் நோயிலும் வயிறுப் பொருமல் ஏற்படும்.

உணவுக் கால்வயில் உணவு ஜீரணமடைவதிலும் உணவு பயணப்படுவதிலும் ஏற்படும் பிரச்னை எனப்படும். இதிலும் வயிற்றுப் பொருமல் ஏற்படும்.

பலரும் சொல்வது போல மலச்சிக்கலால் வயிற்று ஊதல் ஏற்படுமே ஒழிய ஏப்ப வாய்வுத் தொல்லை ஏற்படுவதில்லை.

மலக்குடற் சிக்கல், குரொனஸ் நோய் போன்ற நோய்களும் வாய்வுத் தொல்லையை உண்டாக்கலாம்.

சில மருந்துகளும் வாய்வுத் தொல்லையை ஏற்படுதத்லாம். பெரும்பாலன அன்ரிபயோடிக் மருந்துகள் உணவுக் காய்வாயில் இயல்பாக இருக்கும் பக்டீரியா கிருமிகளைத் தாக்கி அழித்து வேறு சில பக்றீரியாக்களை பெருகச் செய்வதால் வாய்வை உற்பத்தி செய்யலாம். இது வயிற்றில் கடா முடா சத்தத்தை ஏற்படுத்துவதுடன் மலவாயில் ஊடாக வெளியேறவும் செய்யும். ஆனால் இது தற்காலிகமானதே.

மருந்துகள் போலவே கோப்பி மதுபானம் போன்றவையும் காரணமாகலாம்.

மனப் பதற்றம், மனச் சோர்வு போன்ற உளவியல் நோய்களும் காரணமாகும்.

நீரிழிவிற்கு உபயோகிக்கும் மெட்போமின் மருந்து ஒரு சிலரில் வயிற்றுப் பொருமலை ஏற்படுத்துவதுண்டு. பெரம்பாலும் இது தற்காலிகமானது. சில நாட்களில் சரியாகிவிடும்.

### தடுப்பது எப்படி?

வாய்வுத் தொல்லைகளைத் தடுக்க என்ன செய்யலாம்?

அவசர அவசரமாக உணவுகளையும் நீராகாரங்களையும் உட்கொள்ளாதீர்கள். அவ்வாறு உட்கொண்டால் அவற்றுடன் காற்றும் உட்சென்று வாய்வுத் தொல்லை ஏற்படும். சோடா போன்ற மென்பானங்களில் நிறைய காற்று சேர்ந்திருப்பதால் அவற்றையும் தவிர்க்க வேண்டும்.

பயறு, கடலை, சோயா, பருப்பு போன்ற உணவு வகைகளில் உள்ள புரதங்கள் சமிபாடு அடைவதற்கு சிரமமானவை. இவற்றை நன்கு வேக வைத்து உண்டால் சுலபமாக சமிபாடு அடைவதுடன் வாய்வு தோன்றுவதும் குறையும்.

லக்டோஸ் இன்டொலரன்ஜ் உள்ளவர்கள் பால்மா, பால் அருந்துவதைத் தவிரக்க வேண்டும். சோயாப்பால் அருந்தாலும். சில குழந்தைகளில் இது ஒரு முக்கிய பிரச்சனையாக இருப்பதுண்டு.

இவற்றைத் தவிர மனோவியல் காரணங்களாலும் ஏப்பம் வரலாம். உடல் நோயின்றி ஏற்படும் குரணஉவழையெடனுலளிநிளயை அவ் வகையைச் சார்ந்தது. இந்த நோயாளியின் நோயும் அத்தகையதே. நீண்ட கால சிகிச்சை தேவைப்பட்டது.









அனைவருக்கும் எங்கள் மே தின வாழ்த்துகள்

# நடுப்பக்கம்



சேவியர்

# வதந்திகள் வைரசைவிட வேகமானது!

## கொடுமையானது!!!

உண்மைச் செய்தி நத்தையின் தோளில் ஏறி நகர்வலம் போகும் போது, பொய்ச் செய்தி மின்னலின் தோளிலேறி கண்டங்களைத் தாண்டி வருகிறது. இது தான் இன்றைய உலகில் செய்திகள் பரவும் வேகம். முன்பெல்லாம் ஐநூறு கிலோ மீட்டர் தொலைவில் இருக்கின்ற ஒரு நபருக்குச் செய்தி அனுப்பவே சில நாட்கள் ஆகிவிடும். அதுவும் கடிதப் போக்குவரத்து காலத்தில் அந்த செய்தியைச் சுமந்து வருகின்ற தபால்காரர் நமக்குத் தெய்வமாகவே காட்சி தருவார்.

ஊருக்கு போன பையன் இன்னும் கடுதாசி போடலையே எப்படி இருக்கானோ, எப்போ போய் சேர்ந்தானோ என நான்கு நாட்கள் கிராமத்துத் தந்தை நகம் கடித்த காலம் மலையேறிப் போய்விட்டது. இப்போதெல்லாம் வினாடிக்கு வினாடி தகவல்களை டிஜிடல் உலகம் தந்து கொண்டே இருக்கிறது. இதில் பல நன்மைகள் உள்ளன.

குறிப்பாக, திரைகடலோடியும் திரவியம் தேடுவதை இப்போது வீட்டிலிருந்தே சாதிக்கலாம். பல நீண்ட நெடிய காலங்கள் செலவிட்டு செய்ய வேண்டிய விஷயங்களை வெகு சீக்கிரத்திலேயே செய்தும் முடிக்கலாம். அமெரிக்காவின் வெள்ளை மாளிகையில் நாய்க்குட்டி இருமுவது முதல், உள்ளூர்க் கிழவியின் பாம்படத்தை லோக்கல் திருடன் திருடுவது வரை எல்லா விஷயங்களையும் இன்றைய டிஜிடல் கப்பல் அள்ளிக் கொண்டு வந்து கொட்டுகிறது.

தகவல்களில் இப்போது ஒளிவு மறைவுகள் இல்லை. எல்லாமே பொதுவெளியில் தெரிந்து விடுகின்றன. பாத்தியா இந்த புதிய படத்துக்கான போஸ்டரை, ஒரு கொரிய படத்தின் போஸ்டரிலிருந்து காப்பியடித்திருக்கிறார்கள் என்று சாமான்யனே இன்று பேசுகிறான். இசை, எழுத்து,



கலை, தொழில்நுட்பம் எல்லாமே எல்லோருக்கும் பொதுவான பந்தியாய் பரிமாறப்படும் சூழல் இன்றைக்கு உருவாகியிருக்கிறது.

இந்த காலம் செய்கின்ற ஒரு மிகப்பெரிய கொடுமை ஒன்று உண்டு. அது தான் தகவல்களிலுள்ள நம்பகத் தன்மை. இந்த பையனைக் காணவில்லை, தயவு செய்து பகிருங்கள் என்ற ஒரு குழந்தையின் படம், அவன் கண்டுபிடிக்கப்பட்டு பத்து ஆண்டுகள் ஆனாலும் தனது டிஜிடல் ஊர்வலத்தை நிறுத்துவதில்லை.

வாட்ஸப்பில் வருகின்ற செய்திகளை நம்பி வீட்டு அம்மாக்கள் செய்கின்ற அலப்பறைகள் இன்னொரு ரகம். சில நாட்கள் காலையில் பூண்டை வெட்டி வேகவைத்து, தண்ணீரையும் பூண்டையும் சாப்பிடு என கழுத்தை நெரிப்பார்கள். அதற்குள் அடுத்த வாட்சப் வந்து விடும், இப்போது எலுமிச்சை பழத்தையும், இஞ்சியையும் கலந்து சுடுநீரில் கொதிக்க வைத்து கொஞ்ச நாள் காலையில் முழிபிதுங்கும். கீதா சாராம்சம் போல, அதுவும் கடந்து போகும். அடுத்த நாள் ஆப்பிளையும், பீட்ரூட்டையும், கேரட்டையும் மிக்சியில் போட்டு அரைப்பதற்காக காத்திருப்பார்கள்.

**போலிச் செய்திகள் பரவுவது சமூகத்தின் மிகப்பெரிய எதிரி என்கிறார்கள் யேர்மனியர்!**

வாட்சப் தான் சர்வதேச அங்கீகாரம் பெற்ற மருத்துவக் குழுவைப் போல பாவிக்கும் மக்கள் எக்கச்சக்கம் உண்டு. அவர்களும் சளைக்காமல் பூண்டு, வெங்காயம், இஞ்சி, அவரைக்காய், பீர்க்கங்காய் என வரிசையாக தங்களது வைத்தியங்களைப் பந்தி வைத்துக் கொண்டே இருக்கிறார்கள். இதில் எது நல்லது, எது தவறு என்பதைக் கண்டு பிடிக்க முடியாமல் மக்கள் வாட்சப்பின் வாசலில் குப்புற விழுந்து விடுகிறார்கள்.

இது ஒரு புறம் என்றால், நோய்கள் வரும்போதும், கிருமிகள் வரும்போதும் எழுகின்ற திடீர் டாக்டர்களும், மருத்துவ ஆய்வாளர்களும், கருத்து கந்தசாமிகளும் எக்கச்சக்கம். மருந்துக்கான தடுப்பு மருந்தை சர்வதேச மருத்துவர்கள் கண்டு பிடிக்கும் முன் ஆண்டிப்பட்டி டீக்கடை பக்கத்திலிருக்கும் அரசரடிப் பொடியார்கள் கண்டு பிடித்து விடுகிறார்கள்.

'இதெல்லாம் ஒரு மேட்டரா ? கருஞ்சீரகத்தையும், பெருஞ்சீரகத்தையும் அரைத்து கூழாக்கி வடிகட்டி நாலு சொட்டு காது வழியா விட்டா இதெல்லாம் சட்டுன்னு காணாம போயிடும் என அவர்கள் சொல்வதை வியந்து போய் கைதட்ட ஏகப்பட்ட கூட்டம் இங்கே உண்டு என்பது தான் கொடுமை.

'அந்த வைரஸ் வேற ஒண்ணுமில்லைங்க, அமெரிக்காவோட பயோலாஜிக்கல் வெப்பன் உயிரியல் ஆயுதம். போட்டான் பாருங்க கரிக்ட்டான டைம்ல..' என அவர்கள் அனுப்புகின்ற யூடியூப் வீடியோக்களோ, ஃபேஸ்புக் பதிவுகளோ, இல்லுமினாட்டி கதைகளோ சடுதியில் உலகின் மறு கரை வரை சென்று சேர்கின்றன. உண்மை எது என கண்டறிய முயலாத மக்களில் கணிசமானவர்கள் அது சரி என்று நம்பியும் விடுகிறார்கள்.

அந்த வைரஸ் இப்போ நம்ம வாய்க்கால் வழியா வடுகப்பட்டிக்கும் வந்துடுச்சு. அதுல குளிச்ச எல்லாருமே காலி என அவர்கள் கிளப்பி விடும் திகிலில், அரை குறை உயிரோடு இருப்பவர்களெல்லாம் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு சாய்ந்து விடுகிறார்கள்.

இப்படி தவறான தகவல்களைப் பரப்புவதில் இரண்டு விஷயங்கள் உண்டு. ஒன்று இதை ஸ்றாட்டஜியாக பயன்படுத்தி, வேண்டுமென்றே தவறான தகவல்களைப் பரப்பி, அதன் மூலம் ஆதாயம் அடைவது. உதாரணமாக சில நாட்டுத் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்னணியில் இத்தகைய 'டேட்டா அனாலிசிஸ்' உண்டு என்கிறார்கள். இது தான் என்னோட மாடல் என ஒரு மாயையான பிம்பத்தைக் கட்டியெழுப்புவதும், இவர்தான் நம்மோட இரட்சகர் என

17 ஆம் பக்கம் பார்க்க...




அனைவருக்கும் எங்கள் மே தின வாழ்த்துகள்

16ஆம் பக்கத் தொடர்ச்சி...

ஒரு போலியான பிம்பத்தைக் கட்டியெ ழுப்புவதும் இன்றைய சூழலில் மிக எளிது. இத்தகைய பணிகளைச் செய்வதற்கா கவே பல நிறுவனங்கள் இருக்கின்றன. அவர்கள் விரும்புகின்ற ஒரு கருத்துருவாக் கத்தை வலிந்து திணித்து எல்லோரையும் நம்ப வைப்பார்கள். தூய்மையும், திற மையும் வாய்ந்த ஒருவரை காமெடியனா கச் சித்தரிக்கவும் அவர்களால் முடியும். சற்றும் திறமையற்ற ஒருவரை ஆஜானுபா குவாய் சித்தரிக்கவும் இவர்களால் முடியும். இதற்கு அவர்கள் செய்வதெல்லாம் தவ றான செய்திகளை திரும்பத் திரும்ப மக்க ளின் மனதில் நுழைத்து நுழைத்து அது சரி யென நம்மை நம்ப வைப்பது தான்.

'முக்காவாசி பேரு நம்ப மாட்டாங்க' என நாம் சொல்லலாம். ஆனால் 'கால் வாசி பேரு நம்பிட்டான்' என்பது தான் அவர்களுடைய வெற்றி. அந்த கால்வாசி பேர் அந்த செய்தியை பரப்பி அடுத்த கால் வாசி பேரை நம்ப வைப்பார்கள். இப்படித் தான் போலிச் செய்திகளின் விதைப்பு நடக் கிறது.

போலிச் செய்திகள் பரவுவது சமூகத் தின் மிகப்பெரிய எதிரி என 74 சதவீதம் ஜெர்மானியர்களும், 54 சதவீதம் அமெரிக் கர்களும் நம்புவதாக ஒரு புள்ளி விவரம் தெரிவிக்கிறது.

தவறான செய்திகளின் பரிமாற்றத்தைத் தடை செய்வது என்பது இயலாத காரியம். ஒரு காலத்தில் செய்தித் தாளில் வந்த தையெல்லாம் நம்பினோம். ஆனால் இன் றைய டிஜிடல் உலகில் அத்தகைய ஒரு நிலைப்பாட்டை நாம் எடுக்கவே முடியாது. காரணம் ஒரே செய்தியின் ஆயிரம் வடிவங் களை நாம் இணையத்தில் காண முடிகி றது.

ஆனாலும், ஒரு சில விஷயங்களை நாம் மனதில் கொள்ள வேண்டும். அப்போது தான் நம்பகத் தன்மை உடைய தகவல் களை நாம் கண்டறிய முடியும். அதே போல நாம் பகிரும் விஷயங்களும் உண்மை தானா என்பதை அறிந்து கொள்ள முடி யும். அதற்கு சில எளிய வழி முறைகள் உள்ளன.

01.நீங்கள் வாசிக்காத ஒரு செய்தியைப் பகிராதீர்கள். அதாவது, ஒரு செய்தி வாட்சப்பில் வந்தால் அது உண்மையா பொய்யா என்பதைக் கண்டறிய ஒரு ஐந்து நிமிடம் இணையத்தில் செலவிடுங்கள். நம்பகத்தன்மை உடைய பத்திரிகைகள், நபர்கள், பிளாக் கள், வீடியோ தளங்கள் போன்றவற்றில் அது குறித்து என்ன சொல் லப்பட்டிருக்கிறது என்பதைக் கண்டறிய வேண்டும். அப்போது செய்தி உண்மையா பொய்யா என்பதைக் குறித்த புரிதல் நமக் குக் கிடைக்கும். அதன் பின்பே ஒரு செய் தியைப் பகிரவேண்டும்.

02. உங்களுக்குத் தெரியாத புதிய வலைத்தளத்தில் போடப்பட்ட செய்தியை சட்டென நம்பி விட வேண்டாம். அந்த செய்தி உண்மையா என்பதை மற்ற வலைத்தளங்களில் சோதித்து அறியுங்கள்.

03. ஒரு செய்தியை நம்பும் முன், அல் லது பகிரும் முன் ஐந்து கேள்விகளைக் கேளுங்கள். இந்த செய்தி புதிய விஷயம் தானா அல்லது காலாவதியான செய்தியா ? இந்த செய்தி தொடர்புடைய செய்தி தானா ? இதை எழுதிய எழுத்தாளருக்கு இந்த விஷயத்தில் அனுபவம் உண்டா ? இந்த செய்தி ஆய்வுகள் ஆராய்ச்சிக் கட் டுரைகள் போன்றவற்றால் நிரூபிக்கப்பட் டதா ? இந்த செய்தி பகிரப்பட்டதன் நோக் கம் என்ன ? இந்த ஐந்து கேள்விகளுக்கும் நீங்கள் பெறும் பதிலைப் பொறுத்து அந்த செய்தியை நம்புவதா இல்லையா எனும் முடிவை எடுங்கள்.



04.இன்றைய மிக முக்கியமான சவால் இந்த மீம்ஸ் தான். எந்த ஒரு செய்தியையும் போட்டு அதை நகைச்சுவையாக மாற்றி விடுவார்கள். அல்லது ஒரு தவறான தக வலைப் போட்டு, கனடா பிரதமர் தினமும் பழங்கஞ்சி சாப்பிடுகிறார் என வடிவேலு வின் ஆஹாங் எனும் வாக்கியத்துடன் பரப்புவார்கள். மீம்ஸ் வரும்போது செய் திகளின் நம்பகத் தன்மையை பெரிதாக யாரும் கண்டுகொள்வதில்லை. ஆனால் அது தான் சாமான்ய மக்களை சட்டென செ ன்று சேர்கிறது. மீம்ஸ்கள் விஷயத்தில் கவ னமாய் இருக்க வேண்டும். சிரிக்க வைக்கி றது என்பதற்காக ஃபார்வேர்ட் செய்து ஒரு தவறான தகவலைப் பரப்ப நாம் காரண மாய் இருக்கக் கூடாது.



05.தவறான செய்திகளைக் கண்டறிய ஃபேக்ட் ஆர் ஃபிக்ஷன், ஹோக்ஸ் போன்ற பல வலைத்தளங்கள் உள்ளன. அவற்றில் ஒரு தகவலைப் போட்டால் அது உண் மையா இல்லையா என்பதைக் குறித்த வரலாற்றைப் புட்டுப் புட்டு வைப்பார்கள். இதன் மூலம் நாம் செய்திகளின் உண் மைத் தன்மையைக் கண்டறியலாம். பொய்யான தகவலைப் பரப்பாமல் தவிர்க் கலாம்.

06. பல வேளைகளில் வலைத்தளமே போலியானதாய் இருக்கும். உண்மை யான வலைத்தளத்தைப் போல ஒரு வலைத்தளத்தை உருவாக்கி அதில் போலியான செய்திகளைப் போட்டு நம்மை முட்டாளாக்கும் முயற்சிகளும் நடப்ப துண்டு. எனவே அதுகுறித்து கவனமாக இருக்க வேண்டும். வலைத்தள முகவரியில் ஸ்பெல்லிங், என்ன டொமைன் போன்ற வற்றை விழிப்புடன் கவனிக்க வேண்டும்.

07.மனிதர்களைப் போல ரோபோக் களும் தவறான தகவல்களைப் பரப்புகின் றன. கேட்கவே ஆச்சரியமாக இருக்கும் ஆனால் அது தான் உண்மை. இன் றைக்கு தொழில்நுட்ப உலகை ஆக்கிர மித்திருக்கும் பாட்ஸ் பல தகவல்களை பயனர்களுக்குக் கொடுத்துக் கொண்டே இருக்கிறது. இணையத்தில் இருக்கின்ற தகவல்களின் அடிப்படையில் இவை இயங் குகின்றன. ஆனால் அவை சரியா தவறா என்பதைப் பகுத்தறிவதில் இன்னும் மென் பொருட்கள் தேர்ச்சியடையவில்லை என் பது தான் உண்மை.

08.தவறான செய்தி தருபவர்கள் நம் மைக் குழப்ப ஒரு உத்தி வைத்திருப்பார் கள். சொல்கின்ற செய்தியில் 70 சதவீதம் உண்மையும், 30 சதவீதம் பொய்யும் கலந்து தருவார்கள். நாம் பெரும்பாலான செய்திகள் உண்மை என்பதால் மிச் சத்தையும் உண்மை என நம்பி விடுவோம். இந்த உத்தியில் வீழ்ந்து விடாமல் கவன மாய் இருக்க வேண்டும்.

09. தத்துவங்கள், கோட்ஸ், பொன்மொ ழிகள் போன்றவற்றில் பெரும்பாலானவை போலிகள் என்பதைக் கவனத்தில் கொள் ளுங்கள். மதம், இனம், சாதி எல்லாவற் றையும் கடந்து இத்தகைய பொன்மொ ழிகள் உலாவரும். 'சென்னை இரயில் நிலையம் வாஸ்து படி கட்டப்படவில்லை யென சேக்ஸ்பியர் சொன்னார்' என்று செ ான்னால் கூட நம்ப ஒரு கூட்டம் இருக்கும் என்பது தான் கசப்பான நிஜம்.

10.படங்கள். பல வேளைகளில், செய்தி கள் உண்மையா என சோதித்தறியும் நாம் கூட பகிரப்படும் படங்கள் உண்மையா என்பதைப் பார்ப்பதில்லை. அதை கவனத் தில் கொள்ள வேண்டும். இப்போது புகைப் படங்களின் உண்மைத் தன்மையை உர சிப் பார்க்கவும் வலைத்தளங்கள் உண்டு என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

ஒரு செய்தியைப் பகிர்வதும், நம்புவதும் ஏதோ சின்ன விஷயம் என நாம் நினைப் போம். ஆனால் அப்படி அல்ல. இன்றைய உலகம் உணர்வுகளால் கட்டமைக்கப்பட் டதை விட இறுக்கமாய் தகவல்களால் கட் டமைக்கப்பட்டுள்ளது. எனவே நம்மைச் சந் திக்கும் தகவல்களையும், நாம் சிந்திக்கும் தகவல்களையும், நாம் பகிரும் தகவல்க ளையும் உண்மையா என்பதை ஆழமாய் அறிந்து கொள்ள வேண்டும்.







2000-2020 Anniversary
20 ஆண்டு நிறைவில் எமது பொருட்கள்
மீது மதிப்பும் மகிழ்ச்சியும் கொண்ட
உங்களுக்கு நன்றி
CELEBRATION
20th
ANNIVERSARY
BTM
Aachi
The Mother of Good Taste
YumYum
POWER HORSE
ENERGY DRINK
www. btmint. com
Email: info@btmint.com
JACK MACKEREL
IN NATURAL JUICE WITH SALT ADDED
Maquereau Dans le jus naturel avec du sel ajouté
Jack Makrelen In Natürlichem Saft mit Salz, der hinzugefügt wird
Rich in Omega 3
Taste of the Paradise
JACK MACKEREL
IN TOMATO SAUCE
Mackerel in brine
Mackerel in tomato sauce
எமது பொருட்களை ஐரோப்பா
எங்கும் பெற்றுக்கொள்ளலாம்
btmint.com
BTM International UK Ltd
80 Goodhall Street, Park Royal,
London NW10 6TS United Kingdom
Distributed by: BTM INTERNATIONAL UK.LTD
www.btmint.com | e.mail: info@btmint.com

**Dr.நிரோஷனின் அதிசய உலகம்**

# தற்செயலாகக் கண்டு பிடித்த மிகப் பிரபலமான கண்டுபிடிப்புகள்!



அறிவியலில் எவ்வளவோ கண்டுபிடிப்புகள் இறந்தகாலத்தில் நடந்தன, நிகழ்காலத்தில் நடக்கின்றன, மேலும் எதிர்காலத்தில் நடக்கப்போகின்றன. அது ஒரு நாளும் நின்று விடப் போவது இல்லை. இதில் என்ன விசேஷம் என்றால், இறந்தகாலங்களில் எவ்வளவோ திட்டமிடப்படாத கண்டுபிடிப்புகள் நிகழ்ந்துள்ளன என்பது தான். என்ன புரியவில்லையா? ஒரு விஷயத்தில் ஆராய்ச்சி செய்துகொண்டு இருந்த ஆராய்ச்சியாளர்கள் தற்செயலாக வேறு ஏதோ ஒரு விஷயத்தைக் கண்டுபிடித்துள்ளார்கள். இப்படித் தற்செயலாகக் கண்டுபிடிக்கப் பட்ட 5 மிகப் பிரபலமான கண்டுபிடிப்புகளைப் பற்றி சொல்லவா?

1) 907ம் ஆண்டில் Leo Baekeland என்பவர் அரக்கு (Shellac) எனப்படும் ஒருவகை இயற்கைப் பிசினுக்குப் பதிலாக செயற்கை பிசின் உருவாக்கும் செயலில் ஈடுபட்டுள்ளார். ஆனால் அவர் அந்நேரம் கண்டுபிடித்தது செயற்கைப் பிசின் இல்லை. தற்செயலாக நெகிழி எனப்படும் பிளாஸ்டிக்கை உருவாக்கி விட்டார். இவரின் இந்த மாபெரும் கண்டுபிடிப்பினால் இன்று எங்குப் பார்த்தாலும் பிளாஸ்டிக் காணமுடிகிறது.

2) 1878ம் ஆண்டில் Constantin Fahlberg எனப்படும் ரசவாதி (chemist) அவரது ஆராய்ச்சிகள் முடிந்தவுடன் தனது கைகளைச் சுத்தம் செய்ய மறந்துவிட்டார். வீடு சென்றதும் தற்செயலாக அவரின் கைகளைச் சுவைத்துப் பார்த்த இவர், அவை இனிப்பாக இருந்தன என்பதை அவதானித்தார். அது தான் முதல் முறையாக இன்று பெரும்பாலும் நீரிழிவு நோயாளர்களால் உபயோகிக்கப்படும் சாக்கரின் (saccharin) எனப்படும் செயற்கை இனிப்பூட்டி உருவான நேரம் ஆகும்.

3) 1945ம் ஆண்டில் ரேடார் (Radar) ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள Percy Spencer எனப்படும் பொறியியலாளர் அவரது ரேடார் ஆராய்ச்சி நேரத்தில் காற்சட்டைப் பாக்கெட்டில் இருந்த சாக்லெட் உருகுவதை அவதானித்தார். அத்துடன் பிறந்தது தான் இன்று ஒவ்வொரு வீட்டிலும் காணப்படும் நுண்ணலை அடுப்பு (micro wave oven).

4) இந்த நான்காவது கண்டுபிடிப்புக்கு யார் சொந்தக்காரர் என்பது இன்று வரைத் தெளிவாகக் கூறமுடியவில்லை, ஆனால் இந்தக் கண்டுபிடிப்பு தற்செயலானது என்பதில் ஒரு மாற்றுக் கருத்துமே இல்லை. 1772ம் ஆண்டுக்குப் பின் நைட்ரஸ் ஆக்சைடு (Nitrous oxide) எனப்படும் வாயு பல வருடங்களாகச் சிரிப்பூட்டும் வாயு (laughing gas) ஆக உபயோகிக்கப் பட்டது. இந்த வாயு அளவுக்கு மீறிச் சுவாசித்தால் உடனடியாக மயங்கி விடுவார்கள் என்பதை அறிந்தவர்கள், அதனை அந்நேரம் எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதைத் தெரியாமல் இருந்து விட்டார்கள். 1844ம் ஆண்டில் தான் Horace Wells என்னும் பல் வைத்தியர் தற்செயலாக இந்த வாயு மயக்க மருந்தாக உபயோகிக்கலாம் என்பதைக் கண்டுபிடித்தார். ஒரு கொண்டாட்டத்தில் சிரிப்பூட்டுவதற்காக அளவுக்கு மீறி சுவாசித்த நண்பர் ஒருவர் தவறி கீழே விழுந்து, உடலில் ஆழமான வெட்டுக் காயம் ஏற்பட்டும் ஒரு வலியும் இல்லாமல் இருந்ததை அவதானித்த இவர், அந்தச் சம்பவத்துடன் இன்றைய மயக்க மருந்தின் அடிப்படையைக் கண்டு பிடித்துவிட்டார்.



5) மருத்துவ உலகில் மிகவும் முக்கியமான கண்டுபிடிப்பு ஒன்று கூட தற்செயலாகத் தான் நிகழ்ந்தது. 1928ம் ஆண்டில் Alexander Fleming என்பவர் இன்ஃபுளுவென்சா (Influenza) என்னும் வைரஸ்களுடன் (Virus) ஆராய்ச்சி செய்துகொண்டு இருந்தார். விடுமுறைக்குச் சென்று திரும்பிய இவர், அவரது ஆய்வுக்கூடத்தில் தவறுதலாக ஸ்டாபிலோகோகஸ் (Staphylococcus) என்னும் கிருமிகள் வைத்து இருந்த ஒரு தட்டு மூடப்படவில்லை என்பதை அவதானித்தார். பதறி ஓடி வந்து அதை நீக்க முயன்ற இவர், அந்தத் தட்டில் பூஞ்சை (அல்லது பூஞ்சணம்) பிடித்து இருந்ததைக் கவனித்தார். இதில் சுவாரசியமான விஷயம் என்னவென்றால், அந்த ஆபத்தான கிருமிகள் தட்டில் பூஞ்சை பிடித்த இடத்தைத் தவிர மீதி இருந்த எல்லா இடங்களிலும் பரவி இருந்தன. எனவே, இந்தப் பூஞ்சை உள்ள இடத்தை அந்தக் கிருமிகள் தவிர்க்கின்றன என்பதைத் தற்செயலாகக் கண்டுபிடித்த இவர், பெனிசிலின் எனப்படும் நுண்ணுயிர் எதிர்ப்பி (antibiotic) உருவாக்குவதற்கு அடிப்படியாக இருந்தார். இந்த நுண்ணுயிர் எதிர்ப்பி இன்று நம்மைப் பல்வேறு நோய்களில் இருந்து குணப்படுத்துகிறது.

உண்மை சொல்லப்போனால் இன்னும் எவ்வளவோ கண்டுபிடிப்புகள் தற்செயலாக நிகழ்ந்து இருக்கின்றன. ஒன்றைப் பற்றி ஆராய்ச்சி செய்யும் போது, வேறு ஏதோவொன்றைக் கண்டுபிடித்து இன்று மனித வாழ்க்கையே மாற்றி அமைத்துள்ளனர்.

நண்பர்களே, அடுத்த முறை சமைக்கும் போது அல்லது குளிக்கும் போது ஏதாவது வித்தியாசமாக இருந்தால் அது என்னவென்று ஆராய்ந்து பாருங்கள். தற்செயலாக இந்த உலகையே மாற்றி அமைக்கக்கூடிய மருந்து மாத்திரை அல்லது வேறு சுவாரசியமான விஷயங்களைக் கண்டுபிடித்து விடுவீர்கள். என்ன நான் சொல்வது சரி தானே? சரி இனி நீங்கள் கூறுங்கள், உங்களுக்கும் இது போல் தற்செயலாகக் கண்டுபிடித்த ஏதும் கண்டுபிடிப்புகளைப் பற்றித் தெரியுமா? இதற்குரிய பதிலை மட்டுமில்லை, எனது சிறு கட்டுரை பற்றிய அபிப்பிராயத்தையும் எனக்குக் கண்டிப்பாக அறியத் தாருங்கள்!

**அது வரை தொடர்ந்தும் உங்கள்**
**அன்பையும், ஆதரவையும்**
**எதிர்பார்க்கும், உங்கள்**

**SciNirosh**
**(Dr. Niroshan Thillainathan)**





Jaffna Bazar
Jaffna Bazar
2020 ஆண்டுக்கான
புத்தம் புது டிசைன்களை
வாங்கி மகிழுங்கள்!
உங்கள் இல்லத்திற்கு தேவையான
அனைத்து மளிகைப்பொருட்களும்
பசுமையான மரக்கறி மற்றும்
கடல் உணவு வகைகளும்
KADHIR
Laila
Basmati Rice
Jaffna Bazar, Kaiser Straße.49 ,
69329 Frankfurt Main
Tel: 069 25 62 6353 \ 0049 69 25626353
0049 179 4792961 \ 0049 151 71520425

# You can Simply be a Heroine/Hero



Everyone likes the hero/heroine in the films. All the people have a unique, specific, favourite character as a role model in their life. They praise and celebrate their heroes‘ good deeds and they want to become like them. Also, majority of the people around the world help each other on request or when they identify the need for help. This leads to the formation of many service organizations all over the world. Some of these formal systems are based on providing aid from the case scenario to reach hospital, poverty relief, child protection, human rights, mental health services etc.

If you ever find yourself in a situation which requires you to be the heroine/hero? would you know what to do? Here are some reasons why it is good to seek The Red Cross.

The Red Cross is an international organization concerned with the elimination of human suffering and the promotion of public health; the world-recognized symbols of kindness and absolute neutrality are the Red Cross, the Red Crescent, and the Red Crystal flags and emblems. The Red Cross will help people, their pets and home for common emergencies and natural disasters.

The first Red Cross & Red Crescent Day was first celebrated in 1948. This event is supported by the International Red Cross and Red Crescent Movement; a humanitarian movement which contains the goal to protect peoples‘ lives and their health and prevent from suffering. It takes pride in helping others without having any discrimination.

The Red Cross makes difference by raising awareness for the plight of others. Many people are simply refused to think about the third-world countries. The people living in those countries do not get the level of attention they deserve. As a result of it the help that they need is not available. People who are malnourished, ill, or who need medication have no way to contact officials if the Red Cross does not mediate. The red cross volunteers provide immediate help on the front lines. Injured and whoever need more medicinal needs can be transported to hospital for more help. Life-saving actions can give a critically injured person a chance at survival.

The Red Cross has worked wonders over the years, and it continues to prove that it is one of the most influential humanitarian organizations in existence. Those who work with them understand that it is their mission to help people during their ultimate time of need. What everyone needs to understand is that they offer many ways to get the proper training so that the trained people can be a life saver if needed.

History of Red Cross & Red Crescent Day

Prior to this observance and following the end of the First World War, there had been an initiative known as the ‘Red Cross Truce‘. At the beginning, this was a three-day truce in former Czechoslovakia which took place during Easter time. At that time, there was consensus that people wanted peace following years of fighting. The Red Cross Truce led the way for a global peace initiative to be introduced. After the Second World War, and following approval by the Red Cross Executive Committee, the proposal for a worldwide peace day was accepted. The first Red Cross & Red Crescent Day was held in 1948 on the 8th of May. This date coincides with the birthday of Henry Dunant, the founder of the Red Cross. Each year, Red Cross & Red Crescent Day is supported by Red Cross organizations around the world.



Bavvatharani R
Nallur

The Seven Main Principles of Red Cross Society

1. Humanity: The main aim is to protect the life, health and to ensure respect for every human being. It promotes mutual understanding, friendship, and cooperation amongst all peoples.

2. Impartiality: No discrimination should be made based on nationally, race, religious beliefs, class or political opinions. The first and foremost motive is to help the people solely based on their needs and to give priority to the most urgent cases in distress.

3. Neutrality: The main purpose of this principle is to keep everyone neutral in providing help and the movement should not be affected by political, racial, religious or ideological controversies.

4. Independence: We all know that this movement is independent. The National Societies, while auxiliaries in the humanitarian services of their governments and subject to the laws of their respective countries, must always maintain their autonomy so that they may always be able to act in accordance with the principles of the movement.

5. Voluntary Service: It is voluntary relief movement not prompted in any manner by desire for gain.

6. Unity: This organisation must carry on its humanitarian work throughout its territory.

7. Universality: The International Red Cross and Red Crescent Movement, in which all societies and people have equal status and share equal liabilities and duties in helping each other, is worldwide.

The Red Cross, here with a huge desire to bring support without any discrimination to the wounded. The work of Red Cross is also to provide first aid, emergency response, health and social care, preparing for disasters, refugee services and help people in finding missing families. In fact, during the times of war, Red Cross helps to protect people in armed conflict. There are several ways in which people are encouraged to support Red Cross and donate blood.

In the small country Sri Lanka, the Intention of Sri Lankan Red Cross (SLRCS) is to ensure that all activities, projects and

Continu/ page28








# Toilet paper கோட்டை மக்களை கோரோனாவிடம் இருந்து காக்குமா?

ராம்.பரமானந்தன்

இந்தக் கட்டுரையை நான் எழுதும் போது, ஏறத்தாள 18பாகை. சூரியன் பிரகாசமாய் உதிக்க, அம்மாவின் தோட்டத்தில், ஒரு கதிரையைப்போட்டு இனியதொரு பொன்மாலைப்பொழுதில் மடிக்கணினியில் எனது சிந்தனைகளைப் பதிக்கிறேன். வானிலை இப்படி அழகாக இருந்தாலும், காலத்தின் நிலை அகோரமாகவே உள்ளது. மீனுக்குள் தோன்றிய ஒரு வைரஸ், மனித இனத்தையே மூழ்கிவைத் திருப்பதை அதிகம் காண்பது சூப்பர்மார்க்கட்டில் (Supermarket). காலை தொலைக்காட்சியில் கண்டதை மதியம் சமைக்கவேண்டும் என்றால், எந்தப் பொருளையும் தாராளமாக பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்த தேசத்தில், இன்று சவற்காரக்கட்டி தங்கக்கட்டியின் மதிப்புடன் பராமரிக்கப்படுகிறது. மா, அரிசி, நூடில் இருந்த தட்டுகளில் உடைந்த பக்கட்டால் கொட்டிவிழுந்த மிச்சங்களே சிந்தி உள்ளன. ஐரோப்பிய நாடுகள் இந்த அபோகலிப்டிக் கான (apocalyptic) நிலைமைக்கு வந்த காரணம் என்ன?

தாராளத்தைக் கடைப்பிடிக்க மனிதர்கள் நாம் போகும் வழிகள், எம்மை பகுத்தறிவின் எல்லைகளிற்கு கொண்டுசெல்கின்றன. Toilet-Paper இல் கோட்டைகட்டி அதற்குள் கோரோனாவிடம் இருந்து பாதுகாப்பு பெறமுடியாது. வீட்டில் இருந்து நாட்டின் பாதுகாப்பைக் பேணவும் என அரசாங்கம் சொன்னாலும்கூட சொகுசான வாழ்வுமுறை மாறிடக்கூடாதென, பல்லை நெருமிய வண்ணம் சூப்பர்மார்க்கட்களிற்குல் ஓட்டப் பந்தயங்கள். நான் கிருமி காவியாக இருந்து, எவருக்கும் ஒரு முதலாம் உலகநாட்டின் அரசாங்கம், தனது மக்களை அன்றாட தேவைக்கான பொருட்களை வாங்கமுடியாத நிலைக்குத் தள்ளுமா? தாள் உற்பத்தியில் இருந்து பால் உற்பத்தி வரை, மக்களுக்கு தேவையான பொருட்களை தங்களால் தரமுடியும் என நிர்ணயித்ததின் பின்னும் கடைகளில் தட்டுக்கள் ஏன் காலியாக உள்ளது?

சமூகவலைகளில் காலியான தட்டுக்களை பகிர்ந்து கொள்ள, பார்ப்பவர் மனங்களில் எனக்கு மாவும் சீனியும் இல்லாமல் போய்விடுமோ என்ற பயம் நுரைக்கிறது. வீட்டில் இருந்த படி நாட்டின் அபாயத்தை குறைக்க முடியாது. ஆகவே எடுக்கக்கூடிய ஒரே முயற்சி என்னவென்றால், ஒரு போது நான் அடைக்கப்படுவேனாக இருப்பின், என்னிடம் தேவையான பொருட்கள் உள்ளன, என மனம் ஆறுதலடையும்வரை பொருட்களை அடுக்குவதே. நெருக்கடியின் முடிவு எப்போ என அறியாமல் எவ்வளவுதான் அடுக்குவது? புரியாத சக்கரத்தில் கால் வைத்த மக்கள் எங்கும்.

ஒருவர் கட்டுக்கட்டாக பொருட்களை வேண்டாவிடினும், ஒவ்வொருத்தரும் கொஞ்சம் மேலதிகமாக கொள்வனவு செய்தால் போதும், காலியான தட்டைப் பார்த்து அடுத்தவர் பயம் வந்து வேறு கடைக்கு ஓட. அங்கே அப்பொருள் கூட இருந்தால், அதில் அளவுக்கு மிஞ்சி எடுத்து, அடுத்தவருக்கு இல்லாமற்செய்து, நாட்டையே பாவனைப் பொருட்களுக்கான சமரில் இறக்குவதற்கு. மற்றவர்கள் ஒரு பொருளை தொடர்ந்து நாடி தங்களை பாதுகாத்துக் கொண்டால், எனக்கு மிச்சம் இருக்காதோ என பயப்படும் இப்பயத்தையே, வியாபர நிபுணர்கள் "இது தான் கடைசிப் பிரயாணச்சீட்டு, இதுவே கடைசி கறித்தூள் பக்கேட்! என இணையத்தளத்தில் இருந்து ஹம் கோவில் அங்காடித்தெருவரை உபயோகிக்கின்றனர். எதுவோ ஒன்று அரிதாக இருந்தால், அதன் மதிப்பும், எமக்குத் தேவையெனப்படுவதும் அதிகரித்துக்கொண்டு போகும் என உளவியல் நிபுணர்கள் கூறுகின்றனர். அதைவிட நான் சிறிய அளவில் பொருட்களை வாங்கிச்செல்ல, எனக்கு பக்கத்தில் ஒருவர் பல மடங்காக பொருட்களை கொள்வனவு செய்யும்போது, போட்டியும் பொறாமையும், என்னைவிட இவர் நெருக்கடிக்கு சிறப்பாக தயார் செய்கிறாரோ? என்ற பயத்தினாலேயே, காலியாகின்றன கடைகளில் தட்டுக்கள்.





ஏன் உணவுப்பண்டங்களில் இந்தச் சமர்? இந்த உயிராபத்தான நிலையில், எனது வாழ்வை சிறப்பிக்க சினிமா, Club, Pub, Gym என போகமுடியாததை ஏற்றுக்கொண்டாலும், வாயில் வைக்க சாப்பாடு இல்லாமல் போய்விட்டால் அந்த வேதனை தாங்கமுடியாது. காரணம் உண்பதும், கழிப்பறைக்குச் செல்வதும், அடிப்படையானவையாக இருந்தாலும், அங்கே ஏற்படும் தட்டுப்பாடுகளும், பிரச்சனைகளும் அந்தரங்கமானவை. என் வீட்டில் Toilet Paper இல்லை, கடையில் எனக்கு கிடைக்கவில்லை எனக்குத் தரமுடியுமா என பக்கத்து வீட்டாரிடம் சுலபமாக கேட்டிட முடியுமா? இதனால் தான் உணவுப்பண்டங்களும் Toilet பேப்பரும் தன் மானத்தை காக்க இத்தகைய நம்பமுடியாத முறையில் கொள்வனவு செய்யப்படுகின்றன. தமிழர் நாம், வெள்ளையர்களிடம் கழிவறைக்கு Toiletpaper கோட்டை வேண்டாம், நீர்க்குவளையே போதும் என, இனி குடுதூணீனு மூலம் தான் உணர்த்தலாம்.

உலகில் நிசப்தம் கூடும் நொடியில், சகலதும் உண்டு என்ற நிம்மதியுடன் வீட்டில் இருக்கவேண்டும் என்பதற்காக நிம்மதியின்றி, கடைகடையாக மக்கள் ஓடிக் கொண்டே இருக்கின்றனர். தப்பிக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தினாலே நான் கொள்வனவு செய்வது, ஏனையவர்கள் வாழ்க்கையிலும், ஆரோக்கியத்திலும் எந்த முறையில் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை எண்ண இடமில்லாது உள்ளது.

நான் மட்டும் நிலைத்தால் சரி என்ற சுயநலமான பயம், வைரஸ் தாக்குதல்களில் தொடங்கி சமூக சமாதானத்தின் பல அம்சங்களிளும் மனிதத்தின் சுயரூபத்தை காட்டுகிறது. தனிப்பட்ட வாழ்க்கை சிறப்பாக இருந்திடாது என்ற பயம் பத்தவைக்கும் கோபத் தீயில் இன்று நாம் புகலிடம் கோரி வரும் மக்களிற்கு, நாட்டெல்லைகளைப் பூட்டி வைப்பதை பேசாமல், சிறிய குழந்தைகள் முகங்களில் கண்ணீர்வெடிகள் எறியப்படுவதைப் பார்த்துக்கொண்டு இருக்கிறோம். இன்னொருத்தனுக்கு இடம் வேண்டும் என்றால், எனக்கு இடம் குறையும். இன்னொருத்தனுக்கு அரிசி வேண்டும் என்றால், எனக்கு அரிசி குறைந்துவிடும். இன்னொருத்திக்கு சம்பளம் சமனாக கிடைக்கவேண்டும் என்றால், எனது சம்பளம் குறையவேண்டும். ஜனநாயக நாட்டின் அரசியற் பகுத்தறிவிற்கு அல்டிகளும், லிடில்களுமே ஆதாரம்.







அனைவருக்கும் எங்கள் மே தின வாழ்த்துகள்



# திருமந்திரமும் வாழ்வியலும் 49

சைவசித்தாந்த ரத்தினம் நாகேந்திம் கருணாநிதி

### அட்டமா சித்தி
### (எட்டு வகைச் சித்திகள்) - (பாகம் 4)

வசித்துவ சித்தி வளமும், வலிமையும் அடைய மேற்கொள்ள வேண்டிய மூச்சுப் பயிற்சி (பிராணாயாமம்) பற்றிக் கூறும் திருமந்திரப் பாடல் எண் 700

''ஆய்வரும் அத்தனி நாயகி தன்னுடன்
ஆய்வரு வாயு அளப்பது சொல்லிடின்
ஆய்வரும் ஐஞ்ஞூற்று முப்பதொடு ஒன்பதும்
ஆய்வரும் வாயு வனப்புள் இருந்ததே''

ஆராய்ந்து அறிவதற்கு அரியதான பராசக்தியுடன், ஆய்ந்தறியத் தக்கதான இந்தப் பிராணன் அளவு எவ்வளவு என்று கேட்டால், அது எண்ணிக்கையில் ஐந்நூற்று முப்பத்தொன்பது ஆக இருந்தால், அந்த அறிதற்கரியதான பிராணன் வளமுற்று ஒடுங்கும். சலனமற்று இருக்கும். ஒருநாளில் மனிதன் உள்ளிளுத்து வெளி விடும் மூச்சுக் காற்றின் எண்ணிக்கை 21,600. ஒரு நொடிக்கு ஆறு முறையாகின்றது. இந்த மூச்சை உள் இழுத்து, உள் நிறுத்தி, வெளி விடும் கால அளவு கூடும்போது, இந்த நொடிக்கு ஆறு முறை என்ற அளவு குறையும். இப்படி ஐந்நூற்றி முப்பத்தொன்பது, ஐம்பத்தொன்று என்ற அளவு குறையக் குறைய வசித்துவ சித்தி வளமும் வலிமையும் அடைகிறது.

அட்டமா சித்தி அடைந்த பின் என்ன நடக்கும் எனக் கூறும் பாடல் எண் 703

''ஆறது கால்கொண்டு இரதம் விளைந்திடும்
ஏழது கால்கொண்டு இரட்டி இறக்கிட
எட்டது கால்கொண்டு இடவகை ஒத்தபின்
ஒன்பது மாநிலம் ஒத்தது வாயுவே''

ஆறு ஆதாரங்களிலும், தங்கி சித்தத்துள்ளே இனிய அமுதத் துளிகளைத் துளிர்க்கச் செய்யும், ஏழு நாடிகளிலும் இடம்பெறும் பிராணனை உள்ளே இழுக்கும் அளவிற்கு, இரண்டு மடங்கான கால அளவு உள்ளே நிறுத்தப் பழகி விட்டால் (கும்பகம்), அட்டமா சித்திகளும் மனம் அடையப் பெற்ற பின்னர், உடலின் ஒன்பது மண்டலங்களிலும் வாயு அடங்கி ஒடுங்கும். (மூலாதாரம், சுவாதிட்டானம் போன்ற ஆறு ஆதாரங்கள். இடகலை, பிங்கலை போன்ற ஏழு நாடிகள். அணிமா, மகிமா முதலான எட்டுச் சித்திகள். நீர், வாயு என ஒன்பது மண்டலங்கள்.)

அட்டமா சித்தி பெற்றோர் பர ஒளியை தன்னுள்ளே காண்பர் எனக் கூறும் திருமந்திரப் பாடல் எண் 689

''தன்மைய தாகத் தழைத்த பகலவன்
மென்மைய தாகிய மெய்பொருள் கண்டிடின்
பொன்மை யதாகப் புலன்களும் போயிட
நன்மைய தாகிய நற்கொடி காணுமே''

தன்னுள் முயன்ற தவயோகத்தில் சிறந்து விளங்கும் ஒளிவடிவான உடல் பெற்ற தவயோகி, மிக நுண்ணியதான உள்ளொளியை, ஆன்ம சொரூபத்தை உணர, பொன்போல் ஒளி வீசும் உடல் விளங்க, புலனிச்சை எல்லாம் விலகிப் போக, உயிர்க்கு நன்மை செய்யும் பர ஒளி யைத் தன்னுள்ளே காணுவான்.

அட்டமா சித்தி பெற்றோர் புவனமெல்லாம் போய் வரலாம் எனக் கூறும் பாடல் எண் 690

''நற்கொடி ஆகிய நாயகி தன்னுடன்
அக்கொடி ஆகம் அறிந்திடில் ஓராண்டு
பொற்கொடி ஆகிய புவனங்கள் போய்வரும்
கற்கொடி ஆகிய காமுகன் ஆமே''

நன்மை தரும் பொற்கொடி போன்ற பராசக்தி அருளால், அந்தப் பராசக்தியின் ஒளி தன்னுள் சுடர்விடுவதை உணர்ந்து ஓராண்டு தவயோகம் புரிந்தால், பொன்னொளி வீசும் உலகமெல்லாம் சென்று வரும், கல்கொடி போன்ற வலிவும், பொலிவும் கொண்ட உள்ளத்தை விரும்பி அடைவான்.

அட்டமா சித்தி பெற்றோர் உலகாளும் வல்லமை பெறலாம் எனக் கூறும் பாடல் எண் 691

'காமரு தத்துவம் ஆனது வந்தபின்
புமரு கந்தம் புவனம் அதாயிடும்
மாமரு உன்னிடை மெய்த்திடும் மான்அனாய்
நாமரு வும்ஒளி நாயகம் ஆனதே'

விரும்பியவற்றை வசியப்படுத்தித் தன் வயமாக்கும் தத்துவமாகிய வசித்துவ சித்தி கைவரப் பெற்ற பின்னர், புவில் பொருந்தி நிற்கும் வாசம் போல உலகம் அவர்களுக்கு வசப்பட்டு நிற்கும். பெரிய அருட்சக்தி நீ அடைவாய். அதன் மூலம் நினைத்த இடம் செல்லும் ஆற்றல் கைகூடும். மனம் எண்ணும்படி உலகைப் படைக்கின்ற தலைமைத் தன்மை அடைதலும் கூடும்.

அட்டமா சித்தி பெற்றோர் பேரொளியைக் காணலாம் எனக் கூறும் பாடல் எண் 692

'நாயகம் ஆகிய நல்ஒளி கண்டபின்
தாயக மாகத் தழைத்தங்கு இருந்திடும்
போயக மான புவனங்கள் கண்டபின்
பேயகம் ஆகிய பேரொளி காணுமே'

உள்ளொளியே உயிர்க்குத் தலைமையான நல்லொளி. இதனைத் தவயோகத்தால் கண்ட பிறகு, அவ்வுள்ளமே தாய்வீடாக அங்கு தங்கி அவ்வொளி பெருகிப் பரவி நிற்கும். விசாலமான வெளி உலகைக் கண்ட அந்த ஒளி இப்போது தவ முயற்சியால் தன் உள்ளுக்குள்ளேயே புகழ்ந்து பேசப்படும் பேரொளியாகிய பெருமைக்குரிய ஒளிக்காட்சியைக் கண்டு ஆனந்திக்கும்.

மூச்சுக் காற்றே பேரொளி எனக் கூறும் பாடல் எண் 693

'பேரொளி ஆகிய பெரியஅவ் எட்டையும்
பாரொளி ஆகப் பதைப்புஅறக் கண்டவன்
தாரொளி ஆகத் தரணி முழுதுமாம்
ஓர்'ஒளி ஆகிய கால்ஒளி' காணுமே'

உயிர்க்கு ஒளி தருவது போன்ற ஆற்றலுடைய பெரிய ஒளிக்கதிர்கள் அட்டமா சித்திகள் எட்டும். இதன்வழி உலகம் முழுவதும் (பாரொளியாக) தடுமாற்றமின்றி (பதைப்பற)க் கண்ட தவயோகி, இந்தப் புவுலகம் முழுவதுமே செல்லுகின்ற ஒளியாக, ஒரே ஒளியாகப் பிராணனாகிய மூச்சுக் காற்று ஒளியைக் காணுவான்.








Sari 1
Sari 1
தரமான ஆடைகள் நியாயமான
விலையில் பெற்றுக்கொள்ளலாம்
எம்மிடம் தங்க நகைகளும்
பெற்றுக்கொள்ளலாம்
Taunusstr.49, 60329 Frankfurt am Main
0152 1923 9663
Opening Hours: Mon- Sat 10.00 am- 20.00 pm
https://www.facebook.com/sari1fashionhouse


Frankfurt நகரில்...
New
ASIA LAND
Frankfurt (Main)
Hauptbahnhof
முன்பாக 50 மீற்றர்
தொலைவில்
அமைந்துள்ளது
மளிகைப்பொருட்கள் மற்றும்
மரக்கறி, கடலுணவுப்பொருட்கள்
அனைத்தும் என்றும் சிறந்த
விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
TAUNUSSTRASSE 49
60329 FRANKFURT
Tel: 069 23 35 35 | Fax: 069 24009760

# யேர்மனியில் வெற்றிமணி வழங்கிய சர்வதேச மகளிர்தினம் 2020







ஆண்களுக்கு பக்க பலமாக உள்ள பெண்கள்

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு புதுமைப் பெண்கள் 2020 மற்றும் -முன்னணி பின்னணி- என்னும் சிறப்பு கௌரவ நிகழ்ச்சியினையும் வெற்றி மணி நடத்தியது

வெற்றிமணி ஸ்தாபகர் மு.க.சுப்பிரமணியம் அவர்களின் பாரியாரும், தற்போது வெற்றிமணி பத்திரிகையின் ஆசிரியருமான மு.க.சு.சிவகு மாரன் அவர்களின் தாயார் நவநிதியம் சுப்பிரமணியம் அவர் களின் 100 ஆவது ஆண்டு நினைவு விழா வாகவும் இந்நிகழ்வு அமைந்திருந்தது. இவ் விழா நவநிதியம் அரங்கில் மிகச்சிறப்பாக நடந்தது.

08.03.2020 அன்று கயடய ணழை மயளடிழெளவச - 42103 றுரிணீநசவயட என்னும் முகவரி யில் 15.00 மணியளவில் மங்கள விளக்கேற்றலுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. ஆடல், பாடல் நிகழ்ச்சிகள் அனைத்தும் மகளிர் பங்களிப்புடன் நிறைந்திருந்த துடன் மேடை முழுவதும் பெண்கள் அணி திரண்டிருந் தமை கண்கொள்ளாக் காட் சியாகவே இருந்தது. ஒரே ஒரு ஆணாக நிமலன் சத்திய குமார் அவர்கள் தாயின் சி றப்பை ஒரு ஆண் வெளிப் படுத்துவதாக ஒரு நடனம் தந்திருந்தார்.



இந்நிகழ்ச்சிக்கு பிரதம விருந்தினராக பன்னாட்டு தமிழ் மரபு அறக்கட்டளையின் தலைவராகவும், தமிழியல் தொடர்பான பண்டைய தமிழ் ஆவணங் களின் இணைய மின்னாக்கப் பணிகளின் முன்னோ டியாகவும் விளங்கும் டாக்டர்.சுபாஷினி வுடக அவர்கள் கலந்து சிறப்பித்திருந்தார். வர வேற்புரையை றெஜினா தர்மராஜா அவர்களும் சமர்ப்பண உரையை அயர்லாந்திலிருந்து வருகை தந்தி ருந்த ஜெயநிதி நாவரசன் அவர்களும் வழங்கினர். நவநிதியம் அரங்கில் திருமதி. சந்திரகௌரி சிவபாலன்( கௌசி) அவர்களின் நான் பேசும் இலக்கியம் (கட்டுரைத் தொகுப்பு) பொலிகையூர் ரேகா அவர்களின் நினைவுகள் துணையாக (கவிதை நூல்)என்னும் இரண்டு நூல் கள் வெற்றிமணி வெளியீடாக வெளிவந்தன.

யேர்மனியில் இளம் சாதனைப் பெண் களாக திருமதி. ஜொஸ்லினி செல் வரெட்ணம், திரு மதி.நிலக்ஷி அகல்யா தயாநிதி, செல்வி.அபீரா வசந்தராஜா, செல்வி. கார்த்தனா தனபாலசி ங்கம் ஆகியோரை வெற்றிமணி கௌரவித் தது.

இந்நிகழ்வில் முக்கிய நிகழ்வாக முன்னணி, பின்னணி என்னும் நிகழ்வு இடம்பெற்றது. தயா ரிப்பு உதவி திருமதி. கலைநிதி.சபேசன்,பெண் ணின் முன்னேற்றத்திற்குக் காரணமான ஆணும், ஆணின் முன்னேற்றத்திற்குக் காரண மான பெண்ணும் என்ற கருத்தில் கௌரவிப்பு நிகழ்வு நடைபெற்றது. பெண்களின் வளர்ச்சி க்கு பக்கபலமாக உள்ள ஆண்கள்:

01. முன்னணியின் பின்னணி
திரு சத்தியகுமார் சத்தியசீலன்
திருமதி றெஜினி சத்தியகுமார்

02. முன்னணியின் பின்னணி
திரு பெரியதம்பி தெய்வேந்திரம்
திருமதி இந்து தெய்வேந்திரம்

03.முன்னணியின் பின்னணி
திரு சிங்காரம் சிவபாலன்
திருமதி. சந்திரகௌரி சிவபாலன்(கௌசி)

04. முன்னணியின் பின்னணி
திரு. சின்னத்துரை.சிவநாதன்
திருமதி. நகுலா சிவநாதன்.

**ஆண்களின் வளர்ச்சிக்கு பக்கபலமாக உள்ள பெண்கள்:**

01. முன்னணியின் பின்னணி
திருமதி லைலா முருகதாசன்
திரு ஏலையா க.முருகதாசன்

02. முன்னணியின் பின்னணி
திருமதி பத்மசோதி ரவீந்திரன்
திரு தர்மலிங்கம் ரவீந்திரன்

03.திருமதி ராஜேஸ்வரி சிவராசா
திரு.வைரமுத்து சிவராசா.
முன்னணியின் பின்னணி
04 திருமதி புஸ்பமலர் நந்தகுமாரன்
திரு பாலகிருஸ்ணன் நந்தகுமாரன்

26 ஆம் பக்கம் பார்க்க...




# 14 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

## திருமதி ஞானேஸ்வரி சிவஞானசுந்தரம்

**தோற்றம்:- 25.09.1942 மறைவு:- 09.05.2006**

பதின்னான்கு ஆண்டுகள் சென்றாலும் தினம் உன் நினைவு மட்டும் என்றும் எம்முடனேயே அம்மா என்றும் அன்பே என்றும் சொல்ல நீயில்லை! உன் நினைவால் வாடி வதங்குகின்றோம். இதயத்தில் உன்னால் விதைக்கப்பட்ட அன்புகள் இப்போ செழித்து பூத்து குலுங்குகின்றன. நினைவெல்லாம் நீயே தாயே! என்றும் உன்னை மறக்காமல் வாடும் அன்புக் கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தகவல்: சு.சிவஞானசுந்தரம் யேர்மனி டோட்முண்ட் 0176 69 366 433



பெண்களுக்கு பக்க பலமாக உள்ள ஆண்கள்



25 ஆம் பக்கத் தொடர்ச்சி...

சொல்லுங்கள் வெல்லுங்கள் என்னும் நிகழ்வில் சீட்டிழுப்பின் மூலம் தெரிவான பெண்களுக்கு புடவை விலையைக் கண்டுபிடிக்கும்படிக் கேட்டு சரியான விலை கூறிய ஒவ்வொருவருக்கும் புடவைகள் பரிசாக வழங்கப்பட்டன. இதற்குப் பிரபலமான வியாபார ஸ்தாபனங்கள் அனுசரணை வழங்கியிருந்தார்கள்.


பரதநாட்டியங்களாக மகளிர்தினத்தில் முத்திரை பதிக்கும் வண்ணம், ஆடற்கலாலயம், நிருத்திய நாட்டியாலயம், சத்திய நிருத்திய ஸ்தான, டோட்முண்ட் தமிழர் அரங்கம் கலைக்கூடம், பார்வதி நடன ஆலயம் ஆகிய நடனக்கல்லூரிகளின்;, மாணவர்கள் சிறப்புற நடனம் புரிந்தனர்.





இந்நிகழ்வில் சஞ்சே சிவகுமாரன் அவர்களின் நெறியாள்கையிலும் இசையமைப்பிலும் அவர் பாடி தயாரிக்கப்பட்ட 3 பாடல்காட்சிகளும், நெடுந்தீவு முகிலன் அவர்களின் கதை, நெறியாள்கையில் தயாரிக்கப்பட்ட பாற்காரன் என்னும் குறுந்திரைப்படமும், வி.சபேசன் அவர்களின் கதை, நெறியாள்கையில் தயாரிக்கப்பட்ட துணை என்னும் குறுந்திரைப்படமும் காட்சிப்படுத்தப்பட்டது.

இந்நிகழ்வுகளை அபிரா, வித்தியா, என்னும் இரண்டு பெண்களும் தொகுத்து வழங்கியிருந்தார்கள். இறுதியில் இந்நிகழ்வுக்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவரையும் மேடைக்கு அழைத்து வெற்றிமணி ஆசிரியர் மு.க.சு.சிவகுமாரன் அவர்கள் நன்றி கூறியதுடன் தன்னுடைய நன்றியுரையைச் சிறப்பாக வழங்கினார். ஹொரொனா வைரசின் அச்சுறுத்தலையும், வீச்சோடு பரவிய பல வதந்திகளையும் மீறி இந்நிகழ்வு மிகச்சிறப்பாக நடைபெற்றுப் பலரின் ஆதரவுடன் முடிவுபெற்றது.



இவ்விழா சிறப்புற திரு.சி.சக்திவேல்,செல்வன் சிவ.வினோபன், திரு.கோபிநாத், திருமதி.ஜெயா.சக்திவேல்.திருமதி. கலைநிதி.சபேசன், கீர்த்திகா,ஆகியோர் அரங்கை சிறப்பாக நிர்வாகித்தனர்.

படப்பிடிப்பு:- AKR VISUALIZERS Photography & Cinematography






அனைவருக்கும் எங்கள் மே தின வாழ்த்துகள்

**கொரோனா மூன்றாவது உலகப் போருக்கு சமன்! அந்த அளவு உலகைத் தாக்குகின்றது. இந்த வைரஸ் தொற்றிவிட்டது என்று தெரிந்து கொள்ள சில அறிகுறிகள்:**

# கொரோனாவா!!! முதலில் அச்சம் தவிர்!



தொற்றாது உங்களைப் பாது காப்பது எப்படி! முதலில் அச்சம் தவிருங்கள். இது காற்றில் பரவும் நோய்யல்ல. தொட்டால் மட்டுமே தொற்றிக்கொள்ளும்,அதனையும் எதிர்கொள்ள பல வழிகள் உண்டு.

சிவஜெனனி

உலகத்தையே ஆட்டிப்படைக்கும் இந்த கொரோனா வைரஸ் அடுத்த 3வது உலக போருக்கு சமம். இந்த வைரஸ் முதல் முறையாக சீனாவில் உள்ள வூகான் நகரில் 2019 மார்கழி மாதம் அடையாளம் கண்டுபிடிக்கப் பட்டது.

ஆரம்பத்தில் இந்த வியாதிக்கு காரணம் பாம்புகள் என்று தான் கூறப்பட்டு வந்தது. ஆனால் வேறு சில நிபுணர்கள் இதன் காரணம் வவ்வால்கள் என்று கூறியுள்ளார்கள்.



**சிவஜெனனி BSc (Hons Pharmaceutical science)**

இந்த வைரசை இப்போது Covid-19 என்று பெயரிடப் பட்டுள்ளது. வூகானில் உள்ள அசைவ உணவுகளின் சந்தையில் பாதிக்கப்பட்ட உணவுகளிடம் இருந்து பரவி இருப்பதாக சீனா அதிகாரிகளால் நம்பப்படுகிறது. விலங்குகளில் இருந்து மனிதர்களுக்கு இது சுலபமாகப் பரவ வாய்ப்பிருக்கிறது.

**இந்த வைரஸ் தொற்றிவிட்டது என்று தெரிந்து கொள்ள சில அறிகுறிகள்:**

அதாவது முக்கால் நீர் வடிதல் இதன் அறிகுறி அல்ல பலர் அது அறிகுறி என்று தவறாக புரிந்து கொண்டு இருக்கிறார்கள்.

இதற்கு முக்கிய அறிகுறிகள் என்னவென்றால், இந்த வைரஸ் தொற்றியபின் 3-4 நாட்களில் தொண்டையைத்தான் முதலில் தொற்றுகிறது. இதன் விளைவு தொண்டை வலி அதிகமாக இருக்கும். இதன் பின் நுரையீரலை சென்றடைந்து நிமோனியாவாக்குகிறது. இவை 5-6வது நாள் நடைபெறுகிறது. நிமோனியாவுடன் உடல் வெப்பமும் அதிகமாகிறதோடு சுவாசிப்பதும் கடினமாகிறது. மூக்கடைத்தல் எமக்கு வரும் சதாரண மூக்கடைப்பு அல்ல, இது தண்ணீருக்குள் மூழ்கும் போது ஏற்படும் மூச்சுத்திணறல் போன்றது. இது போன்ற நிலை ஏற்படும் போது உடனடியாக மருத்துவரை தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.

இந்த வைரஸ் வெப்பத்தில் உயிர் வாழாது, இது 30-35 degrees சில் உயிர் இழந்துவிடும். ஆடிகாயால் தான் சுடு நீர் அருந்துவது மிகவும் நன்மை தரும். இது வைரசை முடியும் வரையும் அழித்து விடும்.

வைரஸ் metal (உலோகம்) மீது விழுந்தால் 12 மணித்தியாலங்கள் செயல்பாட்டுடன் இருக்கும். ஆகையால் இவற்றில் உங்கள் கைகள் பட்டால் 20 seconds நன்றாக கைகளை கழுவுங்கள். இதே போல் வைரஸ் துணிகளில் பட்டால் 6-12 மணித்தியாலங்கள் செயல்பாட்டுடன் இருக்கும், துணிகளை நாம் வழமை போல தோய்த்து எடுத்து காயவிட்டால் செயல் இழந்து விடும்.

Covid-19 என அழைக்கப்படும் இந்த வைரஸ் தொற்றுவது எப்படி என்றால் பொது இடங்களில் உள்ள பொருட்களை கைகளால் தொட்டுவிட்டு நாம் எமது கண்களை தொடுவது, கசக்குவது,மூக்கை தொடுவது அல்லது வாய்க்குள் விரலை வைப்பதன் மூலம் இந்த வைரஸ் எமக்குள் நுழைகிறது.

ஆகையால் கைகளை நன்கு அலசிக் கழுவவும். Covid-19 எமது கைகளில் 5-10 நிமிடங்கள் மட்டுமே உயிர் வாழ முடியும். ஆனால் அந்த 5-10 நிமிடங்களுக்குள் நீங்கள் உங்கள் முகத்தை தொடாமல் இருக்க வேண்டும்.

யாரேனும் தும்மினாலோ அல்லது இருமினாலோ 3அடி தள்ளியே நில்லுங்கள். இந்த வைரஸ் அதிகம் தாக்குவது 60 வயதிற்கு மேற்பட்டவர்களையும், நோய் எதிர்ப்பு சக்தி இல்லாதவர்களையும் மற்றும் இதயநோய்கள், சக்கரைவியாதி,அதிக இரத்த அழுத்தம், புற்றுநோய், சிறுநீரக நோய்,சுவாசப்பை நோய்கள் என இன்னும் பலவிதமான நோய்கள்.

சிறுவர்களை இந்த வைரஸ் தாக்கியதாக ஒரு புள்ளிவிபரங்களும் தெரிவிக்கவில்லை. என்றாலும் அவர்களும் அடிக்கடி கைகளை கழுவுவது நல்லது ஏன் என்றால் அவர் காவிகளாக இருக்கலாம்.

மேலே குறிப்பிட்டோர் பொது இடங்களுக்கு போவதை தவிர்ப்பது நல்லது. அப்படி போக வேண்டிய நிலை ஏற்ப்பட்டால் கைகளை மேலே கூறியதைப் பின்பற்றவும்.

சுருங்கச் சொல்வதானால் நாம் தாயகத்தில் வாழ்ந்தபோது வெளியே சென்றுவிட்டு வீடு திரும்பினால், வீட்டுக்குள் வரும்போது கால் கை கழுவி உள்ளே வருவதும், ஒருவரைக் கண்டால் கைகொடுக்காது வணக்கம் சொன்ன மாண்பும், இதுபோன்ற எமது மூதாதையர் கடைப்பிடித்த பல சுகாதார வாழ்வை தொடர்ந்தால் போதும், அச்சம் தவிர்க்கலாம்.






அனைவருக்கும் எங்கள் மே தின வாழ்த்துகள்

03 ஆம் பக்கத் தொடர்ச்சி...

வந்துவிட்டதாகக் காட்டிக்கொள்வதற்காக அரச தரப்பால் மேற்கொள்ளப்பட்ட முயற்சி வெற்றிபெறவில்லை. எதிர்பார்த்ததைவிட கடந்த வாரத்தில் கொரோனா தொற்றாளர்களின் தொகை வேகமாக அதிகரித்தமையைக் காண முடிந்தது. பல இடங்களில் ஊரடங்கைத் தளர்த்தியமை கூட கடுமையான விமர்சனங்களுக்கு உள்ளாகியிருந்தது.

பொதுத் தேர்தல் ஜூன் 20 இல் நடைபெறும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய இவ்வார முற்பகுதியில் அறிவித்திருந்தாலும், பின்னர் அந்தத் திகதி மேலும் தாமதமடையலாம் எனக் குறிப்பிட்டிருக்கின்றார். அவரது பிந்திய அறிவிப்புக்கு இரண்டு காரணங்கள் இருந்தன. ஜூன் 20 என அவர் திகதி குறிப்பிட்டிருந்தமையை எதிர்க்கட்சிகள் அனைத்தும் கடுமையாக விமர்சித்திருந்தன. அதனைவிட கொரோனா அச்சுறுத்தலும் தீவிமடைந்தது. இதற்கும் மேலாக தேர்தல் ஆணைக்குழுவிலும் தேர்தல் தினத்தை நிர்ணயிப்பதில் முரண்பாடுகள் ஏற்பட்டது. தேர்தல் எப்போது நடைபெறும் என்பதைச் சொல்ல முடியாத ஒரு நிலை இவற்றால் ஏற்பட்டது. இந்த நிலையில், ஜூன் 20 இல் தேர்தல் நடைபெறாது என்பதை அறிவிக்க வேண்டிய நிர்ப்பந்தம் தேர்தல் ஆணையாளருக்கு ஏற்பட்டது.



கொரோனா வைரஸ் உருவாக்கியிருக்கும் இந்த அரசியல் அரசியலமைப்பு சர்ச்சை ஜனநாயக ஆட்சியையும் கேள்விக்குறியாக்கியிருக்கின்றது. இவ்வார ஆரம்பத்தில் இடம்பெற்ற தேர்தல் ஆணைக்குழுவுக்கும் கட்சித் தலைவர்களுக்கும் இடையிலான கூட்டத்திலும் இது குறித்து விரிவாக ஆராயப்பட்டிருந்தது. அப்போது காராசாரமான விவாதங்களும் இடம்பெற்றிருக்கின்றன. தேர்தல் தொடர்பில் ஒரு அரசியலமைப்புச் சர்ச்சை உருவாகியிருப்பது தெளிவாகத் தெரிகின்றது. பொதுத் தேர்தலை நடத்துவது என்பதைவிட கலைக்கப்பட்ட பாராளுமன்றத்தை மீண்டும் கூட்ட முடியுமா? என்ற சர்ச்சைதான் இப்போது தீவிரமடைந்திருக்கின்றது. இதற்கான பதிலை அல்லது விளக்கத்தைக் கூறக்கூடியது உயர் நீதிமன்றம் மட்டும்தான்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மட்டுமன்றி, அவருக்கு முன்னர் ஜனாதிபதிகளாக இருந்தவர்களும் இவ்வாறான சர்ச்சைகள் உருவாகும் போது உயர் நீதிமன்றத்தின் வியாக்கியானத்தைக் கோருவது வழமை. இப்போதும், உயர் நீதிமன்றத்தின் கருத்தைக் கோருமாறு தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய, ஜனாதிபதிக்கு பரிந்துரை செய்திருந்தார். அதனைக் கவனத்திற்கெள்ளப்போவதில்லை எனக் குறிப்பிடும் ஜனாதிபதி, பாராளுமன்றத்தை மீளக்கூட்டுவதற்கு அரசியலமைப்பில் அதிகாரம் தரப்படவில்லை என மகாசங்கத்தினருக்கு விளக்கமளித்திருக்கின்றார். இதனைச் சொல்லும் ஜனாதிபதி உயர் நீதிமன்றத்தின் விளக்கத்தைக் கேட்டு எதிரணியினரை வாயடைக்கச் செய்யலாமே? அதற்கு ஏன் தயங்குகின்றார்.

அரசியலமைப்பின்படி பாராளுமன்றம் கலைக்கப்பட்டு மூன்று மாத காலத்துக்குள், புதிய பாராளுமன்றம் கூட்டப்பட வேண்டும். அதனால்தான் ஜூன் 2 ஆம் திகதிக்கு முன்னர் புதிய பாராளுமன்றம் கூட்டப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது. மே மாத இறுதிக்குள் தேர்தலை நடத்துவதற்கு அரச தரப்பு அதனால்தான் அவசரப்பட்டது என்பது இரகசியமானதல்ல. இப்போது, அவ்வாறு நடத்த முடியாது என்பது உறுதியாகியிருப்பதுடன், அதற்குப் பிந்திய திகதி ஒன்றை தேர்தல் ஆணையம் அறிவித்தது. இந்த அறிவித்தலின் மூலம், பாராளுமன்றத்தைக் கலைப்பதென ஜனாதிபதி மார்ச் 2 ஆம் திகதி வெளியிட்ட அறிவிப்பு வறிதாகிவிட்டதாக எதிர்க்கட்சிகள் சொல்கின்றன. அதாவது முன்னாள் சபாநாயகரால் பாராளுமன்றத்தைக் கூட்ட முடியும் என்ற கருத்தை அவர்கள் முன்வைக்கின்றார்கள்.

முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய அந்தக் கருத்தை நிராகரிக்கவில்லை. ஆனால், அரசியலமைப்புச் சர்ச்சை ஒன்றை ஏற்படுத்தக்கூடாது என்பதால் அவ்வாறு தான் பாராளுமன்றத்தை மீண்டும் கூட்டுவது என்ற முடிவை எடுக்கப்போவதில்லை எனவும், நீதிமன்றம் மூலமாகவே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வைக்காண வேண்டும் எனவும் தெரிவித்திருக்கின்றார். பாராளுமன்றம் என்பது நிறைவேற்று அதிகாரங்களுக்கும், அமைச்சரவைக்கும் ஒரு காவலன். பொதுத் தேர்தலை தொடர்ந்தும் ஒத்திவைப்பது என்பது தனிமனித ஆட்சி தொடர்வதற்கும், அது சர்வாதிகாரத்தை நோக்கிச் செல்வதற்கும் வழிகோலும் என்பதே எதிர்க்கட்சிகளின் கருத்து.

கொரோனா வைரஸ் மக்களின் வாழ்க்கையை நிச்சயமற்றதாக்கியிருக்கின்றது. அந்தப் பீதியுடன் வாழும் மக்களை இந்த தேர்தல் அரசியல் கடும் விரக்திக்குள்ளாக்குகின்றது. இந்தப் பிரச்சினைக்கு சுமூகமான ஒரு தீர்வைக்கொண்டுவருவதற்கு பிரதான கட்சிகள் அனைத்தும் இணைந்து இப்போது காய் நகர்த்தியிருக்கின்றன. இதற்கு கோட்டாபய தரப்பிலிருந்து வரப்போகும் பதில் என்ன? அதில்தான் நாட்டின் எதிர்காலம் தங்கியுள்ளது.

21 Page Continu...

programmes planned and implemented in the mid to long term by the various components of the Red Cross and Red Crescent Movement are carried out in full respect of the spirit of the Seville Agreement, and the 2010 strategy for the Movement. Movement support of the SLRCS has been strengthened by the conclusion of an International Federation Status Agreement with the GoSL in 2004. The total membership 100,000. The total number of active volunteers 6,500.

Particularly in Jaffna, which is a small city, out of 15 divisional secretaries; The Red Cross has branches in 10 divisions. The Jaffna Red Cross charted in 1958 and it contains currently more than 2000 members. Usually they promote blood dona-



tions, and provide first aid services at temple festival time, schools, road races, sports and training and supporting government in disaster managements. The biggest project done by Jaffna Red Cross is Indian ocean project. They have constructed more than 4000 houses in Jaffna. They have also given their huge support during Tsunami destruction time: They constructed Hospital wards in Jaffna.

They also conduct commercial first aid training to organisations, police, MOH, PHI, auto drivers, disaster camp management, search and rescue, disaster early preparation, Tsunami mock drill. Disaster early warning requirement.

During Sri Lankan war time they got curfew pass and did ambulance services and saved many lives in risk. During extreme flooding and disaster, they conducted projects such as non-food relief, hygiene kits, kitchen set, providing house fire temporary shelter. And also extend their support to resorting families.

Today the Jaffna Red Cross is working with enthusiasm to prevent and eradicate the spreading of the pandemic of Covid-19 through awareness program, announcing the preventive methods, providing foods to the poor and needy and distributing Covid-19 disinfection kits.

Even the Jaffna Red Cross in various vulnerable conditions they generate several communities to help people suffering from disasters, they promote self-awareness and empowers youth to learn about the techniques and methods that are essential for the survival of our generation as well as next generation; think about the entire countries all around the world and it's tremendous help. Each single helping hand, we can bring a big change in the lives of people around us. Now it is your opportunity. As World Red Cross Red Crescent Day is celebrated on 8 May each year; on this month you can think about it. It is still not too late to involve or support Red cross to save the people's lives and the loved one's life and proud to be a heroine/ hero.






# இயக்குநர் சிகரம் கே.பாலசந்தர் வாழ்வும் படைப்பும்

**வெற்றிமைந்தன்**

## அபூர்வராகங்கள்

**1975**ம் ஆண்டு பாலசந்தர் இயக்கத்தில் ஒரே ஒரு திரைப்படம் தான் வெளியானது அது அபூர்வ ராகங்கள். போதும். திரையுலகிற்கு ரஜினிகாந்த் எனும் மந்திரத்தை அறிமுகம் செய்த படம். ஸ்டைல் அமுதசுரபியான ரஜினிகாந்த் வெள்ளித்திரையில் தோன்றிய அந்த ஒரு படம் போதும் பாலசந்தருக்கு 1975ல் என்பது தான் கோடிக்கணக்கான ரஜினிரசிகர்களின் குரலாய் இருக்கும்.

கமலஹாசனும், ஸ்ரீவித்யாவும் முதன்மைக் கதாபாத்திரங்களில் நடிக்க ரஜினிகாந்த் இந்தப் படத்தில் ஒரு சின்ன வேடத்தில் அறிமுகமானார். வழக்கம் போல பாலசந்தரின் பிரியத்துக்குரிய இசையமைப்பாளர் எம்.எஸ்.விஸ்வநாதனும், கவிஞர் கண்ணதாசனும் பணியாற்றினார்கள்.

ரஜினிகாந்தை பாலசந்தர் தவிர வேறு ஏதேனும் இயக்குனர் அறிமுகப்படுத்தியிருப்பார்களா என்பதே சந்தேகம் தான். அதை பாலசந்தரே ஒரு முறை இன்டியன் எக்ஸ்பிரஸ் பேட்டியில் குறிப்பிட்டார். 'அந்தக் காலத்தில் கருப்பு நிறத்தில் இருக்கும் ஒருவரை ஒரு முக்கியமான கதாபாத்திரத்தில் நடிக்க வைப்பது என்பது எந்த இயக்குனருமே நினைக்காத விஷயம். இன்றைக்கு அவருடைய நிறம் கொண்டாடப்படுகிறது'.

1973ம் ஆண்டு வெளியான 43 கேரட்ஸ் எனும் ஆங்கிலப் படத்தின் மையம் தான் அபூர்வ ராகங்கள் படத்தின் மையமும். வழக்கம் போல புயலைக் கிளப்பும் கதை. பாலசந்தர் என்றாலே ஏதோ விவகாரமான கதையா இருக்கும் எனும் பேச்சு வலுவடைந்திருந்தது. பாலசந்தரின் வித்தியாசமான கதைக்காகவே ஏகப்பட்ட ரசிகர்கள் உருவாகியிருந்தார்கள்.

கமலஹாசன் தன்னை விட அதிக வயதுடைய ஸ்ரீவித்யாவைக் காதலிக்கிறார். இருவரும் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென முடிவெடுக்கிறார்கள். கமலஹாசனின் தந்தையோ ஒரு சின்னப் பெண்ணைக் காதலிக்கிறார். அந்தப் பெண் ஸ்ரீவித்யாவின் மகள். இதென்னடா புதுக் குழப்பம் என ரசிகர்கள் குழம்பும் போது வருகிறார் ஸ்ரீவித்யாவின் கணவன், ரஜினிகாந்த் ! அதன் பின் நடந்தது என்ன என்பது தான் பாலசந்தர் பாணி அபூர்வ ராகங்கள்.

ரஜினிகாந்தை அந்தக் காட்சிக்காகத் தேர்வு செய்தது சுவாரஸ்யமான கதை. ஏற்கனவே ரஜினிகாந்தின் மேடை நாடகத்தை பாலசந்தர் பார்த்திருந்தார். அதனால் அவரை தேர்வுக்காக அழைத்திருந்தார்.



ரஜினிகாந்த் வந்தார். வந்து சிவாஜிகணேசனைப் போல நடித்துக் காண்பித்தார். பிரமாதமாக இருந்தது. ஆனால் பாலசந்தர் அவரை தேர்வு செய்யவில்லை.

'உனக்கென்று ஒரு ஸ்டைல் உண்டு, அதை எனக்குக் காட்டு. இரண்டு நாட்கள் டைம் என்றார்'. இரண்டு நாட்களுக்குப் பின் ரஜினிகாந்த் வந்தார். கையில் ஒரு சிகரெட்டை எடுத்தார். படு ஸ்டைலாக அதை வீசி உதடுகளில் கவ்வினார். அந்த ஸ்டைல் அதுவரை பாலசந்தர் பார்த்திராத புதிய ஸ்டைலாக இருந்தது.

வியந்தார். அப்படித்தான் ரஜினிகாந்தை அந்தக் கதாபாத்திரத்துக்காகத் தேர்வு செய்தார். தேர்வு செய்தபின் ''போய் தமிழ் படிச்சுட்டு வா'' என அனுப்பி வைத்தார்.ரஜினி பெங்களூர் திரும்பி நண்பர் ராஜ பகதூரிடம் விஷயத்தைச் சொன்னார். ராஜபகதூருக்கு தமிழ் நன்றாகத் தெரியும் எனவே இருவரும் தமிழிலேயே பேசிப் பேசி விரைவிலேயே தமிழைக் கற்றுக் கொண்டார் ரஜினி.

'ரஜினிகாந்தின் கதாபாத்திரம் சின்னதாக இருந்தாலும் அது ரொம்ப பவர்ஃபுல் ஆனது. கிளைமேக்ஸ் பகுதியில் வருவதால் மக்கள் அதை ஞாபகத்தில் வைத்திருப்பார்கள் என்றும் தெரியும்' என ரஜினிகாந்தின் பாத்திரத் தேர்வு குறித்து பாலசந்தர் பின்னர் குறிப்பிட்டார்.

ரஜினியின் இயற்பெயர் சிவாஜிராவ் என்பதை நான் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. ஏற்கனவே சிவாஜி என்றொரு நடிகர் இருந்ததால் இன்னொரு பெயரை வைக்க பாலசந்தர் முடிவு செய்தார். அப்போது அவருடைய நினைவுக்கு வந்தது அவருடைய மேஜர் சந்திரகாந்த் நாடகம். அதில் ஒரு கதாபாத்திரத்தின் பெயர் 'ரஜினிகாந்த்'. இனிமே உன் பெயர் 'ரஜினிகாந்த்' என்றார் பாலசந்தர். அந்த பெயர் எவ்வளவு வலிமையானது என்பது இன்றைய சினிமா ரசிகர்கள் ஒவ்வொருவரும் அறிந்ததே.

அபூர்வ ராகங்கள் படத்தில் ரஜினிகாந்த் வீட்டு கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே வருவார். அந்தக் காட்சியிலேயே ரஜினியின் வித்தியாசமான ஸ்டைலைப் படம்பிடித்திருப்பார் பாலசந்தர். 'ரஜினி சினிமா உலகுக்குள் நுழைவதை குறிப்பால் காட்டுவது தான் அந்த கதவு திறந்து உள்ளே நுழையும் காட்சி' என்றார் பாலசந்தர். இந்தப் படம் தான் கமலஹாசன் எனும் நடிகரின் புதிய பரிமாணத்தைக் காட்டியது. இந்தப் படத்துக்காக ஏழு மாதங்கள் செலவிட்டு மிருதங்கம் வாசிக்கக் கற்றுக் கொண்டார் கமலஹாசன்.

அபூர்வ ராகங்கள் தான் ஒரு உண்மையான வீட்டில் படம் பிடிக்கப்பட்ட முதல் தமிழ் படம் என்பது வியப்பாகத் தான் இருக்கும். அதுவரை வீடு என்றால் அதற்கென ஒரு செட் போடுவதே வழக்கம். இந்த படத்தில் பயன்படுத்தப்பட்ட வீடு ஏவிஎம் தயாரிப்பு நிறுவனத்தின் ஒரு மகனுடைய வீடு.

>> 30 ஆம் பக்கம் பார்க்க...

## வெற்றிமணியின் இதய அஞ்சலி



வல்லிபுரநாதர் சிவயோகநாதன்
11.04.1955 - 20.03.2020

யாழ். நாகர்கோவிலைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனி Witten ஐ வதிவிடமாகவும் கொண்ட வல்லிபுரநாதர் சிவயோகநாதன் அவர்கள் 20-03-2020 வெள்ளிக்கிழமை அன்று இயற்கை எய்தினார். அன்னார், காலஞ்சென்றவர்களான வல்லிபுரநாதர் பதஞ்சலி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற குமாரவேலு, பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும், திருமதி. இராமத்திலகம் அவர்களின் பாசமிகு பெறாமகனும்,

இந்திராதேவி(சோதி) அவர்களின் அன்புக் கணவரும், சிவகணேசன்(ஜேர்மனி- Lucky Fly), சசிரேகா(லண்டன்), சிவானுசன்(ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தில்லைநாதன், பத்மநாதன், கணேசநாதன்(இலங்கை), சிவசக்தி (ஜேர்மனி), சோதிநாதன்(டென்மார்க்), லோகநாதன்(Leeds) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், லக்ஷிகா, சுஜல், யாழினி ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவராணி, இந்தராணி, சுபாதேவி, ஜெயதேவன், நிரஞ்சினி, அகிலா, குலசிங்கம், குலராசசிங்கம், லக்குமிதேவி, குமாரகுலசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சானுகா, சனேயா, லக்சனா, அமீரா, ஏடன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக

தொடர்புகளுக்கு:-

சிவாஜி - மகன் Mobile : +491791484892
அனுசன் - மகன் Mobile: +4917662950550

**அனைவருக்கும் எங்கள் மே தின வாழ்த்துகள்**

29 ஆம் பக்கத் தொடர்ச்சி...

அதிசய ராகம் எனும் பிரபல பாடல் இந்தப் படத்தில் இடம்பெற்றது. அது வரை பாடல் காட்சிக்கு டிராலி பயன்படுத்துவதே வழக்கம். இந்தப் பாட்டில் டிராலி பயன்படுத்தப்படாமல் கேமராமேனே கேமராவை எடுத்துக் கொண்டு நடந்து நடந்து படம்பிடித்தார். ஒரு தமிழ்ப் படத்தில் இந்த முறை பயன்படுத்தப்பட்டதும் இது தான் முதன் முறை.

இசையை மையப்படுத்தி எடுக்கப்பட்டிருந்த இந்தப் படத்தில் ஒவ்வொரு கதாபாத்திரத்துக்கும் ஒவ்வொரு ராகத்தின் அடிப்படையிலான பின்னணி இசையை அமைத்து பிரமிப்பூட்டியிருந்தார் எம்.எஸ். விஸ்வநாதன். ‘ஒரு இசைக்கச்சேரி பார்த்த பிரமிப்பு’ என விகடன் பாராட்டு மழை தூவியது. ‘கவித்துவமான படம். அருமையான கதை, அழகான வசனங்கள், அட்டகாசமான இயக்கம்’ என த ஹிந்து நாளிதழ் பாராட்டியது.

பேதமில்லாமல் எல்லா பத்திரிகைகளும் கதையையும், இயக்கத்தையும், கமலஹாசன் எனும் மாபெரும் நடிகனையும் மனம் திறந்து பாராட்டின. மொத்தம் மூன்று தேசிய விருதுகளை இந்தப் படம் அள்ளியது. சிறந்த தமிழ்ப்படத்துக்கான தேசிய விருது இந்தப் படத்துக்குக் கிடைத்தது. சிறந்த ஒளிப்பதிவுக்கான விருது பி.எஸ்.லோகநாதனுக்குக் கிடைத்தது, சிறந்த பின்னணிப் பாடகிக்கான விருது வாணி ஜெயராமுக்குக் கிடைத்தது.

அபூர்வ ராகங்கள் என்றவுடன் எது நினைவுக்கு வருகிறதோ இல்லையோ, வெறும் பதினைந்து நிமிடங்கள் குடிகாரனாக வந்து தமிழ்த்திரை உலகில் ஏறக்குறைய நாற்பது ஆண்டுகளாய் பட்டையைக் கிளப்பிக் கொண்டிருக்கும் ரஜினிகாந்த் நிச்சயம் ஞாபகத்துக்கு வருவார்.



படம் தயாரான காலத்தில் ஒரு பேட்டியில் பாலசந்தர் இப்படிக் குறிப்பிட்டார். ‘ஒரு புது நடிகனை அறிமுகப்படுத்தியிருக்கேன். அவன் தமிழ்த் திரையிலகில் மிகப்பெரிய இடத்தைப் பிடிப்பான். இது நிச்சயம்’ என்றார்.

அதை மெய்ப்பிக்கும் விதமாக 1977ம் ஆண்டு ரஜினி 15 படங்களுக்கு ஒப்பந்தமாகி புதிய சாதனை படைத்தார் ! பாலசந்தர் எனும் இயக்குனரின் கணிப்பும், ஒரு நடிகன் குறித்த அவருடைய மிகத் தெளிவான தீர்க்கத் தரிசனப் பார்வையும் தான் அவரை மிகப்பெரிய வெற்றிகளுக்குக் கூட்டிச் சென்றிருக்கிறது என்று தைரியமாய்ச் சொல்லலாம்.

## மூன்று முடிச்சு

அபூர்வராகங்கள் தந்த வெற்றி அடுத்த ஆண்டு இன்னொரு நிலைக்குச் சென்றது. இந்த 1976ம் ஆண்டு தான் ‘மூன்று முடிச்சு’ திரைப்படம் வெளியானது. இந்த ஆண்டில் பாலசந்தர் இரண்டு தமிழ்ப்படங்களும், ஒரு தெலுங்கு படமும் இயக்கினார். இரண்டு தமிழ்ப் படங்களுமே வெற்றிப்




படங்களாக அமைந்தன. ஒன்று மன்மத லீலை, இன்னொன்று மூன்று முடிச்சு.

மன்மத லீலை வழக்கம்போல விமர்சனங்களுக்குள்ளான, சூப்பர் ஹிட் திரைப்படம்.இந்தத் திரைப்படம் சில முக்கியமான நடிகர்களைத் தமிழ்த் திரையுலகிற்குத் தந்தது. அதில் ஒருவர் ராதாரவி ! இன்னொருவர் ஜெயப்ரதா. ராதாரவியும், ஜெயப்ரதாவும் பின்னர் திரையுலகில் மிகப்பெரிய உயரத்தை அடைந்தார்கள்.

பெயருக்கு ஏற்றாற்போல இந்தப் படம் ஒரு பெண் பித்தனின் வாழ்க்கையைச் சொல்கிறது. காண்கின்ற பெண்களையெல்லாம் வலையில் வீழ்த்தும் கதாபாத்திரம் கமலஹாசனுடையது. அந்தப் பட்டியலில் திருமணமான பெண்களும் உண்டு. மனைவிக்கு இந்த விஷயம் தெரியவருகிறது. கணவனின் பலவீனங்களோடு அவனை ஏற்றுக் கொள்வதா ? அல்லது தனியே வாழ்வதா எனும் மனைவியின் மன ஊசலாட்டமே படம்.

பத்து ஆண்டுகளுக்குப் பிறகு வர வேண்டிய திரைப்படங்களைப் பாலசந்தர் அப்போதே எடுத்தார் என பிற்காலத்தில் பாராட்டப்பட்டார். படம் முதலில் எதிர் விமர்சனங்களைச் சந்தித்தாலும் பிறகு பரபரப்பாக ஓடி மிகப்பெரிய வசூல் வெற்றியைப் பெற்றது.

அதே ஆண்டு வெளியான இன்னொரு திரைப்படம் மூன்று முடிச்சு. கமலஹாசனும், ரஜினிகாந்தும் இணைந்து நடித்த படத்தில் ரஜினிகாந்திற்கு வில்லன் வேடம். வழக்கமான வில்லனாக இல்லாமல் ஒரு புதுவிதமான வில்லன் வேடம். ரஜினிகாந்தின் சிறந்த படங்களின் பட்டியலில் இதற்கும் ஒரு இடம் உண்டு.



# நான் ஒரு இலட்சியவாதியோ கடின உழைப்பாளியோ இல்லை



தமிழ் சினிமாவில் என்றும் இளமை நாயகி என்றால் அது நம் நதியா தான். அறிமுக திரைப் படத்தில் இருப்பதைப் போலவே இன்றும் இருப்பவர். 80 களின் நாயகிகளில் அதிக ரசிகர்களைக் கொண்ட நாயகிகளில் இவ ரும் ஒருவர். தன் முதல் திரைப் படம் மூலம் உடை அணிகளில் Trend ஐ உருவாக்கியவர் என்பது டன் நடிகர் திலகம், பத்மினி அம்மா போன்றவர்களுடன் நடித்தவர் இவர். M. குமரன் சன் ஆப் மகா லக்ஷ்மி மூலம் சினிமாவில் மீண் டும் கால்பதித்தவரை பேரானந்தத் துடன் மக்கள் கொண்டாடியதுடன் தொடர்ந்தும் அவரை திரையில் காண ஆசைக்கொண்டனர். தாமி ரபரணி, பட்டாளம், சண்டை என தொடர்ந்தும் திரைப்படங்களில் நடித்தவர் நதியா வெற்றிமணிக்கு வழங்கிய செவ்வி;

**கேள்வி:- மளையாளத்திலும் சரி தமிழிலும் சரி 'பூவேபூச்சூடவா' திரைப்படம் மாபெரும் வெற்றித் திரைப்படமாக அமைந்தது. அந்த தருணத்தை இப்போது நினைக்கும் போது எப்படியிருக்கிறது?**

**பதில்:-** மளையாளத்தில் 'பூவேபூச்சூ டவா' நடிக்கும் போது எனக்கு 18 வயது தான். சினிமா நட்சத்திரமாக எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்ற விடயம் கூட தெரி யாது. அந்த காலத்தில் திடீரென வாய்ப்பு கிடைத்து வெற்றியும் கிடைத்து விட்டது. அதனை எவ்வாறு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது கூட புரியவில்லை. அதேநேரம் நான் மும்பையில் தங்கியிருப்பதால் தொழில் ரீதி யாக படப்பிடிப்புகளுக்கு மாத்திரமே அங்கு (தென்னிந்தியா) வருவதுண்டு. மும்பையில் நான் யாரென எவருக்குமே தெரியாது. ஒரு சாதாரண நபரின் வாழ்க்கைதான் இங்கு. இத்தனை வருடகாலம் கடந்த பின்னரும் இன்றும் அந்த திரைப்படம் பேசப்படுகின்றது என்றால் என் இரசிகர்ளுக்கும், நலன் விரும் பிகளுக்குமே நன்றி கூற வேண்டும்.

**கேள்வி:- 80 களில் உங்களுடன் பணியாற்றிய சக நடிகர், நடிகைக ளின் வாரிசுகள் தற்கால சினிமாவில் பங்கெடுத்து வருகின்றனர். ரஜினி, கமல், ராதா, பிரபு, கார்த்திக் என பல பிரபலங்களின் வாரிசுகளை குறிப் பிட முடியும். அந்தவகையில் உங்கள் பிள்ளைகளையும் சினிமாவில் காண முடியுமா?**

**பதில்:-** நான் சினிமாவிற்குள் வந்ததே ஒரு விபத்துதான். என் பிள்ளைகளை பொருத் தவரையில் அவர்களுக்கு எந்தத்துறையில் ஆர்வம் இருக்கிறதோ அதற்கான வழிகாட்டல் களை நாம் வழங்குகின்றோம். அவர்களுக்கு சினிமாபற்றி எதுவுமே தெரியாது. சினிமா வட்டத்திற்குள்ளேயே அவர்கள் இல்லை. இது வரை சினிமாவிற்குள் வர ஆர்வம் காட்டவு மில்லை அவ்வாறு அவர்கள் சினிமாவிற்கள் வர விரும்பினால் அதற்கான வழிகாட்டல் களை வழங்க தயாராகவே உள்ளேன்.

**கேள்வி:- எல்லோருக்கும் நடிகர் திலகம் சிவாஜியுடன் நடிக்க வேண் டுமென்ற கனவு இருக்கும். 'அன் புள்ள அப்பா' திரைப்படம் மூலம் உங்களுக்கும் அந்த கனவு நிறை வேறியது. அந்த திரைப்படம் எப்படி உருவானது?**



**பதில்:-** அன்புள்ள அப்பா திரைப்படத் தின் கதையை இயக்குனர் கூறியபோதே இது அப்பாவிற்கும் மகளிற்கும் இடையிலான உறவை மையமாகக் கொண்ட திரைப் படம் என்று கூறினார். மற்றும் சிவாஜிசார் தான் நடிக்க போகிறார் என கூறிய போதே எனக்கும் ஒரு நல்ல கதாபாத்திரமாகவே அமையும் என நம்பிக்கையும் உற்சாகமும் தோன்றியது. ஆனால், அதற்கு முன் வரை நான் சிவாஜி சாரை பார்த்தது இல்லை. எனவே எப்படி பேசுவார், பழகுவார் என பதற்றமாகவே இருந்தது. முதல் நாள் படப் பிடிப்பின் போது இருவரும் இணைந்து ஒரு காட்சியில் நடித்தோம். காட்சியின் நிறைவில் நன்றாக நடிக்கிறாய் என ஊக்கப்படுத்தினர்.

**கேள்வி:- ராதிகா, ரேவதி, குஷ்பு என பலர் சின்னத்திரைகளிலும் தங்களை அடையாளப்படுத்திக் கொண்டி ருக்கும் நிலையில் உங்களுக்கு ஏதா வது யோசனைகள் இருக்கின்றதா?**

**பதில்:-** தொலைக்காட்சிகளில் நிறைய நிகழ்ச்சிக்காக என்னை அனுகியிருந்தனர். ஆனால், 'ஜாக்பாட்' என்ற நிகழ்ச்சியை மட்டும் இரண்டு வருடங்களாக தொகுத்து வழங்கினேன். எனக்கு அத்துறையில் ஆர் வமில்லை. அதேவேலை நிறைய நேரங்க ளையும் செலவிட வேண்டியிருப்பதனாலும் அத்துறையிலிருந்து விலகியே இருக்கிறேன்.

நான் ஒரு இலட்சியவாதியோ கடின உழைப்பாளியோ இல்லை.

**கேள்வி:- பல்வேறு மொழிகளில் நடித்துள்ளீர்கள். எந்த மொழி திரைப் படங்களில் நடிப்பது சௌகரியமாக உள்ளது?**

**பதில்:-** எனக்கு இப்போது கூட தெலுங்கு நன்றாக தெரியாது. எனவே தமிழ், மலையாள திரைப்படங்களில் நடிப்பது இல குவாக இருக்கும். ஆனால், எந்த மொழியாக இருந்தாலும் நடிப்பு ஒன்றுதான்.

**கேள்வி:- முதல் திரைப்படத்தில் அறிமுகமான நதியா போல இன்றும் கூட அதே இளைமையுடன் இருக்கி றீர்களே... இரகசியம் என்ன?**

**பதில்:-** எனது பெற்றோர்கள் கூட அவர்க ளின் வயதில் இளமையாக தெரிகின்றனர். எனவே அவ்வாறான பெற்றோர்கள் எனக்கு கிடைத்தது எனது அதிர்ஷ்டம். அதேவேளை எனது வாழ்க்கையை நான் எளிமையாகவே வைத்தக்கொள்கிறேன். கட்டுபாடுகளுடனும் நல்ல பழக்கவழக்கத்துடனும் நேர்மறையான சிந்தனையாளர்கள் மத்தியில் இருப்பது முக்கியம். மற்றும் நானும் சாப்பாடு பிரியர் தான். அதேபோல அதற்கேற்ப உடற்பயிற்சி களையும் பின்பற்றுகிறேன்.

**கேள்வி:- 80 களின் தமிழ் சினிமா வின் மிகப்பெரிய சக்திகளாக காணப்பட்டவர்கள் K.B பாலசந்தர் மற்றும் இசைஞானி இளையராஜா. அந்த பொற்காலம் பற்றி?**

**பதில்:-** என்னுடைய பல திரைப்படங்க ளுக்கு இளையராஜா சார் இசையமைத்து கொடுத்திருக்கிறார். அற்புதமான மனிதர் அவர். இப்போது கூட அவரின் பாடல்களை கேட்க ஆசையாகவுள்ளது. எந்த காலத்திற்கும் ஏற்ற இசை அவரது. அதேநேரம் ஓ.ஆபால சந்தர் அவருடனும் பணியாற்ற சந்தர்ப்பங் கள் கிடைக்க வில்லை. முதல் மளையாள திரைப்படத்திற்கான 'சிறந்த நடிகை' விருது வழங்கும் நிகழ்வில் நான் அவரை ஒருமுறை சந்தித்தேன். அதற்கு பிறகு அவரை பார்க்க கூட முடியவில்லை. அவருடன் பணியாற்ற முடியாமல் போனது வருத்தம் தான்.

**கேள்வி:- சினிமாவில் நடிகர்களுக்கு இருக்கும் நீடிய வாழ்க்கை ஏன் நடிகைகளுக்கு இருப்பதில்லை.?**

**பதில்:-** இயக்குனர், தயாரிப்பாளர், ரசிகர் கள் என இதனை யாரிடம் சொல்ல வேண்டும் என தெரியவில்லை. நம் நாட்டில் ( இந்தி யா) மட்டுமல்ல ஹொலிவூட்டிலும் கூட இந்த பிரச்சினை தான். அந்நிலை மெதுவாக மாறி வரும் என நினைக்கிறேன்.

மோகனஷாந்தி



அனைவருக்கும் எங்கள் மே தின வாழ்த்துகள்






















அனைவருக்கும் எங்கள் மே தின வாழ்த்துகள்